TAMIL NADU LEGISLATURE
9-OCT 1974
MADRAS

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1974 மார்ச் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Teachers in Kanyakumari District

* 241 Q.—THIRU M. ARUMUGASWAMI (ON BEHALF OF THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether teachers in Kanyakumari District who would have been eligible for increments for their service prior to getting their B.T. degrees under the T.C. Rules have not been given weightage for such service at the time of reorganisation of States;

(b) whether they appealed to the Director of School Education more than two years ago for the redressal of this grievance;

(c) whether orders have been passed; and

(d) if not, the reasons for the delay ?

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் பி.டி. பட்டம் பெறுவதற்கு முன்பு அவர்கள் ஆற்றிய பணிக்காக திருவாங்கூர்-கொச்சி விதிகளின் கீழ் ஊதிய உயர்வு பெறத் தகுதியுடையவர்களாக இருந்திருப்பினும், மாநிலச் சீரமைப்பின்போது அவர்கள் அவ்வாறு ஆற்றிய பணிக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லையா ?

(இ) அவர்கள் இக்குறையைச் சரி செய்யுமாறு கோரி இரண்டாண்டு களுக்கு முன்னரே பள்ளிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பித்துக் கொண் டனரா ?

(உ) இது குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா ?

(எ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டபோது கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர்கள் தாங்கள் திருவாங்கூர்-கொச்சி சம்பள விகிதத்தில் என்ன சம்பளத்தைப் பெற்றிருக்க முடியுமோ அச்சம்பளத்தை தமிழ் நாட்டிலும் பெற அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் பி.டி. பட்டம் பெறுவதற்கு முன்பு செய்த பணியைக் கணக்கில் கொண்டு தனி ஊதிய உயர்வு அளிக்கும் பிரச்சினை அப்பொழுது எழவில்லை.

(இ) இல்லை.

(உ) & (எ) இக்கேள்விக்கு இடமில்லை.

Teachers Transferred from Andhra Pradesh

* 242 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representations have been received from the teachers transferred from Andhra Pradesh, consequent on the 'Pataskar Award' and working in the Management Schools in Tiruthani Taluk, stating that their pay had not been refixed with effect from 1–6–1960, as per the First Pay Commission's recommendations taking into account their service in Andhra Pradesh; and

(b) if so, the action taken to refix their pay and to pay the arrears due to them ?

ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மாற்றப்பட்ட ஆசிரியர்கள்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "படாஸ்கர் குழுவின் தீர்ப்பினை" யொட்டி ஆந்திரப் பிரதேசத்தி லிருந்து மாற்றப்பட்டவர்களும், திருத்தணி வட்டத்திலுள்ள தனியார் பள்ளி களில் பணிபுரிபவர்களுமான ஆசிரியர்களிடமிருந்து, அவர்கள் ஆந்திரப்

1974 மார்ச் 29]

பிரதேசத்தில் தாங்கள் ஆற்றிய பணியைக் கணக்கில் எடுத்துக்கொண்டு முதல் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க தங்களின் சம்பளம் 1—6—1960-லிருந்து மீண்டும் வரையறுக்கப்படவில்லையென முறையீடுகள் வரப்பெற்றுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவர்களின் சம்பளத்தை மீண்டும் வரையறுப்பதற்கும், அவர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகைகளைக் கொடுப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இம்மனு ஆய்வு செய்யப்பட்டு ஊதிய கோரிக்கை நிராகரிக்கப் பட்டது.

திரு. செ. முத்துசாமி : ஆந்திரப் பிரதேசத்திலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்ட ஆசிரியர்கள் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது என்று இருந்தும்கூட, அங்கிருந்து வந்தவர்களுக்கு ஒரு தகுதியான நிலையை நிர்ணயித்துக் கொடுக்காமலிருப்பது நியாயமாகாது. அப்படிக் கொடுக்கப் படாவிட்டால், அவர்கள் தங்களை ஆந்திராவுக்கே அனுப்பிவிடட்டும் என்ற ஒரு புதிய கோரிக்கையையும் எழுப்பியிருக்கிறார்கள். எனவே அவர்கள் பிரச்சி னைக்குத் தீர்வு காணவும், ஊதிய உயர்வு கொடுக்கவும் அரசு முடிவெடுக்குமா, அதைப்பற்றி ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆந்திரப் பிரதேசத்திலேயிருந்து தமிழ் நாட்டுக்கு மாற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யும்போது அவர்கள் 1—11—58-லேயிருந்து 31—5—60 வரை யில் உள்ள ஊழியக்காலத்திற்கு வெயிட்டேஜ் அளித்தால் போதும் என்று முடிவெடுத்து, 1—11—58 முதல் 31—5—60 வரைக்கான ஊதியம் கணக்கில் எடுக்கப்பட்டு ஊதியத்தைத் திருத்தி ஆணையிடப்பட்டது. திருத்தணி வட்டத் திலுள்ள தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களின் கோரிக்கையும் பரிசீலனை செய்யப்பட்டு, ஆந்திர மாநிலத்தில் பணிபுரிந்த காலமும் கணக்கில் எடுக்கப் பட்டு 1—11—58-லேயே திருத்தி அமைக்கப்பட்டுவிட்டதால், அவர்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, அவர்கள் இங்கிருந்துதான் ஆந்திரப் பிரிவினையின்போது ஆந்திரத்திற்குச் சென்றவர்கள். ஆந்திரா சம்பளக் கமிஷன் அவர்களுடைய ஊதியத்தை மாற்றியமைத்திருந்தாலும், அவர்களுடைய ஊதியம் மிகக்குறைவாக இருக்கிறது. தமிழ் நாட்டிலே உள்ள

சலுகைகளும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே அவர்களைவிட ஊழிய காலம் குறைவாக இருப்பவர்கள் அவர்களைவிட அதிகமாகச் சம்பளம் வாங்குகிறார்கள். எனவே கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு அதைக் கொண்டுவருகிறேன். இடையிலே பிரிந்து சென்றுவிட்டுத் திரும்பிவந்திருப்பதன் காரணமாக அதிகமான ஊழிய காலம் இருந்தும், சம்பளம் குறைவாக இருக்கிறது. இதை அரசு கருணையோடு பரிசீலித்து நியாயம் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *தலைவர் அவர்களே, முதலிலேயே நான் தெளிவாகச் சொன்னேன். 1—11—58 வரைதான் திருத்தியமைக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு 1—11—58 முதல் 31—5—60 வரைக்கான பணிக்காலத்திற்கு மட்டும் வெயிடேஜ் அளிக்கப்பட்டது. அந்த பிரச்சினை மீண்டும் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. இப்பொழுது ஊதியமாற்றம் செய்வதற்குப் பரிசீலனை இல்லை.*

Liberalised Pension Benefits to the Personnel belonging to ' B ' Wing

* 243 *Q.*—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Government (Board) High School Head Masters' Special Conference held in Madras during September, 1973, has requested the grant of liberalised pension benefits to all personnel belonging to ' B ' Wing, who retired between 1-4-66 and 1-4-70; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

'பி' பிரிவு பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியம்

திரு. செ. முத்துசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : *மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—*

(அ) 1—4—1966-க்கும், 1—4—1970-க்கும் இடைப்பட்ட கால அளவில் பதவி ஓய்வு பெற்ற 'பி' பிரிவு பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டுமென 1973

செப்டம்பர் திங்களில் சென்னையில் நடைபெற்ற, தமிழ் நாடு அரசு உயர்நிலைப் பள்ளி (கழக) தலைமை ஆசிரியர்களின் சிறப்பு மாநாட்டில், கேட்கப்பட்டுள்ள தென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசு ஆணை எண் 399, கல்வி, நாள் 21—3—72-ல் முன்னாள், கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களை 1—4—1070 முதற்கொண்டுதான் அரசுப் பணியில் எடுத்துக் கொள்ளப் பட்டது என்றும், 1—4—1966 முதல் எடுத்துக்கொள்ள இயலாது என்றும் ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது.

Resolutions passed by the Madras City Specialist Teachers Association.

* 244 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI (ON BEHALF OF THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the resolutions passed by the Madras City Specialist Teachers Association on 20th October 1973 have been brought to the notice of the Government ; and

(b) if so, the action taken thereon ?

சென்னை மாநகர் சிறப்பாசிரியர் கழகத்தின் தீர்மானங்கள்

புலவர் ஓ. அறிவுடைநம்பி (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 20—10—1973 அன்று நடைபெற்ற சென்னை மாநகர் சிறப்பாசிரியர் கழகத்தின் தீர்மானங்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தீர்மானங்களின் நகல் ஒன்று பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பெறப்பட்டது.

(இ) தீர்மானங்களின்மேல் பள்ளிக் கல்வி இயக்குநர் குறிப்புரைகள் அனுப்பியுள்ளார். அவை அரசின் ஆய்வில் உள்ளன.

Model Schools

*245. Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the Government have any proposals to offer incentives to the private sector for opening model schools in the State; and

(b) if so, the details thereof?

மாதிரிப் பள்ளிகள்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் மாதிரிப் பள்ளிகளைத் தொடங்க தனியார் துறைக்கு ஊக்கம் அளிப்பதற்கான செயற்குறிப்புகள் எவையும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமென்றால், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே, மாதிரிப் பள்ளி என்றால் என்ன? அதிலுள்ள கல்வித் திட்டத்தில் ஏதாவது மாற்றங்கள் உண்டா? அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாதிரிப் பள்ளி என்று இரண்டு இடங்களிலே இப்பொழுது வைத்திருக்கின்றோம். புதுக்கோட்டையிலே ஆண்களுக்கும், சென்னையிலே பெண்களுக்கும் இருக்கின்றது. அதிலே தலைமை ஆசிரியர்களாக இருப்பவர்கள் பேராசிரியர்கள் அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே பணிபரிகிறவர்களை பி.ஏ., பி.டி.-க்குப் பதில் எம்.ஏ., பி.டி. படித்தவர்களாக வைத்து, மாநிலம் முழுதும் ஒரு தேர்வு நடத்தி, அதிலே அதிக எண்கள் வாங்குகிறவர்களை மட்டும் அந்தப்

பள்ளியிலே வைத்து, அதிலே ஏற்படுத்துகின்ற முறைகளை மற்றப் பள்ளிகள் பின்பற்றலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே அந்த இரண்டு பள்ளிகளையும் ஏற்படுத்தினோம். ஆனால், இப்பொழுது 'காம்ப்ரகென்சிவ் ஸ்கூல்' என்ற அளவுக்கு தொழில் கல்வி, விவசாயம், தையல், தச்சு, வானொலி ரிப்பேர், தொழில் நுட்பக் கல்வி எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்லிக்கொடுக்கக்கூடிய அளவுக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 200 பள்ளிகள் அமைக்கலாமா என்கின்ற ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கு மூன்று கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1974-75 ஆம் ஆண்டில் ஒரு 10 பள்ளிகளை நிறுவுவதற்காக ரூ. 8,50,000 நிதி நிலை அறிக்கையிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பத்துப் பள்ளிகளை இந்த ஆண்டு ஏற்படுத்திய பிறகு, மேலும் அடுத்தடுத்த ஆண்டுகளில் விரிவுபடுத்தலாம் என்ற எண்ணமும் இருக்கிறது.

(பிற்பகல் 4.30)

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, மாதிரிப் பள்ளிகளைத் தனியார் துறையில் தொடங்காமலிருக்க அரசு ஏற்றுக்கொண்டுள்ள முடிவினைப் பாராட்டுகிறேன் நான். அதைப் போலவே ஆரம்பப் பள்ளிகளையும் தனியார் துறையில் தொடங்காமலிருக்க அரசு முடிவு செய்யுமா? ஏனென்றால், தனியார் பள்ளிகள் அநேகமாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மதித்து நடப்பதில்லை. எனவே தனியார் இப்படிப்பட்ட ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்காமலிருக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படி ஒரு முடிவை எடுப்பதற்கு இல்லை. ஆனால் பெரும்பாலான ஆரம்பப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால்தான் இப்போது ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் யாரையும் இது விஷயத்தில் தடுத்து நிறுத்துவதற்கில்லை. அடிப்படை உரிமை பாதிக்கப்படுகின்றது என்று அவர்கள் சொல்லக்கூடும் அப்படித் தடுத்தால். ஆனாலும் அவற்றை முறையாகக் கட்டுப்படுத்துவதற்காக பல கட்டுதிட்டங்கள், பல சட்டங்கள் இருப்பதால், அவற்றைத் தடுக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. எல். பலராமன்: மாதிரிப் பள்ளிகளில் அரசு கண்ட அனுபவத்தில், அதில் படிக்கும் மாணவர்களிடையிலே எத்த அளவிற்கு பயிற்சியும் நல்ல தேர்வும் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பதை அரசு உணர்ந்திருக்கின்றதா? பத்து இடங்களிலே ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பத்து இடங்கள் எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாதிரிப் பள்ளிகள் என்பது வேறு, 'கம்ப்ரெஹென்ஸிவ்' பள்ளிகள் என்பது வேறு. மாதிரிப் பள்ளிகள் என்பவை சென்ற ஆண்டிலேதான் தொடங்கப்பட்டன. 'காம்ப்ரெஹென்ஸிவ் ஸ்கூல்ஸ்' என்பவை இந்த ஆண்டிலிருந்துதான் துவங்கப்படும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, உதகமண்டலத்திலே லாரென்ஸ் பள்ளிக்கூடம் என்று ஒரு பள்ளிக்கூடம் இருப்பது அனைவருக்கும் தெரிந்திருக்கலாம். அதிலே பணியாற்றி ஓய்வு பெற்ற தாமஸ் என்பவர் இந்த ஊரில் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்தி வருகின்றார். அது பப்ளிக் ஸ்கூல் என்று சொல்லப்படுகிறது. அந்தப் பள்ளிக்கூடப் பாடத் திட்டங்களுக்கும் மாடல் ஸ்கூல் பாடத் திட்டங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. இவை தனி ஸிலபஸ்களின்கீழ் ஆரம்பித்து, மெட்ரிகுலேஷன் என்ற அளவிற்குப் போகின்றது. ஆங்கிலத்திலே பாட போதனை நடத்துகின்றார்கள். நாம் வைக்கும் காம்ப்ரெஹென்ஸிவ் ஸ்கூலில் தொழில் நுட்ப அறிவையும், 'ஜாப் ஓரியெண்டேஷன்' என்று சொல்லத்தக்க அளவிலே, அதையும் புகுத்தி அவை ஒரு எடுத்துக்காட்டாக இயங்கத்தக்க அளவிற்கு அமைய இருக்கின்றன.

Narcotic Drugs

* 246 *Q.*—THIRU M. ARUMUGASWAMI (ON BEHALF OF THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Health be pleased to state the steps that are being taken by the Government to prevent the misuse of Narcotic Drugs by the public ?

போதையூட்டக்கூடிய மருந்துப்பொருள்கள்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

போதையூட்டக்கூடிய மருந்துப் பொருள்கள் பொதுமக்களால் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை ?

1974 மார்ச் 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தயாரிக்கப்பட்ட அபின் (போதையூட்டும் மருந்துகள்) நீங்கலாக ஏனைய மருந்துகளைத் தயாரித்தல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல், எடுத்துச் செல்லுதல், வைத்திருத்தல் ஆகியவை அபாயகரமான மருந்துகள் சட்டத்தைச் சேர்ந்த (மத்திய சட்டம் 1930) 8-வது பிரிவின் கீழ் இயற்றப்பட்ட தமிழ் நாடு 1932 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகள் விதிகளின் கீழ் முறைப்படுத்தப்படுகின்றன. இவ் விதிகளை மீறுபவர்கள் தகுந்தவாறு தண்டிக்கப்படுகின்றனர்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether any report has been received by Government regarding the use of Narcotic Drugs in Students' Hostels in Tamil Nadu ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படிப்பட்டதொரு அறிக்கை எதுவும் இதுவரையில் வந்ததாகத் தெரியவில்லை.

New water supply scheme in Poonamallee

* 247 *Q*.—THIRU L. BALARAMAN (ON BEHALF OF THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any new water-supply scheme has been introduced in Poonamallee during 1973 ; and

(*b*) if so, the details thereof?

பூவிருந்தவல்லியில் புதிய நீர் வழங்குத் திட்டம்

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டில், பூவிருந்தவல்லியில், புதிய நீர் வழங்குத் திட்டம் ஏதும் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம். பூவிருந்தவல்லி பேரூராட்சிப் பகுதிக்காக, புதியதொரு குடி நீர் வழங்கு திட்டத்தை நிறைவேற்ற அரசு 1972 மார்ச் திங்களில் நிர்வாக ஒப்புதல் வழங்கியது. அத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 20.40 லட்சமும், அவற்றைப் பேணிவர ஆண்டுதோறும் ரூ. 50,000-ம் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது.

(இ) கூவம் ஆற்றிலிருந்து இத்திட்டத்திற்கு நீர் எடுத்துக்கொள்ளப் படும். சென்னை மாநகரின் வடக்குப் பகுதிக்கு ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில் ஆயச்சேரி கிராமத்திற்கருகில் இத்திட்டத்திற்கான இடம் தெரிந் தெடுக்கப்பட்டுள்ளது. கூவம் ஆற்றுப் படுகையில் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ள வடிப்புப் பணிகள் (Infiltration works) மூலம் 300 மில்லி மீட்டர் குறுக்களவும் 8,504 மீட்டர் நீளமும் உள்ள பெரிய குழாய் மூலமாக, பூவிருந்தவல்லி நகரில் உயர் மட்டத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ள நீர்த் தேக்கத்திற்கு நீரைக் கொண்டு வந்து அங்கிருந்து தேவையான நீர் எடுத்துக் கொள்ளப்படும். நீர் வழங்கும் காரியங்களுக்காக பூவிருந்தவல்லி நகரம் இரு மண்டலங்களாகப் பிரிக்கப்படும்; ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனி குடிநீர்த் தேக்கம் ஒன்றும், நீர் வழங்கு அமைப்பும் இருக்கும்.

பூவிருந்தவல்லி பேரூராட்சிக்கென நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 20 காலன் அல்லது 90 லிட்டர் அளவுக்கு நீர் வழங்கப்படும்; வழியிலுள்ள கிராம மக்களுக்கு, நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 10 காலன் அல்லது 45 லிட்டர் அளவுக்கு நீர் வழங்கப்படும். இத்திட்டம் குறித்த பணிகள் நடந்தேறி வருகின்றன.

Hospital Equipments Repairing Centre.

* 248 *Q*.—THIRU L. BALARAMAN (ON BEHALF OF THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Health be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 58 on 25th June 1971:—

(*a*) whether there is any proposal to have a repairing centre for repairing hospital equipments such as Electro-Cardiogram, X-ray equipment, etc., under the control of the Health Department itself; and

(*b*) if so, the details thereof?

மருத்துவமனைச் சாதனங்களைப் பழுதுபார்க்கும் நிலையம்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எலெக்ட்ரோ-கார்டியோகிராம், எக்ஸ்-கதிர் சாதனங்கள் போன்ற மருத்துவமனைச் சாதனங்களைப் பழுது பார்ப்பதற்காக, பழுது பார்க்கும் நிலையம் ஒன்றை மக்கள் நல்வாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நிறுவு வதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இல்லை.

Co-operative Fruit Processing Industry in North Arcot District

*249.Q— THIRU L.BALARAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(a) the amount collected as shares in the Co-operative Fruit Processing Industry in North Arcot District;

(b) the capital investment in this Industry;

(c) whether this Industry is remunerative; and

(d) the reasons for non-distribution of Share Certificates, if any?

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள, கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கும் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை

திரு. எல். பலராமன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கும் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலைக்காக வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை எவ்வளவு?

(இ) இதற்கான மூலதனம் எவ்வளவு?

(உ) தற்போது இத்தொழிற்சாலை லாபகரமாக நடக்கின்றதா?

(எ) பங்குச் சான்று ஏதும் வழங்காமல் இருப்பின் அதன் காரணம் யாது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) பங்குத் தொகைக்காக அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1,31,797. பங்குத் தொகைக்காக அரசாங்கம் அளித்துள்ள தொகை ரூ. 5 இலட்சம்.

(இ) தொழிலகத்தை நிறுவ மொத்தம் செலவான தொகை ரூ. 22 இலட்சம்.

(உ) இல்லை.

[1974 மார்ச் 29

(எ) பழம் பதனிடும் தொழிலகத்தைத் தனிக் கூட்டுறவுச் சங்கமாக அமைக்கும் நோக்கத்தோடு விவசாயிகளிடமிருந்து பங்கு பணம் வசூல் செய்யப்பட்டது. ஆனால் தொழிலகத்தின் தற்போதைய நிலைமையை பரிசீலனை செய்து அதைத் தனிச் சங்கமாகப் பதிவு செய்யும் திட்டத்தைச் சில ஆண்டு களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது. வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்தின் தற்போதைய உபவிதிகளின்படி தனிப்பட்ட நபர்களை 'A' வகுப்பு உறுப்பினர்களாக சேர்க்க இயலாது. பழம் பதனிடும் தொழிலகத்தை தனிக் கூட்டுறவுச் சங்கமாக அமைக்கும்வரை அவர்கள் அந்த சங்கத்தில் 'B' வகுப்பு உறுப்பினர்களாகச் சேர்க்கலாமா என்ற ஒரு குறிப்பு கூட்டுறவுப் பதிவாளரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, ரூபாய் 22 லட்சத்திற்கு மேலே முதல் போட்டு இதை ஆரம்பித்து நான்கைந்து ஆண்டுகளாகியும், இதுவரையிலும் அதிலே பங்குகளைப் போட்ட அங்கத்தினர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படாமலிருக்கின்றது. இதை உடனடியாக வழங்குவதற்கு உத்தரவிடப் படுமா? மேலும் இப்படி ரூ. 22 லட்சம் என்ற அளவிற்கு முதலீட்டைப் போட்டும் இலாபம் கிடைக்காதது ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். அதனுடைய விற்பனையில் இப்போதுதான் சற்று முன்னேற்றம் காணப்படுகிறது. ஆரம்ப கட்டத்தில் விற்பனை ரூ. 8,000 என்று இருந்தது 1972–73-ல்தான் ரூ. 11,23,000 என்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. குறைந்தது ரூ. 20 லட்சம் என்ற அளவில் விற்பனையானால்தான் கணிசமான லாபம் கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். அதே நேரத்திலே சேர்ந்துள்ள உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாததற்குக் காரணம், விதிப்படி 'எ' வகுப்பில் சேருவதற்கான விதி முறை இல்லாத காரணத்தினால் பதனிடும் தொழிற் சாலையில் மட்டும் தனியாக பிரிவு 'ஏ'-ல் சேர்க்க வேண்டியிருக்கிறது. இப்போது 'பி' உறுப்பினர்களாக அவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கான ஏற்பாடு நடந்துகொண்டிருக்கின்றது.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, இப்படிக் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை, மதுரை, கொடைக்கானல், திண்டுக்கல் பகுதிகளில் அதிக பழ உற்பத்தி யாவதால், அங்கே இதை விரிவுபடுத்தும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அங்கெல்லாம் உற்பத்தியாகும் திராட்சையைப் பயன்படுத்தி ஒயின் தயாரிக்கும் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது. அதைப் பொறுத்த வரையில் மத்திய கூட்டுறவு ஸ்தாபனத்திலிருந்து உத்தரவு ஏதும் வரவில்லை. இப்போது நான்கு ஆண்டு களுக்குப் பிறகுதான் நமது நாட்டிலேயே இப்படி பழச்சாற்றை உபயோகிக்கும் பழக்கம் பரவி வருகின்றது. அது நல்லபடி முன்னேற்றமடைந்தால்தான், இதை விரிவுபடுத்தும் யோசனையை நாம் மேற்கொள்ள முடியும்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்தப் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையில் என்னென்ன பழங்களை உபயோகித்து வருகின்றார்கள்? மேலும் டெக்னீஷியன்ஸை முறையாக பணியில் ஈடுபடுத்தாத காரணத்தினால், நூற்றுக்கணக்கான டன் சாறு பாழாகிவிட்டது என்பது உண்மையா? இப்படி வீணாவதைத் தடுக்க மேல் நடவடிக்கைகள் என்று என்னென்ன அரசு எடுக்க இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, முதல் கட்டத்திலே இப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டாலும், அடுத்தடுத்து இது திறமையுடன் இயங்க ஆரம்பித்து, இப்போது இதன் உற்பத்திப் பண்டங்களை வெளிநாட்டினரும் விரும்பி வாங்கக்கூடிய அளவிற்கு அபிவிருத்தி ஏற்பட்டிருக் கின்றது. இதை பிற மாநிலங்களிலும் இப்போது விரும்பி வாங்குகின்றார்கள். நல்ல சாறு இப்போது தயாரிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

Price of Rice

* 250 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it was decided to raise the price of rice at the Chief Ministers' Conference held at New Delhi in September 1973; and

(*b*) if so, the action taken by the Tamil Nadu Government thereon?

அரசி கொள்முதல் விலை

திரு. எல். பலராமன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில், புதுடெல்லியில் நடந்த முதல் அமைச்சர்கள் மாநாட்டில், அரிசியின் விலையை உயர்த்தத் தீர்மானிக்கப் பட்டதா ?

(இ) ஆமெனில், அது குறித்து தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, (அ) ஆம். 1973 செப்டம்பரில் புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் நெல் விலையை உயர்த்தவேண்டும் என்றும் அந்த விலையை ஒட்டி அரசும் விலையை திருத்தி அமைக்க வேண்டும் என்றும் கருத்து நிலவியது.

(இ) அதைத் தொடர்ந்து மத்திய அரசு 1973–74 பருவத்திற்கு நடுத்தர நெல் விலை ரூ. 70 என்று நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்து அன்றைய தினமே தமிழ்நாடு அரசு 6—10—1973-லிருந்து குறுவை பருவத்திலேயே நடுத்தர நெல் விலை ரூ. 70 என்றும் மோட்டா ரக நெல் ரூ. 66 ஆகவும் உயர்த்தியது. 20—12—1973-லிருந்து நேர்த்தி ரகம் நெல் விலை ரூ. 75 என்றும் மிக நேர்த்தி ரக நெல் விலை ரூ. 78 என்றும் உயர்த்தியது.

(பிற்பகல் 4.40)

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, நெல் விலை இப்போது இருக்கும் மற்ற விலைகளைக் காட்டிலும் குறைவாக இருப்பதால், தஞ்சை விவசாய மாநாட்டில் நெல்லுக்கு மத்திய சர்க்கார் கூட்டிக் கொடுத்திருந்தாலும், இன்னும் அதிகமாக போனஸ் வழங்க அரசுக்கு எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நெல் விலையை உயர்த்தியிருக்கிறோம். 16—5—1973 வரையில் ரூபாய் 49, 53, 56, 58 என்று இருந்தது. 11—8—1973-க்குப் பிறகு 59, 63, 66, 68 என்று இருந்தது. இப்போது 6—10—1973-க்குப்பின் ரூபாய் 66, 70, 75 என்று உயர்த்தியிருக்கிறோம். இதிலே கூட 75, 78 என்று உயர்த்த வேண்டுமென்று நாம் தான் கேட்டிருக்கிறோம். இன்னும் கூட மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் வரவில்லை யென்றாலும், அதிகம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். 36 சதவீதம் நெல் விலையை உயர்த்தியிருக்கிறோம். நாம் அரிசியை முக்கியமாகப் பயன்

1974 மார்ச் 29]

படுத்துகிறவர்கள். இதையும் அதிகமாக ஏற்றிவிட்டால் வாங்குகிற மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும். இன்றைக்கு எந்த அளவிற்கு மற்ற காரியங்களில் அபிவிருத்தி செய்ய முடியுமோ அதைத் தான் செய்துகொண்டு வருகிறோம். விலை அதிகமாகக் கொடுக்கிற காரணத்தினால், போனஸ் போன்றவைகள் அதிகமாகத் தேவையில்லை.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த நெல் விலையை ஏற்றும் போது சன்னரக நெல் அதிகமாக மகசூல் ஆகாத காரணத்தினால், அதற்கென விலையை உயர்த்த அரசு பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன். நுகருகிறவர்கள் ஏழ்மையானவர்கள், அதனால் விலையை ஒரே மட்டத்தில் வைத்திருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே முறையில் பயிரிடுபவர்கள் சாதாரண மக்கள் என்ற முறையில் அவர்கள் மீது அனுதாபம் அரசு வைக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அவர்கள் மீது அனுதாபம் வைத்த காரணத்தினால் தான், இப்போது 36 சதவீதம் விலையை ஏற்றியிருக்கிறோம். இன்றைக்கு ஏழை எளிய விவசாயிகளுக்கு லாபம் வர வேண்டுமென்று தான் 36 சதவீதம் உயர்த்தியிருக்கிறோம். முன்பெல்லாம் 50 சதவீதம் விலை உயர்த்திருந்தாலும், அதை அனுபவித்தவர்களெல்லாம் ஒரு சில பெரிய நிலச்சுவாந்தார்கள் தான். அவர்கள் தான் அனுபவித்துக்கொண்டு வந்தார்கள். இப்போது சாதாரண விவசாயிகள் தான் இந்த 36 சதவீத விலை உயர்வை அனுபவிக்கிறார்கள். இப்போது 91 ஆயிரம் டன் குறுவை நெல் கொள்முதல் செய்திருக்கிறோம். இந்தக் கொள்முதலிலே சாதாரண விவசாயிகள் இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வாங்குபவர்களையும், விற்பவர்களையும் சமமாகப் பார்க்கிறோம் என்று சொல்கிறோம். வாங்குபவர்களை மட்டும் கவனிக்கிறோம், விற்பவர்களைக் கவனிக்கவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். விற்பவர்களைக் கவனிக்கவில்லை என்ற நிலை இல்லை. மற்ற பொருள்களின் அளவிற்கு இதை உயர்த்த முடியாது என்ற நிலையை மட்டும் தான் சொன்னேன்.

THIRU A.R. DAMODARAN : Sir, in view of the fact that the wheat price has been increased to Rs.105 per quintal and also considering the cost of fertiliser, the cost of labour, and the power-

cut that has been imposed resulting in increased cost of cultivation of paddy-growers, may I know from the Government whether they are against increase in prices for paddy-growers even if the Government of India should suggest it?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இப்போது அவர்கள் கோதுமையைப்பற்றி விவாதித்து முடிவு செய்திருக்கிறார்கள். நான் அதற்குத் தான் சொன்னேன். ரூபாய் 73, 75 ஆக இருந்ததை ரூபாய் 75, 78 என்று கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். நாங்களும் கூடிய வரையிலே விவசாயிகள் வாங்கக் கூடிய உரம், மற்ற பொருள்கள் விலை இவைகளை வைத்துத் தான் நிர்ணயித்துச் சொல்லியிருக்கிறோம். மத்திய சர்க்கார் இதைப்பற்றி விவாதத்தில் இறங்கவில்லை.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, அரசாங்கம் நிர்ணயிக்கும் விலை கூட விவசாயிகளுக்குக் கிடைக்க முடியாத அளவிற்கு ஆங்காங்கே அறுவடையானவுடன் நெல்லை விலைக்கு வாங்காமல் தாமதப்படுத்துவதனால் தனிப்பட்ட வியாபாரிகள் குறைந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கிப் போவது என்ற நிலை இருக்கிறது. அப்படி இல்லாமல் தாமதமின்றி உடனுக்குடன் விவசாயிகளின் நெல்லை வாங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதைத் தான் நான் முன்னே சொன்னேன். மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்வது முன் காலத்தில் இருந்தது என்பதை முன்பே சொல்லி விட்டேன். இப்போது கிட்டத்தட்ட சம்பா காலத்திலே ஒரு லட்சம் டன் அளவிலே கொள்முதல் செய்திருக்கிறோம். இப்போது நிச்சயமாக எந்த ஒரு விவசாயியும் இந்த 70 ரூபாய், 73 ரூபாய் அல்லது 75 ரூபாய்க்குக் குறைந்து விற்றிருக்க முடியாது. தஞ்சை மாவட்டத்தில் இந்த நிலைமை அதிகமாக ஏற்படும் என்ற காரணத்தினால், நூற்றுக்கணக்கான கொள்முதல் செய்யும் நிலையங்களை மத்திய சர்க்காரின் எப்.சி.ஐ. மூலமாகவும், மாநில சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாகவும், தாசில்தார், மற்ற அலுவலர்களை வைத்து கொள்முதல் செய்திருக்கிறோம். மற்ற மாவட்டங்களிலே எங்கேயாகிலும் விலை குறைகிறது என்று செய்தி வந்தால், உடனடியாக இந்த நிலையங்களைத் தோற்றுவித்து கொள்முதல் செய்திருக்கிறோம். இப்படிப்பட்ட குறை கவனத்திற்கு வரவில்லை. விலை ஏறுகிறது என்ற குறை தான் கவனத்திற்கு வந்திருக்கிறதே தவிர, நிச்சயமாக இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், எந்த விவசாயியும் நெல்லைக் குறைத்து விற்கிற நிலைமை தமிழகத்தில் ஏற்படவில்லை.

1974 மார்ச் 29]

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, நெல் தஞ்சாவூரிலே லெவி முறையிலே வாங்கப்படுகிறது. நெல்லுக்கு அதிக விலை கொடுத்தாலும் கூட, சமீப காலத்திலே ஒரு மாதத்திற்குள்ளாக 60 படி மூட்டை 60 ரூபாய்க்கு 70 ரூபாய்க்கு விற்றது இப்போது 75, 80 ரூபாய் என்று கிராமங்களில் விருது நகர் பக்கங்களில் விற்கிறது. இவ்வளவு விலை உயர்த்திக் கொடுத்தாலும் கூட, லெவிக்கு உங்களுக்குக் கொடுக்கிறவர்கள் லாபம் அடைகிறார்களா என்பதைச் சொல்ல முடியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, வியாபாரி களே லாபத்திற்காகத் தான் வியாபாரம் செய்கிறார்கள். எந்த அளவிற்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமோ அதற்காக லெவி போட்டிருக்கிறோம். வியா பாரிகள் அதிகமான அளவில் கொள்ளையடிக்காத அளவிற்குப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

THIRU A.R. DAMODARAN: Sir, are the Government aware that because of the low procurement price fixed for paddy, the open-market price of paddy is about 40 to 50 per cent above the procurement price resulting in a great deal of hardship to the average consumer?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதற்காகத் தான் லெவி போடுவது. லெவி விலையை விட ஓபன் மார்க்கெட் விலை ஜாஸ்தி யாகப் போய்விடுகிறது. கொள்முதல் செய்வதற்கு, இந்த விலைக்குக் கிடைக்க வில்லை என்ற நிலைமையில் தான் லெவி போடுகிறோம். நாம் திடீரென்று லெவி போடுவதே, விலைகளை அட்ஜஸ்ட் செய்வதற்குத் தான். அந்த நோக்கத்தோடு தான் செய்துகொண்டிருக்கிறோம். அதையும் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். எங்கு விலை ஏறினாலும் குறைவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கி றோம்.

Foreign Exchange Loan

† 226 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Reserve Bank of India has informed the Tamil Nadu Industrial Investment Corporation Limited about the availability of foreign exchange loan from the Reserve Bank of India; and

† 27—3—1974 ஆம் நாள் வினுப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

(b) if so, the details thereof?

அன்னியச் செலாவணிக் கடன்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அன்னியச் செலாவணிக் கடன் கிடைப்பது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்குத் தெரிவித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) உலக வங்கியின் ஓர் உறுப்பான அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA) பல்வேறு நாட்டுச் செலாவணிகளில் 250 லட்சம் அமெரிக்க டாலருக்குச் சமமான கடன் வசதியை இந்திய அரசுக்குக் கிடைக்கச் செய்துள்ளது. தொழில் நிறுவனங்கள் (தொழில் உற்பத்திக்குரிய) மூலதனச் சாதனங்களை இறக்குமதி செய்யவும் அயல்நாட்டுத் தொழில் நுட்ப வல்லுநர்களைப் பெறவும், மேற்சொன்ன அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனக் கடன் வசதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் தொழில் பிரிவுகளுக்கு அந்நியச் செலாவணிக் கடன் வழங்கப்படுகிறது. பேரவை முன் வைக்கப்பட்டுள்ள சிறுவெளியீட்டில் @ (Brochure) இத்திட்டத்தின் விவரங்கள் உள்ளன.

Sales Tax Concessions

†227 *Q.*—THIRU A. AYYANAN AMBALAM (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to grant Sales Tax concessions to Small Scale Industry Units as a form of incentive; and

(*b*) if not, the reasons therefor?

@ அச்சடிக்கப்படவில்லை.

† 27—3—1974 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

1974 மார்ச் 29]

விற்பனை வரிச் சலுகைகள்

திரு. அ. அய்யணன் அம்பலம் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறு தொழில் பிரிவுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விற்பனை வரிச் சலுகைகள் அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) விற்பனை வரி குறித்த பொறுப்புகளை நிறைவேற்றவும், சிறு தொழில்களுக்கு மூலதனத்தைத் திரட்டுவதில் உதவவும், வட்டியில்லாக் கடன் தொகைகளை அளிப்பதன் மூலம் நிதிவகையில் உதவி அளிக்க விற்பனைவரி சீரமைப்பிற்கான தனி அதிகாரி பரிவுரை செய்துள்ளார். இப்பரிவுரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இவ்வினா எழவில்லை.

Tamil Nadu Bristle Fibre Unit

* @ 228 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Bristle Fibre Unit has started marketing its products;

(*b*) if so, the details thereof;

(*c*) whether any survey has been undertaken about the market for its products; and

(*d*) if so, the details thereof?

@ 27—3—1974-ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்

தமிழ்நாடு பன்றி உரோமத் தொழில் பிரிவு

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பன்றி உரோமத் தொழில் பிரிவு தனது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யத் தொடங்கிவிட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இத்தொழில் பிரிவின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை குறித்து ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தென்காசியிலுள்ள அரசு நுண்கயிறு நிறுவனம் 1968 ஆம் வருடம் ஜூன் திங்கள் உற்பத்தி ஆரம்பித்து விற்பனை செய்யத் தொடங்கிற்று. உற்பத்தியும் விற்பனையும் 1968-69ல் முறையே ஆறு டன்னாகவும், இரண்டு டன்னாகவும் இருந்தது. 1972-73-ல் 61.4 டன்னாகவும் 65.8 டன்னாகவும் உயர்ந்தது.

(உ) & (எ) இதைப்பற்றிய ஆய்வு எதுவும் அண்மையில் நடைபெறவில்லை. இருப்பினும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் உண்டு எனக் கண்டுபிடிக்கப்பட்ட காரணத்தினாலேயே இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை வளர்ப்புக் கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதம்.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, "இம்மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள, வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை வளர்ப்புக் கொள்கை விளக்கக் குறிப்புகள் @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

@ 89-194-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.

1974 மார்ச் 29] *[திரு. சி. பா. ஆதித்தனர்]*

மூன்று குறிப்புப் புத்தகங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று, கால்நடை வளர்ப்புக் குறிப்பு, இரண்டாவது, வேளாண்மைத் துறைக் குறிப்பு, மூன்ருவது, வேளாண்மைத் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பிற்கு ஒரு இணைப்பு. இப்படி ஒரு இணைப்பு தேவைப்பட்டதற்குக் காரணம் ரசாயன உரங்களின் பற்ருக்குறை, அதைத் தொடர்ந்து வருகிற கள்ளச் சந்தை இவைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை கொண்டிருப்பது. இந்தியாவிலே மட்டுமின்றி, ஏறத்தாழ உலகநாடுகள் எல்லாவற்றிலும் ரசாயன உரங்கள் பற்ருக்குறை இருந்து வருகிறது. நான் இதைச் சுட்டிக் காட்டினுல் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், மன நிறைவு அடையப்போவதில்லை. மற்ற நாடுகளிலே எல்லாம் இப்படித்தான் இருக்கிறது என்று சொன்னவுடனே, அதைப் பார்த்து அவர்கள் திருப்தியடைந்து விட முடியாது. எனவேதான் இந்த ரசாயன உரங்களைப்பற்றி தனியாக ஒரு இணைப்பு சேர்த்து இந்த மாமன்றத்தில் வைத்திருக்கிறேன். இந்த மூன்று குறிப்புகளையும் உறுப்பினர்கள் ஆராய்ந்து கருத்துக்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

திரு. வி. வெங்கா: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையின் முன்பாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கக்கூடிய கொள்கைக் குறிப்பினை முழு மனதாக நான் வரவேற்பதோடு, இந்தத் துறை மேலும் சிறப்புற விளங்க ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நம்முடைய வேளாண்மைத் துறைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பட்ஜெட்டிலேயே, ஏறக்குறைய 69 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதைக் கண்டு விவசாயப் பெருமக்களில் ஒருவனுகிய நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். அதே நேரத்தில் விவசாயம் மேலும் பெருக வேண்டும் என்பதற்காக நீண்ட காலக் கடனுகை 17 கோடி ரூபாயையும், குறுகிய காலப் பயிர்க் கடனுகை கூட்டுறவுகளின் மூலமாக ஏறக்குறைய 81 கோடி ரூபாயையும் வழங்குவதற்கு வழி செய்திருப்பது கண்டு, உள்ளபடியே விவசாயிகள் சார்பில் இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் மிக நல்ல முறையில் அறிந்திருக்கிருேம். ஒரு ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக உணவுத் துறையில் தமிழகத்தினுடைய நிலைமை பற்ருக்குறை என்ற அளவில்தான் நாம் எல்லோரும் இருந்து வந்தோம். பற்ருக்குறை நிலைமையிலிருந்த மாநிலத்தைத் தன்னிறைவு நிலைக்குக் கொண்டுவந்ததோடு மட்டுமல்லாமல், இன்றையதினம் உபரி மாநிலம் என்று சொல்லத் தக்க அளவுக்கு நிலைமை உருவாகியது தமிழக அரசுக்குப் பெருமை தருகிறது. தமிழக அரசினுடைய திட்டங்கள் அனைத்தையும் இந்த நாட்டில் இருக்கின்ற 80 சதவீத விவசாய மக்கள் சோதனையாக அல்லாமல்

அரசு சொல்லிய உடனேயே முழுமையாக, மன நிறைவோடு, நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டு செயல் பட்டு, குறிப்பாக ரசாயன உரங்களேயும் அதிக மகசூல் தரக்கூடிய பொருக்கு விதைகளேயும் பயன்படுத்தியதன் காரணமாகத்தான் இந்த நிலேக்கு, உபரி மாநிலம் என்ற அளவுக்கு வர முடிகிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு சலுகைகளே விவசாயிகளுக்கு அரசு செய்திருந்தாலும்கூட, விவசாயிகளுடைய வாழ்க்கை நிம்மதியாக இருக்கிறதா என்று பார்த்தால், விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான் உள்ளபடியே சொல்கிறேன், விவசாயிகள் வாழ்க்கையில் இன்றைய தினம் நிம்மதியில்லே. காரணம் இன்றையதினம் வேறு பொருள்களேப் பொறுத்த வரையில், விலேவாசிகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கின்றன என்று சொல்லத் தக்க அளவுக்கு உயர்ந்துகொண்டு போகின்றனவே தவிர, உணவுப் பொருளான நெல்லின் விலே மட்டும் அந்த அளவுக்கு அதிகரித்துச் செல்வதாக எனக்குத் தோன்றவில்லே. இப்பொழுது கூட கேள்வி நேரத்தில் நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் 6—10—1973-ல் விலே நிர்ணயித்திருப்பதாகச் சொன்னுர்கள். எனவே மேற்கொண்டு உயர்த்தத் தேவையில்லே என்ற கருத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள்—கன்ஸ்யூமர்ஸ் அளவில் அமைச்சர் சொல்லக்கூடிய பதில் நியாயமாக இருக்குமே தவிர, நெல் உற்பத்தி செய்கின்றவர்களுடைய நிலேமையைப் பார்த்தால், மீண்டும் பரிசிலனே செய்து விலே நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் 50 கிலோ கிராம் கொண்ட ஒரு மூட்டை காம்பிளெக்ஸ் விலே திடீரென்று உயர்ந்து ரூ. 98 என்ற அளவுக்கு விற்கின்றது. நான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். 50 கிலோகிராம் கொண்ட ஒரு மூட்டை காம்பிளெக்ஸ் என்ன விலேக்கு உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்காவது நெல்லின் விலேயை உயர்த்தித் தர வேண்டும். உணவு உற்பத்திக்குப் பயன்படுகின்ற பொருள்கள் அனேத்தின் விலேயும் ஏறுகின்ற நேரத்தில், உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் விலேயும் உயர்வது தான் நியாயம். இது இல்லாத நிலேமையில்தான் விவசாயிகள் வேறு முறையில் எண்ண வேண்டியவர்களாகி விடுகிருர்கள். தன்னிறைவு பெற்ற மாநிலம் என்று சொல்கின்ற நேரத்தில், தன் வாழ்வில் நிறைவு இல்லே என்பதைத்தான் விவசாயி பார்க்கிருன். இன்றையதினம் உணவுப் பொருள்களேப் பயிரிடும் நிலங்களில் ஏறக்குறைய 50 சத வீத நிலங்களில், வேறு பொருள்களேப் பயிரிட்டுக்கொள்ளும் நிலேமைக்கு மாறிக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொன்னுல், இன்றையதினம் மணிலா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்ற காரணத்தினுல், மணிலா விலே உயர்ந்திருக்கின்ற காரணத்தினுல், மணிலாவுக்கு அதிக உரமோ அல்லது நீரோ தேவையில்லாத காரணத்தினுல், அதில் லாபம் அதிகம் இருக்கிறது என்பதைக் கருதி, சிறுகச் சிறுக மணிலா பயிரிடச் சென்று

விட்டார்கள் 50 சதவீத விவசாயிகள். அதே போல் கரும்பு உற்பத்திக்கு ஒரு சத விகிதத்தினர் சென்று விட்டார்கள். எஞ்சி இருக்கக்கூடியவர்கள் 40 சதவீதம் என்று தான் ஏற்படுகிறது. இந்த விவசாயிகளும் வேறு பயிர்களுக்கு மாறி விடுவார்களேயானல், 1967-க்கு முன்னல் இருந்த நிலைமைக்குக் கொண்டு போய் விடக்கூடும் என்ற காரணத்தினல், நெல் விலைகளை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, விவசாயிகளுடைய நிலைமை வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் நிலைமையைப் போன்றது அல்ல. அவர்கள் பயிரிட்டு விட்டால் விளைந்து விடும் என்று நம்பிக்கை வைப்பதற்கில்லை. பருவ மழை பொய்த்துப் போகின்ற காரணத்தினல், பூச்சிகள் வந்து பயிர் நாசமாகின்ற காரணத்தினல், பயிரிட்டு, உடனடியாக அறுவடை செய்து விட முடியும் என்ற நம்பிக்கையற்ற நிலைமை இருக்கிறது. அதற்காகத்தான் இந்த நாட்டில் இருக்கின்ற விவசாயிகளுக்குப் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டிருக்கிறர்கள். அதைப் பரிசீலித்துப் பார்த்த பிறகு அதற்கும் மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. எந்தக் காரணத்தால் மத்திய சர்க்கார் தாமதம் செய்தாலும், அனுமதி பெறுவதற்கு முயற்சிக்கின்ற அதே நேரத்தில், அனுமதி வருகின்ற வரையில் காத்திருக்க வேண்டியதில்லை. இப்பொழுது மாநில அரசு ஊழியர்களுக்கு ஒரு அருமையான திட்டத்தை வகுத்து அவர்கள் மாதம் பத்து ரூபாய் போட்டு, அவர்களுக்கு இடையில் ஏதாவது இடையூறு ஏற்படுமேயானல், மொத்தமாகப் பணம் கொடுக்கின்ற அளவில் தமிழக அரசு செய்திருக்கிறது. அந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். அதே போல் விவசாயிகளிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலித்துக் கொண்டு, அந்த விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகின்றபோது, அதாவது பயிர் விளையாமல் போகின்ற நேரங்களில், பூச்சிகள் கடித்து பயிர்கள் பாழ்படுகின்ற நேரத்தில், அவர்களுக்கு நஷ்ட ஈடாக ஏதாவது கொடுத்தால், அது சாலச் சிறந்ததாக இருக்கும்.

தமிழகமானது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை எப்படியாவது வறட்சியைச் சந்திக்கிறது. கடந்த 50 ஆண்டுகளாக நிலைமைகளைப் பார்க்கின்றபோது, ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை வறட்சி ஏற்படுகிறது, பஞ்சம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் வாங்கியிருக்கும் கடன் அவர்களுக்குப் பெரும் பாரமாக இருக்கிறது. அவர்களுடைய பயிர் பொய்த்துப் போகின்ற போது, அந்தக் கடன் பாரமாகத் தெரிகிறது. எனவே வர இருக்கின்ற ஆண்டுகளில் வாங்கிய கடனைத் திருப்பித் தருவதா அல்லது வேறு பயிர்களுக்கு முதலீடு பெறுவதா என்பது அவர்களுக்குப் பெரும் பிரச்சினையாகிவிடுகிறது. அதை உணர்ந்துதான் நம்முடைய அரசு நில வள வங்கிகள் மூலமாக விவசாயி

களுக்கு அதிக அளவில் கடன் கொடுக்கின்ற முறையைக் கையாண்டு வருகின்றது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நில வள வங்கிகள் மூலம் கொடுக்கப்படுகின்ற பணம் உலக வங்கியிலிருந்து பெறப்படுகின்றதாகும். உலக வங்கி இந்திய அரசுக்கு அரை சதவீத வட்டிக்குக் கொடுக்கிறது. மத்திய அரசு நம்முடைய மாநில அரசுக்கு ஒரு சதவீதம் கூட்டிக் கொண்டு 1½ சதவீத வட்டிக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் அது கடைசியில் விவசாயிகள் கைக்கு வருகின்றபோது 9½ சத வீதம் வட்டி கட்டித் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த வட்டி வீதம் மிகவும் அதிகமாக இருக்கிறது. காலத்தில் கட்டத் தவறினால், இரட்டிப்பு வட்டியாக, 9½ பிளஸ் 9½ ஆக 19 சத வீதம் வட்டி போடும் நிலைமை இருக்கிறது. அப்படிக் கட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகின்ற காரணத்தால், இந்த விவசாயிகள் பெரிதும் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் வேதனைப்படுகிறார்கள்.

அது மட்டுமல்ல. உலக வங்கியிலிருந்து பெற்று வரும் பணத்தை இந்த அளவுக்கு வட்டி போட்டுக் கொடுக்கிறார்கள் என்பதோடு, கடலோரப் பகுதிகளில் ஆறு மைல் சுற்றளவுக்கு நில வள வங்கிகள் கடன் கொடுப்பதில்லை. அதற்கு அவர்கள் சொல்கின்ற காரணம் ஆறு மைல்களுக்கு பூமிக்குக் கீழே தோண்டினால் உப்பு நீர் வரும் என்பது. நான் சார்ந்திருக்கின்ற மதுராந்தகம் தாலுக்கா கடலோரப் பகுதியில் உள்ளது. கடலுக்கு 100 அடி தூரத்தில் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஆறு மைல் வட்டாரத்திற்கு கடன் இல்லை என்று சொல்வது பொருத்தமில்லை. என்னுடைய பகுதியில் அந்த ஆறு மைல் வட்டாரத்திற்குள் 50 கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. ஆகவே மத்திய அரசு மூலமாக உலக வங்கிக்கு எடுத்துச் சொல்லி, அந்த விதியைத் தளர்த்திடச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

அடுத்து, இன்றைய தினம் நில வள வங்கிகள் கிணறுகள் வெட்ட கடன் கொடுக்கின்றன. ஏற்கெனவே தமிழக அரசானது, திரு. ஓமந்தூர் ராமசாமி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நாட்டில் பருவ மழையை மட்டுமே நம்பாமல் பூமிக்கடியில் இருக்கின்ற தண்ணீரைக் கொண்டுவர வேண்டும், நிறைய கிணறுகள் வெட்ட வேண்டும் என்பதற்காக கிணறு வெட்டுவதற்கு குறிப்பிட்ட தொகையை சப்சிடியாக, இனமாகக் கொடுப்பது என்ற திட்டத்தை உருவாக்கியது. அதன் மூலமாக இரண்டு ஆண்டுக் காலத்திலே பல லட்சக்கணக்கான கிணறுகள் தமிழகத்தில் உருவாயின. அப்பேர்பட்ட திட்டம் இன்றைய தினம் கைவிடப்பட்டுவிட்டது. கிணறு வெட்டுவதில் எவ்வளவோ சிரமங்கள் இருக்கின்றன ; எவ்வளவோ செலவாகிறது. 5 ஏக்கரா

வுக்குக் கிணறு வெட்ட வேண்டுமென்றால் 15,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் வரை செலவாகிறது. அந்த 20,000 ரூபாயை எவ்வளவு வருடத்தில் விவசாயி திரும்பப் பெற முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்த்து, கிணறு வெட்ட சப்சிடி முறையை ஏற்படுத்தி, ஏறக்குறைய ஒரு கிணறுக்கு 2,000 ரூபாய் இனுமாகக் கொடுப்பது என்று நிர்ணயித்தால், விவசாயிகள் நமது அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருப்பார்கள்.

அதோடு மட்டுமல்ல. தமிழ் நாட்டில் பூமிக்கு அடியில் எந்த இடத்தில் தண்ணீர் இருக்கிறது என்று கண்டுபிடிக்க சாதனம் இல்லை. விவசாயி கிணறு வெட்ட குச்சியை வைத்துக்கொண்டு குத்துகிறான். மந்திரத்திலும், சாமியார் பேரிலும் நம்பிக்கை வைத்து கிணறு வெட்டுகிறான். அப்படி வெட்டுகின்ற கிணற்றில் தண்ணீர் கிடைக்கிறதா என்றால், ஒரு சில கிணற்றில் தண்ணீரும், பல கிணறுகளில் பாறையும் வந்துவிடுகிறது. 35 அடி 50 அடி தோண்டுகிற ஓபன் வெல்ஸ் தோண்டினால் கூட தண்ணீர் வராத நிலைமை இருப்பதால, நில வள வங்கியில் 20,000 ரூபாய் கடன் வாங்கி கிணறு வெட்டி தண்ணீர் வரவில்லை என்றால், கடனை எப்படித் திருப்பிக் கொடுப்பது என்ற நிலைமையைப் பரிசீலித்து, அப்பேர்ப்பட்டவர்களுக்காவது, பொய்த்துவிட்ட கிணறுகளுக்குக் கொடுத்த கடனை வஜா செய்தால் நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் நில வள வங்கிகள் டிராக்டர்கள் வாங்குகிறவர்களுக்குக் கடன் கொடுக்கின்றன. ஆனால் மாடு வாங்க கடன் இல்லை என்கிறார்கள். டிராக்டர் யார் வாங்குகிறார்கள்? 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா வைத்திருக்கின்ற பெரிய விவசாயிகள் வாங்குகின்றார்கள். ஒரு ஏக்கரா, அரை ஏக்கரா வைத்திருக்கின்ற விவசாயிகள் டிராக்டர் உபயோகப்படுத்த முடியாது. அவன் மாடு வாங்க வேண்டும் என்று சொல்லுகிறபோது அதற்குக் கடன் இல்லை என்று சொல்வது எந்த அளவில் பொருத்தம் என்று என்னால் உணர முடியவில்லை. எனவே சிறிய விவசாயிகள் பலன் அடையும் அளவுக்கு மாடு வாங்கக் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மத்திய வங்கிகள் குறுகிய விவசாயக் கடன்களுக்கு 81 கோடி ரூபாய் கடனைக் கொடுக்க இருக்கிறார்கள். அதற்கு டார்ஜெட் பிக்ஸ் செய்கிறார்கள். இந்த மாதத்தில் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கிறார்கள். அப்படி வழங்குவதில் சிரமம் இருக்கிறது. நமது ரிசர்வ் பாங்கு 1/3 பங்கு காசாகவும், மூன்றில் இரண்டு பங்கு பொருளாகவும் (கைண்ட் போர்ஷன்-Kird Portion) கொடுக்க வேண்டும் என்கிறார்கள். இந்த பொருளாகக் கொடுக்க வேண்டுமென்பதை கெமிகல் பெர்டிலைசர் என்று எடுத்துக் கொண்டு, இரண்டு பாகத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். கெமிகல் பெர்டிலைசர்

நாட்டிலே பற்றாக்குறையாக இருப்பதால், 25 கிலோ தான் ஏக்கருக்குக் கொடுக்க முடியும் என்று சொல்வதால், ஒதுக்கப்பட்டிருக்கின்ற கடனை கொடுக்க முடியவில்லை. எனவே என்னுடைய வேண்டுகோள், கைண்டு போரஷன் என்பதை ரசாயன உரம் என்று எடுத்துக் கொள்ளாமல் வேறு எந்த உரமாக இருந்தாலும் கொடுக்க வேண்டும். ரசாயன உரம் எல்லாம் 10 ஆண்டு காலமாகத்தான் விவசாயிகள் மத்தியில் பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. அதற்கு முன்பாக அவர்கள் பிண்ணாக்கு வகைகளைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு மணிலா பிண்ணாக்கு விலை உயர்ந்துவிட்டது என்ற காரணத்தால், முத்துக்கொட்டைப் பிண்ணாக்கு, ஆமணக்குப் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு இவற்றை வாங்கி உபயோகப்படுத்துகிறார்கள். அதை நாங்கள் யாராவது வியாபாரிகளிடத்தில் வாங்கிக்கொள்கின்றோம்; அதற்கான பில்லை நாங்கள் கொடுத்தால், நீங்களே வியாபாரிகளுக்குச் செக் கொடுத்துவிடுங்கள் என்றால், மத்திய வங்கியில் கொடுக்க முடியாது, ரசாயன உரத்திற்குத் தான் கொடுப்போம் என்கிறார்கள். இப்படி ரசாயன உரத்திற்குத் தான் கொடுப்போம் என்பதை மாற்றி, எந்தப் பொருளாக இருந்தாலும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைய தினம் விவசாயிகள் மத்தியில் ஒரு சிரமம் இருக்கிறது. விவசாயியின் குடும்பத்தில் திருமணம் நடந்தால், அதற்குக் கடன் வாங்க எங்கே செல்வது? வேறு யாரும் கடன் கொடுப்பது கிடையாது. அவன் வங்கிக்குச் சென்று, பயிர் செய்திருக்கிறேன் என்று சொல்லி கடன் வாங்குகிறான். திருமணத்திற்கு என்றால், வங்கியில் அவனுக்குக் கடன் கொடுப்பது கிடையாது. ஆகவே பயிர் செய்வதற்குத் தான் கடன் என்று வாங்கி வந்து, அதிலிருந்து திருமணச் செலவைச் செய்கின்ற காரணத்தால் அவதிப்படுகின்றான். பயிருக்குத் தான் கடன் கொடுப்பேன், மற்றவற்றிற்குக் கொடுக்க முடியாது என்ற சூழ்நிலையிருப்பதால், அவன் தவறு செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகிறான். இந்த நிலையை மாற்றுவதற்கு, அரசானது ஒரு விவசாயிக்கு 10 ஏக்கரா நிலம் இருக்கிறது என்றால், அந்த 10 ஏக்கராவுக்கு ரிஜிஸ்டார்டு மார்கெட் வால்யூ என்று வைத்திருக்கிறார்கள்; அதன் பிரகாரம் 10 ஏக்கராவுக்கு ஒரு லட்ச ரூபாய் மதிப்பு என்று மதிப்புப் போட்டுக் கொடுத்துவிட்டு, அந்த மதிப்பீட்டை எந்த வங்கியில் சென்று கொடுத்தாலும் அதில் 50 சதவிகிதம் கடனைப் பெறலாம் என்கின்ற கியாரண்டியை அரசு கொடுக்குமேயானால், விவசாயிக்கு என்னென்ன கடன்கள் தேவையோ, அந்த நேரங்களில் எல்லாம் அதைப் பெற்றுக்கொண்டு, காலாகாலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்.

இன்றைய தினம் அரசு வழங்கிய கடனும், மத்திய வங்கிகள் வழங்கிய கடனும் பல கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளிடமிருந்து திரும்பி வராமல இருக்கின்ற காரணம், இதுபோன்று பருவ நிலை தவறுகின்றதும், கிணறு வெட்டு கின்ற நேரத்தில் தண்ணீர் வராததும், குடும்பத்தில் ஏற்படுகின்ற செலவுகளுக்கு அவன் பொய் சொல்லிக் கடன் வாங்க வேண்டியிருப்பதும் ஆகும். ஆகையால் தரப்படும் கடன்கள் இன்றைய தினம் அதிக அளவுக்கு நிலுவையில் இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைய தினம் விவசாயக் கடன் பெற வேண்டு மென்றால், கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து சிட்டா நகலும், அடங்கல் நகலும் ஒவ்வொரு கடனுக்கும் வாங்க வேண்டியிருக்கிறது. அதில் சிரமம் இருக்கின்றது என்று அரசு கருதிய காரணத்தால், கிராம உத்தியோகஸ்தர்கள் மூலமாக பாஸ் புத்தகம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் வரையில் பாஸ் புத்தகம் வழங்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். கிராம உத்தியோகஸ் தர்கள் பாஸ் புத்தகங்களை வழங்குகிறோம் என்று அமைச்சரிடத்திலும், அரசு விடத்திலும், அதிகாரிகளிடத்திலும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் அசோசியேஷன் மூலமாக இது அதிகமான வேலை, எங்களால் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். அதிகமான வேலை என்பதால் மட்டுமல்ல, அந்த பாஸ் புத்தகத்தை வழங்கிவிட்டால் விவசாயி அவர்களைத் தேடிக்கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை. அதனால் விவசாயி இப்போது ஒவ்வொரு தடவையும் அவர்களைத் தேடிச் செல்கின்ற நேரத்தில் 5 ரூபாய், 10 ரூபாய் என்று அந்த விவசாயிகளிடமிருந்து பெறுகின்ற வருமானம் குறைந்துவிடும் என்ற காரணத் தால், இந்தப் பணியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுத்து வருகிறார்கள். எனவே விவசாயிகளுடைய குறைகள் தீர்க்கப்பட வேண்டுமென்றால் அந்தப் புத்தகங்கள் விரைவிலே வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமான அளவில் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்கள் விவசாயத்திற்குச் செல்வது என்றால், தாங்கள் ஏதோ பெரிய படிப்பு படித்துவிட்ட மாதிரியும் கீழான வேலைக்குச் செல்வது மாதிரியும் கருதுகிறார்கள். அதே போன்று பெற்றோர்களும் தங்கள் பிள்ளை எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்கிறானே, எப்படி இந்த வேலையைச் செய்வது என்று நினைக்கிறார்கள். அதைப் போக்க இன்றைய தினம் எப்படி பிற தொழில்களுக்கு பாலிடெக்னிக் இருக்கிறதோ, அதைப்

போல நாடெங்கிலும் விவசாய பாலிடெக்னிக்குகளை உருவாக்கினால், அவர்கள் விவசாயத்தைக் குறித்து குறைவாக மதிப்பிடாமல், படித்தவர்கள் நிச்சயமாக விவசாயத்தில் ஈடுபட வழி ஏற்படும். இந்த நாட்டில் இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க முடியும் என்று நான் கருதுகின்றேன்.

அதே நேரத்தில் கிராமப்புறங்களில் விவசாயத் தொழில் கூட்டுறவுக் கழகங்களை உருவாக்க இன்றைய தினம் அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அது இனிஷியல் ஸ்டேஜில், ஆரம்பக் கட்டத்தில் தான் இருக்கிறது. அதைத் தீவிரப்படுத்தி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கட்டாயமாக தொழிற் கூட்டுறவுக் கழகம் ஏற்பட்டால், அதனால் அந்தப் பகுதியில் இருக்கின்ற ஒரு சிலருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுவதோடு, அங்கே இருக்கக்கூடிய நவீன விவசாயக் கருவிகளைப் பழுதுபார்க்க அது உபயோககரமாக இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், விவசாயத்தை ஒட்டியிருக்கக்கூடிய கால்நடைத் துறை குறித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைய தினம் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறதே தவிர, கால்நடைத் துறையில் அது போன்ற ஒரு புரட்சி இன்றைய தினம் இருக்கிறதா என்று பார்க்கின்ற நேரத்தில், இல்லை என்ற முடிவுக்குத் தான் வர வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாட்டில் இருக்கக்கூடிய காளைகளை அதிக அளவுக்குத் தரமான காளைகளாக ஆக்கவேண்டுமென்பதற்காக வெளி நாடுகளிலிருந்து உயர்தர சாதி மாடுகளை வாங்கி, இங்கே செயற்கை முறையில் கரு தயாரிக்க வழிவகைகள் செய்து வைத்திருக்கிறோம். 10, 20 ஆண்டுகளாக அந்த முறையைக் கடைப்பிடித்து வந்தும், ரோட்டில் செல்லுகின்ற நேரத்தில் அந்த உயர்ரக பசுக்களோ, கன்றுகளோ தென்படுகின்றதா கிராமப்புறத்திலே என்று பார்க்கின்ற நேரத்தில் இல்லை என்ற முடிவுக்குத் தான் வருகிறேன்.

இன்னொரு உண்மையையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்தில் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பாக டி.வி.ஓ. (டிஸ்டிரிக்டு வெடரினரி ஆபீசர்) ஒருவர் இருந்தார். அவர் என்ன செய்தார் என்றால், நாட்டுக் காளைகளை எல்லாம் காயடித்துவிட வேண்டும், அப்போது தான் சாதாரண ரகங்கள் உற்பத்தியாகாமல், உயர் ரகங்கள் உற்பத்தியாகும் என்று முனைப்பு இயக்கத்தை, தீவிர இயக்கத்தை ஏற்படுத்தி அனைத்து ஊரிலும் காளைகளுக்குக் காயடித்து விட்டார்கள். ஆனால் செயற்கை முறையில் கருத்தரிக்க அவர்கள் அலுவலகத்திற்கு வந்தால்தான் ஊசி போடுகிறார்கள். மாடு சத்துகின்ற நேரத்தில் ஊசி போட்டால் தான் கருத்தரிக்கும்; மற்ற நேரத்தில் போட்டால் கருத்தரிக்காது என்கிறார்கள். கிராமத்தில்

இருப்பவர்களுக்கு மாடு கருத்தரிப்பதற்கு லாயக்காக இருக்கிறதா என்று அறிந்துகொள்ள அறிவு இல்லை. எனவே அந்தத் துறையைச் சேர்ந்த அலுவலாளர்கள் அங்கங்கே இருக்கின்ற மந்தைக்கு நேரடியாகச் சென்று, கருத்தரிக்க எந்த மாடு லாயக்கு என்று பார்த்து மந்தையிலேயே செயற்கை முறையில் கருத்தரிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால், அந்த முறை நல்லவிதத்தில் வெற்றிபெறும் என்று நான் நம்புகிறேன். அதே நேரத்தில் கால்நடைத் துறைக்கு ஒதுக்கியிருக்கின்ற பணம் மிகவும் குறைவாக இருக்கிறது. இன்றைய தினம் கோழி வளர்ச்சிக் கழகத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்கு 15 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதுமானதா என்று பார்க்கின்ற நேரத்தில் நிச்சயமாகப் போதாது என்று தான் நான் கருதுகிறேன். காரணம் என்னவென்றால், அந்தக் கழகமானது லாபத்திலே ஓடிக்கொண்டிருந்த பண்ணைகளையும் எடுத்துக்கொண்டது. பிற்பகல் 4—50
நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருந்த பண்ணைகளையும் எடுத்துக்கொண்டது. ஒரு திட்டத்தைத் துவக்குகிற நேரத்தில், படிப்படியாக அலுவலர்களைப் போடுவார்கள். ஆனால் இந்தத் துறையிலே ஆரம்பத்திலேயே அதிக அலுவலர்களை, அந்த டிபார்ட்மென்ட்டிலே இருந்தவர்களை அப்படியே எடுத்துக்கொண்ட காரணத்தால், 14 லட்சம் ரூபாயானது அவர்களுடைய சம்பளத்திற்கு மட்டும் தான் போதுமானதாக இருந்ததே தவிர, வளர்ச்சிப் பணிகளுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, அந்தத் துறை மேலும் வளரவேண்டுமென்பதால், இன்னும் அதிகத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

இன்றைய தினம் பால் வளர்ச்சிக் கழகமானது உருவாக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது. அந்த அறிக்கையைப் படிக்கின்ற நேரத்திலே, அவர்கள் ஜனவரி மாதத்திலே 69,000 லிட்டர் பாலை உற்பத்தி செய்திருக்கிறார்களென்பது தெரியவருகிறது. சாதாரணமாக, கோடைக் காலத்திலே பால் குறையுமென்று சொல்லுவார்கள். ஆனால் இந்தக் கழகத்தின் மூலமாக, 69 000 லிட்டராக இருந்தது, 1,05,000 லிட்டராக உயர்ந்திருக்கிறது. மேலும் 6,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்குமென்ற அளவிலும் இருக்கிறது. ஒரு விவசாயி நல்ல முறையில் இருக்க வேண்டுமென்று சொன்னால், விவசாயத்திற்கு உபகரணமாக இருக்கக்கூடிய கோழி வைத்திருக்க வேண்டும்; ஆடு வைத்திருக்க வேண்டும்; மாடு வைத்திருக்க வேண்டும். இன்றைய தினம் ரசாயன உரத் தட்டுப்பாடு என்று சொல்லுகிறார்கள். இந்த நேரத்தில் நாம் கோழிப் பண்ணைகளை அதிகமாக வைத்தால், அந்தக் கோழிச் சாணத்திலே யூரியாவில் இருக்கும் நைட்ரஜனைக் காட்டிலும், அதிக நைட்ரஜன் இருக்கிறதென்று சொல்லுவதால், அது நல்ல உரமாக இருக்கும். எனவே ஒவ்வொரு விவசாயியும் கோழிப் பண்ணையை வைப்பதற்கு அரசு ஒரு சிறந்த திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். பல நல்ல திட்டங்களை நமது அமைச்சரவர்கள் ஆழ்ந்த யோசனையின் பேரில் சொல்லியிருக்கிறார்கள். மேலும் இதைச் செய்வார்களானால், இந்தத் துறை நன்றாக வளருமென்ற என்னுடைய நம்பிக்கையைக் கூறி, பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

திரு. அ. அய்யணன் அம்பலம் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்று விவசாயத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ஏறத்தாழ 69 கோடிக்கு மேல் விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. நம்முடைய அமைச்சரவர்கள் அறிக்கையை வாசிக்கும்போது, இரசாயன உரமென்பது இந்திய தேசத்தில் மட்டுமல்லாமல், உலக நாடுகளிலும் பற்றாக்குறையாக இருக்கிறதென்று சொன்னார்கள். அதைச் சொன்னால் நாட்டு மக்களும், விவசாயிகளும் மனநிறைவு அடைய மாட்டார்களென்றும் சொன்னார்கள். அது ஓரளவுக்கு உண்மைதான். நம்முடைய அமைச்சரவர்கள்கூட அது குறித்து மனநிறைவு அடைய மாட்டார்கள். அவர்கள் விவசாயத்தில் அதிக அக்கறையும், ஆர்வமும் உடையவர்கள்.

விவசாயிகளுக்கு முதலில் தேவைப்படும் தரமான விதைகளை பல ஆண்டுகளாக உற்பத்தி செய்து, விவசாயிகள் மத்தியில் அறிமுகப்படுத்தி, அதன் மூலம் விவசாயிகள் நல்ல பலனை அடைந்திருக்கிறார்களென்பதை மறுக்க முடியாது. இன்னும் புதுப் புது விதைகளை, காலத்திற்கேற்றவாறு விவசாய விதை உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது தமிழ் நாட்டு விவசாயிகள், விவசாய இலாகாவுடன் நல்ல முறையிலே ஒத்துழைத்து, உணவு உற்பத்தியைப் பெருக்கி இந்த மாநிலம் தன்னிறைவு பெற்ற மாநிலமென்பதைக் காட்டியிருக்கிறார்கள். அது பற்றி திரு. வெங்கா அவர்கள் வெகு அழகாகச் சொன்னார்கள்.

இப்போது பயிரிடும் புது ரக நெல்கள் அதிகப் பூச்சிகளால் தாக்கப்படுகின்றன. அந்தப் பயிர்களை பூச்சிகள் தாக்கும்போது, விவசாயிகள் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள விவசாய இலாகா டெப்போக்களுக்குச் சென்று, பூச்சி மருந்துகளைக் கேட்டால், காலத்தில் கிடைக்கவில்லை. இதை மாண்புமிகு அமைச்சரவர்களும் ஒத்துக்கொள்வார்களென்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, பூச்சிக் கொல்லி மருந்து வேளாண்மைக் கிடங்குகள் மூலமாக விற்கப்படுகிறது. ஒரு யூனியனில் இரண்டு அல்லது மூன்று கிடங்குகள் இருக்கின்றன. தமிழகத்தில் மொத்தம் எண்ணூற்றுச் சொச்சம் கிடங்குகள் இருக்கின்றன. அங்கே பூச்சிக் கொல்லி மருந்துகள் விற்கப்படுகின்றன, எனக்குத் தெரிந்தவரையில், வேறு மாநிலங்

களிலிருந்துகூட இங்கே வந்து வாங்கிக்கொண்டு போகிறுர்கள். அதன் காரண மாக சில இடங்களில் தட்டுப்பாடு இருக்கிறது. இங்கே விவசாயத் துறையின் கை வசம் போதுமான அளவுக்கு பூச்சிக் கொல்லி மருந்து இருப்பதால், அதைப்பற்றி நான் அதிகம் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது அவர்களுடைய பிளாக்கிலே, வட்டாரத்திலே பூச்சிக் கொல்லி மருந்து இல்லையென்று சொன்னுல், உடனடியாக அந்த இடங்களுக்கு பூச்சிக் கொல்லி மருந்துகளை அனுப்பும்படியாகச் சொல்லியிருக்கிறேன்.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். நானும் ஒரு ஊராட்சி ஒன்றி யத்தில் பொறுப்பில் இருக்கிற காரணத்தால் கூறுகிறேன். என்னுடைய ஊராட்சி ஒன்றியத்திலேகூட குறிப்பிட்ட காலத்திலே விவசாயிகளுக்கு பூச்சிக் கொல்லி மருந்தைக் கொடுக்க முடியவில்லை என்பதை நான் அறிவேன். நான் இதை ஏன் சொல்கிறேன் என்ருல், ஓரளவுக்கு விவசாய இலாகாவுடன் தொடர்பு கொண்டுள்ள முற்போக்கு விவசாயிகள் தங்களுடைய பயிர்களுக்கு மருந்துகளைத் தெளிக்கிறுர்கள். ஆனுல், சில விவசாயிகள், அவர்களுக்கு வசதிகளும், வாய்ப்புகளும் இல்லாத காரணத்தால் கஷ்டப்படுகிறுர்கள். ஒரு விவசாயிக்கு 100 ஏக்கர் நிலம் இருக்கிறதென்ருல், 80 ஏக்கர் நிலத்திலுள்ள பயிர்களுக்கு மருந்துகளைத் தெளிக்கிறுன். 20 ஏக்கர் நிலத்தில், வசதியில்லாத காரணத்தால் தெளிக்காமல் விட்டுவிடுகிறுன். எனவே, அந்த நிலங்களிலுள்ள பூச்சிகள் போவதுமில்லை; அதைத் தடுக்கவும் முடிவதில்லை. எனவே, 20 ஏக்கரிலுள்ள பூச்சிகள் அடுத்துள்ள நிலங்களுக்கும் பரவிவிட ஏதுவாகிறது. தொத்து நோய்களைத் தடுப்பதற்கு எந்த அளவுக்குச் சுகாதார இலாகா பொறுப்பு ஏற்றிருக்கிறதோ அந்த அளவுக்கு விவசாய இலாகாவும் இந்தப் பூச்சிகளை ஒழிக்க காலத்தில் மருந்து அடித்து, மற்ற நிலங்களுக்குப் பூச்சி பரவாமல் தடுக்க வேண்டும். இதற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்க வேண்டும். இதை அரசாங்கம் ஒரு சுமையாகக் கருதக் கூடாது. கோடிக் கணக்காக விவசாயத்திற்குச் செலவு செய்யும்போது, இதையும் அரசாங்கம் செய்தால், ஓரளவுக்கு உதவியாக இருக்குமென்று, நான் என்னுடைய வேண்டுகோளாக நம்முடைய அமைச்சரவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவரவர்களே, அரசாங்கச் செல விலே பூச்சி மருந்தைத் தெளிப்பதாக இருந்தால், 6 கோடி ரூபாய் செலவாகும். அந்த அளவுக்கு நிதி ஆதாரம் இருக்கிறதாவென்று பார்க்க வேண்டும். விவசாயம் என்பது லாபகரமாகச் செய்யப்படுகிற தொழிலென்று மனதில் வைத்துக்கொண்டு பேச வேண்டும். விவசாயம் செய்வதென்ருல், பூச்சி

மருந்துக்குச் செலவு செய்ய வேண்டும்; உரத்திற்குச் செலவு செய்ய வேண்டும்; விதைகளுக்குச் செலவு செய்ய வேண்டும்; அறுவடைக் கூலிக்கான செலவு செய்ய வேண்டும். இவ்வளவும் செய்து, பிறகு அதில் மிச்சமிருக்குமானல் தான் அதை ஒரு 'பிசினஸ்' என்று கருத முடியும். இன்றைக்கு விவசாய மானது நல்ல வருவாய் தரக்கூடிய தொழிலாக இருக்கிறது. அந்த வருவாயி லிருந்து ஒரு பகுதியை மருந்துச் செலவுக்குக் கொடுப்பதில் எந்தவிதத் தடையும் இருக்காது.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தமது அமைச்சரவர்கள், இருமாகப் பூச்சி மருந்து தமிழகத்தில் அடித்தால், 6 கோடி ரூபாய் செலவாகுமென்று சொன்னார்கள். (குறுக்கீடு.) ஆறு கோடி ரூபாய் அரசாங்கத்திற்குச் செலவாகு மென்று சொன்னார்கள். இப்போது 500 கோடி ரூபாய் அளவுக்கு பட்ஜெட் போட்டு செலவு செய்யக்கூடிய அரசாங்கம், இந்த நாட்டினுடைய உணவுப் பிரச்சினைக்கு, எல்லோருடைய தன்மானப் பிரச்சினைக்கு, இந்த சுய தேவைப் பிரச்சினைக்கு 6 கோடி ரூபாய் செலவு செய்தால், அரசாங்கத்திற்கு அது ஒரு பெரிய செலவாக இருக்காதென்று சொல்லிக் கொள்கிறேன்.

பிற்பகல் 5—00 விவசாயத்தில் நல்ல லாபம் கிடையாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் சொன்னார்கள். அது உண்மை. ஆகவே, விவசாயி களுக்கு அரசாங்கம் உதவி செய்தால் நல்ல முறையிலே இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்பமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் விவசாயிகளுக்கு உரம் கிடைப்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆறுவது மாதத்தில் 50 ரூபாயாக இருந்த 17.17.17 உரம் 65 ரூபாய் ஆகி

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கடைசி 17 தேவையில்லை. அதைக் கடைசியிலே சொல்கிறேன்.

திரு. அ. அய்யணன் அம்பலம்: இப்பொழுது 80/12 ஆகி, 97 ரூபாயாக வந்திருக்கிறது. ஒரே மாதத்தில் 50 சதவிகிதம் அளவிற்கு உரத்தின் விலை கூட்டப்பட்டிருக்கிறது. அப்படி 50 சதவிகிதம் அளவிற்கு விவசாயிகள் வாங்கும் உரம் விலையேறி இருக்கும்போது, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள் களுக்கு எந்த அளவு அரசாங்கம் விலை நிர்ணயித்திருக்கிறது என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.

அதேமாதிரி யூரியா உரம் 49 ரூபாயிலிருந்து 65 ரூபாயாகி, இப்பொழுது இன்னும் அதிகமான விலைக்கு விற்கிறது. ஆனல், அந்த அளவிற்குக்கூட யூரியா உரம் கிடைக்கவில்லை. இந்த உரங்கள் எல்லாம் எப்படி வருகின்றன,

எந்த அளவிலே விநியோகம் ஆகின்றன என்பது தெரியவில்லை. நான் மாவட்டங்களிலே உள்ள அதிகாரிகள் யாரையும் குறை சொல்லவில்லை. இந்த உரத்தை யார் விநியோகிக்கிறார்கள், யாருக்கு அந்தப் பொறுப்பு இருக்கிறது என்ற விவரமே தெரியவில்லை. விவசாய இலாகாவிலே கேட்டால், எங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இந்த உரம் வரக்கூடிய முறையைப்பற்றியும், அது விநியோகிக்கக்கூடிய முறையைப் பற்றியும் ரெவின்யூ சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள் போன்றவர்களைக் கேட்டால் அவர்களுக்கும் தெரியவில்லை. வியாபாரிகளுக்கும் அது பற்றித் தெரியவில்லை. கூட்டுறவு இலாகாவைக் கேட்டால், எங்களுக்கு அதில் முழுப் பொறுப்பும் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த ராஜ்யத்தில் உரம் எந்த முறையில் வருகிறது, எந்த இலாகாவின் மூலம் வருகின்றது, எப்படி விநியோகிக்கப்படுகிறது என்பனவற்றுக்கு திட்டவட்டமான முறை இல்லை. விவசாய உற்பத்தியை விவசாய இலாகாவினர் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அதிலும் குறிப்பாக ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலேயுள்ள விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள்தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் விவசாயிகளிடம் நேரடியாகச் சென்று, ஐ.ஆர். 8, கருணை, காஞ்சி என்ற அதிதீவிர மகசூல் கொடுக்கும் நெல்லை விவசாயம் செய்ய வேண்டுமென்று விவசாயிகளை ஒப்புக்கொள்ள வைக்கின்றார்கள். ஆகவே, அவர்களுடைய முயற்சியினாலும், அவர்களுடைய பிரசாரத்தினாலும் விவசாயிகள் முற்போக்கான விவசாயம் செய்கின்றார்கள். ஆனால், விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை அந்த அதிகாரிகள் எவ்வளவு போட வேண்டும் என்று சொல்கிறார்களோ அந்த அளவு உரத்தை, அவர்களுக்குக் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். உரம் போட வேண்டிய காலத்தில் விவசாயிகளைப் பார்க்க கிராமங்களுக்குக்கூட அவர்களால் செல்ல முடிவதில்லை. இதை நான் ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால், விவசாயிகளுக்கு ஆலோசனை சொல்வதோடு மட்டும் விவசாய இலாகா இருந்தால், விவசாய இலாகா தேவை என்பதிலே அர்த்தமில்லை. விவசாயிகளுக்கு ஆலோசனை சொல்வதோடு மட்டுமில்லாமல், விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்றவற்றையும், எப்படி வீரிய விதைகளைக் கொடுக்கிறோமோ, எப்படி கொழுஞ்சி விதைகளைக் கொடுக்கிறோமோ, அதுபோலவே இவற்றையும் விவசாய இலாகாவே விநியோகம் செய்யக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையின் மூலம் விற்பனை செய்வதால் அதற்கு லாபம் வருகிறது என்பதால், அதன் மூலம் விற்பனை செய்யலாம். ஆனால், யார் யாருக்கு எந்த அளவு கொடுக்க வேண்டும் என்பதை ஏற்கும் பொறுப்பு விவசாய இலாகாவிடந்தான் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயப் பயிர் இன்ஷூரன்ஸ், கார்டு முறைகள் பற்றியெல்லாம் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். ஆகவே, நான் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. எனவே, கால்நடை இலாகாவைப்பற்றிப் பேச வேண்டு மென்றால், அந்த இலாகா இருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. ஏதோ மாவட்டங்களில் கால்நடை அதிகாரிகள், டெபுடி டைரக்டர்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய சேவை விவசாயிகளுக்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்றால், ஒன்றுமில்லை என்றுதான் வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த இலாகா ஒரு மாற்றாந்தாய் இலாகா மாதிரி இருக்கிறது. அந்த இலாகாவினால் விவசாயிகளுக்கு எந்தவிதமான உதவியும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ செயற்கை முறையில் கருதரிக்கச் செய்யும் முறைகளுக்காக ஆங்காங்கே செண்டர்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே உள்ள அவைகூட அதிகமாகப் பயன்படுவதில்லை. கால்நடைகளை அதிகமாக வளர்ச்சிபெறச் செய்ய வேண்டுமென்று கூட்டுறவு இயக்கம் மூலமாகவும், அரசாங்க வங்கிகள் மூலமாகவும் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். கால்நடைகளை கன்றுகளாக வாங்கி வளர்த்து பெரிய பசுக்களாக மாற்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் கொடுக்கிறார்கள். விவசாயிகள் தங்களுடைய சொத்தை ஈடுகொடுத்து கடனை வாங்கிக்கொண்டு, கன்றுகள் வாங்க வேண்டுமென்றால், அவற்றை எங்கே வாங்குவது என்று தெரியவில்லை. அதற்காக ஊரெல்லாம் அலைகிறார்கள். ஆகவே, எதற்காக இந்தக் கடன் கொடுக்கப்படுகிறது? அதனால் என்ன பலன்? அரசாங்கம் கன்றுகள் உற்பத்தி செய்வதற்கு பத்திருபது ஆண்டுகளில் திட்டங்கள் போட்டிருக்கிறோம். கன்றுகள் வாங்கி, மாடுகள் வளர்த்து, பால் உற்பத்தியைப் பெருக்கி, முன்னேற வேண்டும் என்று நடைமுறைகள் இருக்கின்றன. கூட்டுறவிலேயும் பால் மாடு வாங்குவதற்கு கடன் கொடுக்கிறோம். ஆனால், மாடுகளில் விலையெல்லாம் ஏறிவிட்டது. கடன் வாங்கியதற்காக மாடுகளை வாங்க வேண்டும் என்பதற்காக தரம் இல்லாத மாடுகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அப்படி வாங்கி லாபமும் இல்லாமல், நஷ்டப்படுகிறார்கள். நல்ல பாலும் கிடைக்கவில்லை. இப்படி கடனைக் கொடுத்த பல கூட்டுறவுச் சங்கங்கள் அந்தக் கடனை வசூலிக்க முடியாமல் கலைக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. இதையெல்லாம் பரிசீலனை செய்து, எப்படி விவசாய இலாகா விதைகளை உற்பத்தி செய்து அதை அறிமுகப்படுத்தி, எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கும்படியாகச் செய்கிறதோ, அதேமாதிரி இந்த இரண்டு இலாகாக்களும் ஒரே அமைச்சரின் கீழ் இயங்குவதால், அவர்களும் கால்நடைகள் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டிராக்டர் வாங்குவதற்கு கடன் கொடுக்கிறார்கள், கால்நடைகள் வாங்குவதற்கு கடன் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். இதையும் அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது அதிகமாக இயந்திரக் கலப்பையில் உழவு செய்யப்படுவதால், அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக விவசாயிகளுக்கு டிராக்டர் கொடுக்கின்றார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதை அதிகப்படுத்த வேண்டும். குறிப்பாக என்னுடைய சொந்த மாவட்டத்தில், திண்டுக்கல்லில் ஒரு டிவிஷனல் விவசாய இலாகா அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னை இந்த சந்தர்ப்பத்தில் பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*புலவர் ஓ. அறிவுடைநம்பி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வேளாண்மைக் கொள்கை விளக்கக் குறிப்பின் கீழ் நானும் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தமை குறித்து மெத்த மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகின்றேன்.

எங்களுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது அமெரிக்க நாட்டிலிருந்து வந்த கோதுமையை துறை முகத்திலே பெற்றுக்கொள்கிற நேரத்தில் குறிப்பிட்டார்கள்: "இன்றைய தினம் இந்தக் கோதுமையை நாங்கள் கையேந்தி பெற்றுக் கொள்கிறோம். ஒரு நேரத்தில் தமிழகம் பிற பகுதிகளுக்கு உணவினை வழங்கியிருக்கிறது. ஆனால், இன்றைய தினம் கையேந்துகிறோம். நாளை நாமே பிற மாநிலங்களுக்கு வழங்கக்கூடிய ஒரு நிலை வரும்" என்று குறிப்பிட்டார்கள். இன்றைய தினம் அதைப் பெருமளவிற்கு விரிவுபடுத்திக் காட்டக்கூடிய புரட்சியை எங்கள் தலைவர், கலைஞர் அவர்கள் தங்களுடைய நல்லாட்சியின் மூலம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதனை நான் பாராட்டிப் போற்றக்கூடிய விதத்தில், வேளாண்மைத் துறையினர் எடுத்துக்கொண்டுள்ள தீவிர முயற்சிகளுக்கு என்னுடைய வாழ்த்துக்களை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக இந்த வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில், தமிழகம் பெற்றுள்ள வளர்ச்சியினை எல்லோரும் பாராட்டிப் போற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதே நேரத்திலே சீர்திருத்தங்கள் என்ற முறையில் சிலவற்றை எடுத்துச் சொல்வது நல்லது எனக் கருதுகிறேன்.

குறிப்பாக மாவட்டங்களிலே, மாவட்ட வேளாண்மை அலுவலர் என்ற பெயரில் நான்கிலிருந்து ஆறு பேரும் ஸ்பெஷல் டி.எ.ஓ. என்ற பெயரில் மூன்று நான்கு பேரும் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லாரும் ஸ்பெஷல் டி.எ.ஓ. என்று, வேளாண்மை அலுவலர்கள் என்று, தனித்தனியாக ஒவ்வொரு

பயிருக்குமாக இருக்கின்றார்கள். கரும்பிற்காக என்று ஒருவரும், பருத்திக்காக என்று ஒருவரும் இப்படி ஒவ்வொரு பயிருக்கும் ஒரு ஸ்பெஷல் டி.ஏ.ஓ. என்று இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் மாவட்டத்தின் தலை நகரங்களிலிருந்துகொண்டு பணியாற்றி வருகின்றார்கள். இப்படி இருப்பவர்களை பரவலாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலே, தாலுக்கா வாரியாக, வட்ட வாரியாக வைத்து அவர்கள் எல்லாப் பயிர்களையும் பார்க்கத்தக்க விதத்தில் அமர்த்தி உழவர்களுக்கு அறிவுரை வழங்கக்கூடியவர்களாக இருந்தால், அவர்கள் மேலும் சிறந்த முறையில் செயலாற்ற முடியும் என்று சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கின்றேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் இன்றைக்கு வேளாண்மை இணை இயக்குநர் என்ற பெயரில் டி.ஆர்.ஓ. என்ற தகுதியில் பணியாற்றி வருகின்றார்கள். அவருக்குள்ள கடமையெல்லாம் மாற்றம் செய்வதும், பணியாளர்களுக்கு இடம் ஒதுக்குவதும்தான். இந்தப் பணிகளை ஆற்றுவதற்கு அந்த இடத்தில் இணை இயக்குநர் என்ற அளவில் டி.ஆர்.ஓ. தகுதியில் ஒருவர் இருக்க வேண்டுமா என்று சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இவருக்குப் பதிலாக P. A. to the Director என்று ஒருவர் இருந்தால்கூட அதுவே போதும். அதிலே அரசுக்கும் ஒரு சிக்கனமான செலவு ஏற்படக்கூடும். நான் கேள்விப்படுகிறேன். இப்போது அந்தப் பதவியில் இருப்பவர் அண்மையில் ஓய்வு பெற இருக்கின்றார் என்று. அவருக்குரிய பதவிக்காலம் முடிவடையும்போது, அடுத்து நியமிக்கும் அதிகாரியை ஆர் டி.ஓ. கேடரில் P. A. to the Director என்று நியமிக்கலாம் என்ற யோசனையை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் ஒன்று, இரண்டாவது சம்பளக் கமிஷன், சிறப்பு ஊதியம், ஸ்பெஷல் பே என்று பல்வேறு துறையினர் பெற்று வந்ததை உயர்த்திக் கொடுத்திருக்கிறது. ஆனால், அரசினர் விதைப் பண்ணைகளிலே உள்ள இளநிலை எழுத்தர்களுக்கு முன்பு பத்து ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்த சிறப்புச் சம்பளம், இரண்டாவது சம்பளக் கமிஷனுக்குப் பிறகும் உயர்த்தப்படாமலேயே இருந்து வருகிறது. விதைப் பண்ணையிலே உள்ளவர்கள் மிகத் துன்பத்திற்கு இடையிலே பணியாற்றி வருகின்றார்கள். எனவே, அவர்கள் விஷயத்திலும் இந்தப் பத்து ரூபாய் என்று கொடுக்கப்பட்டு வரும் சிறப்புச் சம்பளத்தை ரூ. 25 என்றாவது உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல. இந்தத் துறையிலே 300 கண்காணிப்பாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு தருகிறோம் என்ற முறையில் தேர்வு நிலை கண்காணிப்பாளர்கள் என்று 25 பேருக்குப் பதவி உயர்வு கொடுத்திருக்கின்றார்கள். அந்த 300 பேரில் பெரும்பகுதியினர் இன்னும் கொஞ்ச காலத்திலே வேலையிலிருந்து ஓய்வு பெறக்கூடிய நிலையில் இருக்கின்றார்கள். எனவே, இப்போது கொடுக்கப்பட்டுள்ள 25 தேர்வு நிலை கண்காணிப்பாளர்கள் என்பது அவர்களில் பெரும்பாலோருக்கு எந்தவிதப் பயனையும் கொடுக்காமற் போய்விடக்கூடும். 300-க்கு 25 என்று இருப்பது 12-க்கு ஒன்று என்ற விகிதத்தில்தான் இருக்கின்றது. ஆனால், இரண்டாவது சம்பளக் குழு தன் அறிக்கையில் பகுதி 9-ல், கண்காணிப்பாளர் என்ற தலைப்பின் கீழே 3 : 1 அல்லது 4 : 1 என்ற அளவில், மூன்று பேர் சாதாரண நிலையில் இருந்தால், அதிலே ஒருவர் தேர்வு நிலைக்கு வரலாம் என்று அனுமதித்துள்ளது. அதை அரசும் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதே நிலை பிற துறைகளிலே ஏற்றுக்கொள்ளப் பட்டும் இருக்கின்றது. வருவாய் வாரியத்தில், உணவு உற்பத்தித் துறையில் ஆறு கண்காணிப்பாளர்கள் இருக்கின்றார்கள் என்றால், அவர்களிலே 3 பேர் ஸெலக்ஷன் கிரேடில் இருக்கின்றார்கள். வருவாய் வாரியத்தில், லேண்டு ரெவின்யூவில் 21 கண்காணிப்பாளர்களுக்கு 8 பேர் தேர்வு நிலையாளர்களாக இருக்கின்றார்கள். அதேபோல பிற்பட்டோர் நலத் துறையில் 6 கண்காணிப் பாளர்களுக்கு 2 தேர்வு நிலை கண்காணிப்பாளர்கள் என்று இருக்கின்றார்கள். மூன்றில் ஒருவருக்குத் தரலாம் என்று இருக்கும் நிலையில் இந்தத் துறையிலுள்ளோருக்கும் ஏன் அதைத் தரக்கூடாது என்று வேண்டிக்கொள்ளவே இதை இந்த நேரத்தில் எடுத்துச் சொன்னேன். மூன்றில் ஒன்றோ அல்லது நாலில் ஒன்றோ என்ற அளவில் இந்த 300 கண்காணிப்பாளர்களில் ஒரு 75 பேருக்காவது தேர்வு நிலை கண்காணிப்பாளர்கள் என்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனை வேளாண்மைத் துறை இயக்குநரும் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதாக அறிகின்றேன்.

இன்னும் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லுவேன், வேளாண்மைத் துறைக் கிடங்குகளில் பணியாற்றுகின்றவர்கள் உரம் மற்றும் பூச்சி மருந்துகளுக்கு இடையில் பணியாற்றுகின்றார்கள். அதனால் அவர்களுடைய உடல் நலமும் பாதிக்கப்படுகிறது. எனவே, அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் என்ற பெயரில் சிறப்பூதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வேளாண்மைத் துறையில் நமது தமிழக அரசு ஏராளமான நன்மைகளைச் செய்திருக் கின்றார்கள், அதோடு இந்த ஊழியர்களுக்கும் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற பெருநம்பிக்கையுடன் என் உரையினை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* THIRU A. R. DAMODARAN: Hon. Deputy Chairman, Sir, I rise to offer my remarks on the Policy Note on Agriculture and Animal Husbandry placed by the Hon. Minister before this House. In reviewing the performance of agricultural department in Tamil Nadu, Sir, one cannot lose sight of the very impressive fact that we have established the most impressive record in the field of paddy cultivation and this is vouchsafed by the fact that over a period of 10 years, the production of paddy in terms of rice has risen from 3.87 million tonnes in 1963-64 to 5.7 million tonnes in the year 1973-74. At a time when the whole of India is groaning under a scarcity of foodgrains, Tamil Nadu is literally an oasis and I would like to congratulate not only the officers of the Agricultural Department and the thousands of Extension Workers but also the farmers of Tamil Nadu who have co-operated so well in the various development programmes and have made this result possible.

Sir, only a few days ago, I was in the city of Bangalore and as is usual with me, the first enquiry that I made was the price at which rice was available in Bangalore City. I was informed that the price was approximately Rs. 2.30 per K.G. as compared to the open market price of Rs. 1.40 in Tamil Nadu. If, today, the weaker sections of society in Tamil Nadu, more particularly the thousands of people who are employed in our factories, in our Government departments are comparatively better off, not a little of it is due to the very good co-operation that the farmers have given in the various development programmes that have been enunciated by the Agricultural Department. I wish, however, Sir, that I could pay the same compliment in regard to the production of oil-seeds and pulses. Unfortunately, Sir, in spite of various efforts that have been made and exhortations that have been given for the past 6 or 7 years, the production of oil-seeds is very far from satisfactory and I have often stressed this while participating in debates on the agricultural policy in our state. According to the figures given in our own statistical tables, in 1963–64, the production of groundnut was 1.1 million tonnes whereas the anticipated production in 1973–74 is only of the order of 1.15 million tonnes. Taking the next oil—seed crop, gingelly, while the production was 35,000 tonnes in 1963–64, the production is slightly under 42,000 tonnes in the year 1973–74.

Sir, agriculture is the back-bone of all economic progress in our country, because 50 per cent of the Gross National Product comes

from agriculture and as has been proved by events that have taken place in other States, any shortage in the production of oil-seeds and, therefore, of edible oils, is likely to result in an explosive situation and I would particularly like to commend to the Hon. Minister that if at all we have to devote greater attention in the field of foodgrains production, we must have well-organised plans for improving the productivity as well as the actual production of oil-seeds in our State. I am aware of the fact that many schemes have been enunciated and these have also been outlined by the Hon. Minister in his Policy Note. We have a number of Research stations doing very good work on obtaining improved varieties of oil-seeds. But, at the same time, Sir, somehow or other, the impact on the farmer has not been very vivid, as a result of which in spite of the excellent price which oil-seeds are obtaining in the market, the production has still not kept pace with the huge demand that has been generated for it. I would like the Agricultural Department to pay particular attention to the production, to the increased production of groundnut oil and more so, gingelly, because, according to medical advice, gingelly oil is supposed to be very good for health and it keeps down the cholestrol content in our blood and many doctors have recommended this particular oil in preference to other products like groundnut oil or even Vanaspathi.

Sir, the high-yielding variety programme has paid rich dividends in our State. As I mentioned, it is only because of the high yielding varieties of paddy that have been introduced in Tamil Nadu that we have achieved spectacular success in the field, resulting in our being probably the second or the third largest producer of paddy in the whole of India. Only West Bengal beats Tamil Nadu's record in the year 1972–73, because it is particularly well-placed. It is in the Gangetic plain and they have plenty of water and possibly, therefore, they have done much better. But the whole high-yielding variety programme is in grave danger today, as has been pointed out by the previous speakers, Thiru Venga and the other gentleman who participated in the debate. The whole high-yielding variety programme is in danger today because of the lack of two very important in-puts, namely, fertiliser and also pesticides. The Hon. Minister, while replying to the debate in the Assembly—I was following the proceedings very closely—mentioned that there was a world-wide shortage of chemical

fertilisers and that Tamil Nadu's demand for more fertilisers had not been met by the Central Government. While I agree entirely with him on both these aspects, may I say that whatever the appeals we may make to the Government of India, regarding fertiliser availability, the present conditions in the world render it impossible for the Government of India to ever satisfy the requirement of farmers at least for the next two or three years. How has this occurred? I do not want to deal with it now. Probably the delay in decision-making in sanctioning the new fertiliser plants has had a great deal to do with the fertiliser shortage that exists in our country. Probably if the Mithapur project had come up in 1967-68 which envisaged the production of over 360,000 tonnes of nitrogen and if many of these fertiliser factories had come up 4 or 5 years ago, we would not be facing this critical shortage. If perhaps our Government had also realised that the world-wide shortage of fertiliser was developing and if they had entered the market possibly one year ago and settled certain forward contracts, these troubles may not have arisen. But, it is pointless to dwell on this aspect at the present stage. The situation is that we are having 50 to 60 per cent shortages in the field of fertiliser and somthing must be done at the State level to combat the situation that is likely to develop because, as I said, farmers are highly sensitive and any set-back in the high-yielding variety paddy yield will prove a set-back in the entire development activity of agriculture and pull down the State in so far as production of paddy is concerned.

Sir, while I agree that chemical fertilisers are very essential and that without that any High Yielding Variety Programme is not likely to succeed, may I suggest for the consideration of the Agriculture Department the need of thinking in terms of increasing our own methods of producing organic manures as well as green manures? Sir, we have come across many panchayat unions not having enough stock of green manure seeds. I think this is a field where we should certainly devote attention because I think these can be produced in our own country in adequate qualitities and we do not have to spend valuable foreign exchange. Although the percentage of nitrogen per kilogramme of green manure or organic manure may be very low, we must realise that half a dozen green manure trees planted on the bunds in our fields will produce so many pounds of leaves that in terms of bulk and mass it will be more than compensated by the shortages

[Thiru A. R. Damodaran]

of chemical fertilisers that exist. We have been used, in our areas, to growing such varieties as glyricidia, Sesbania, Indigo and Daincha and even in these green manures, I am sorry to say that many Panchayat Unions do not keep ready stock of seeds and even where they do keep stock of seeds, these seeds do not germinate when they are sown in the fields, as a result of which a proper yield of green manure plants does not come about. I hope, Sir, that in view of the serious shortage in chemical fertilisers, the Hon. Minister will start a special programme for cultivating green manure plants as well as for utilising all possible organic waste in our villages and in our urban areas. I was very happy to see that some special aid was likely to be forthcoming from the Government of India for compost manufactures. But somehow, Sir, speaking personally with my experience as Municipal Chairman in Cuddalore, I must say that our Municpilities do not attach much importance to compost manufacture. The compost that is manufactured is rarely of that good quality which is required in our fields and although there is a very good demand, somehow, our local bodies have not found it possible to co-operate very well in the production of compost manure. Probably, there are practical difficulties and if there are such difficulties, I would like the Agriculture Department to look into this matter and see that proper attention is paid to the production of these manures.

Sir, the other matter to which I wanted to refer was the steadily deteriorating condition of our soil in areas especially where we grow two or three paddy crops. The soil-testing laboratories that have been set up have been doing very good work but I have always felt that farmers have not taken sufficient advantage of this facility because of the practical difficulties involved in taking fifteen or sixteen samples of a soil to a soil-testing laboratory. Too much of time and effort is required and many farmers cannot afford either the time or the leisure for this activity. I would, therefore, suggest to the Hon. Minister to find out whether he could not introduce greater mobility in our agricultural services. We may have a number of research stations which mav be doing very good work, we may be having hundreds of District Agricultural Officers; but the real man, the real pivot in the agricultural field is the extension worker. Even in the United States of America, thirty to forty years ago, when they decided to develop agriculture as a major industry in which they have succeeded to a very

large extent, it was entirely due to the mobility of the agricultural services which, unfortunately, is lacking in India. I do not wish to say that they do not have the enthusiasm to do this job. Unfortunately, I think the facilities are not given and many extension workers who have to walk miles from the Panchayat Union Offices naturally get very tired and they rarely visit one or two villages per day. Since timely inputs are required, a great deal of good activity is going to waste. Especially now with the serious increase in the price of petrol, I think even the District Agricultural Officers are finding it very difficult to go about in their Jeeps and so, they have to sit in their offices. This state of affairs, if allowed to continue, would mean a great deal of waste. I would, therefore, request the Hon. Minister to find out what are the means by which greater mobility could be introduced in agricultural services and especially with regard to the extension workers, whether they could not draw up weekly programmes of visit—if they have, for example, 30 or 25 villages under the control of a particular Extension Officer, whether it would not be possible to draw up daily programmes to visit these villages to give advice to the farmers, to help them in taking out samples for soil-testing and give all the other advice that is available with the Extension Officer.

5—30 பி. ப.

Sir, the other aspect to which I would like to refer is that we should not attach too much importance only to production of paddy. Other States have devoted attention to other commercial crops also, and while we have done well in paddy—as I mentioned, our yields are very good, productivity is excellent—I must confess that in the development of other crops we have not devoted that degree of attention that other States have possibly done, particularly in the fields of cotton and tobacco. In the matter of the farmer not getting a remunerative price for paddy, I can assure the hon. Member Thiru Venga, in spite of his very spirited appeal, that the farmer will always be a discriminated factor in our economics, for the simple reason that the number of consumers runs into millions and when Governments think in terms of increasing the price of paddy, they are always having in their minds the impact that it would have, on the additional expenditure on dearness allowance, the amount of allowances that they would have to pay the Government servants and the general increase in the cost of living

that may result as a result of giving a remunerative price to the farmer. In fact, I was rather unhappy to see that while the Government of India were anxious to increase the prices of paddy, the only Governmet that seem to have protested, although it was not publicised, were the Tamil Nadu Government which said that they were not in favour of increase in the procurement price for paddy. Sir, while I agree that the impact on the consumer is likely to be severe, at the same time, we must realise that conditions have changed enormously in our villages, that labour charges have gone up, the cost of ploughing has gone up, the cost of bulls has gone up, the cost maintenance of bulls has gone up, the cost of fertiliser, the cost of irrigation water, everything has increased but, unfortunately, the paddy cultivator in Tamil Nadu is the only person in the whole of India—perhaps even in the whole world—who is getting the lowest price for paddy anywhere in India at present. I would plead that even if the Government are not able to give him that amount of increase in prices that is warranted by the actual cost of inputs, they can at least try to increase the prosperity of the farmer by introducing other crops which he can grow on his land, particularly the cash crops of cotton and tobacco and the cultivation of such fruits like grapes which has become a very handsome industry in States like Andhra and Karnataka. One acre of grapes can fetch a gross income of somewhere between Rs.12,000 and Rs.15,000. I think there has been something mentioned of grape cultivation being encouraged in Coimbatore. It is an excellent District for grape cultivation, the weather is suited for grapes and I hope they will be able to produce. I would also request that grape cultivation be introduced in other areas in small extents so that small farmers may be able to take advantage of it. Even if they have 30 or 40 cents, they can get very good income which may perhaps set off the loss that they are incurring in growing such crops as paddy.

Sir, I have dealt with agriculture sufficiently and I have only five minutes more. May I refer very briefly to the field of Animal Husbandry Sir, ever since the Key Village Scheme was given up in our State in 166–67, unfortunately, a great prejudice developed against poultry farm and against all types of animal husbandry work, because people started thinking in terms of getting immediate dividends for the amount of investment that was made in the sector. This is not a field like agriculture where you can see

crops grow before your eyes in four months or five months' time. Animal husbandry work as well as poultry development work requires sustained effort, sustained investment and probably the good measures which the Hon. Minister may initiate in the year 1974 may not give any positive results excepting a few years hence. I myself am a breeder of cows in a very small way. Although we started with two cows in the year 1955 and we have possibly 10 or 11 good cross-breed cows to lay, it has taken us a period of 16 years to raise the milk yield from our cows. Therefore, in the field of animal husbandry, immediate results could never be expected and we must be prepared to wait for some time before evaluating and judging the progress of any scheme that may be introduced. It is in this respect, Sir, that I particularly welcome the Key Village Scheme that is being introduced. It was an excellent scheme and I do not know why it was given up. The only way in which we can improve the strain and breed of our cattle in our villages and improve the milk yield is to have the Key Village Scheme; it should have a complete intensive development area where all the country bulls are compulsorily castrated, good bulls are introduced and the artificial insemination centres are located in more interior villages, so that the farmer may be able to get his cow inseminated as soon as the cow comes to heat. My hon. Friend Thiru Venga has referred to a very pertinent point that if he has to wait for more than 24 or 36 hours, the cow does not retain that quality and the impregnation is not successful, as a result of which the farmers have to wait for one month more. In foreign countries, a cow comes to heat within 16 to 17 months, whereas in our country, due to lack of proper diet and nutrition the cow comes to heat only in 30 to 35 months and, therefore, the long time over which a farmer has to feed his cow and maintain it results in the capital investment increasing to such an extent that he does not look after the cow properly. This is probably the reason why Tamil Nadu has one of the lowest milk yields not only in our country but perhaps in the whole world. I hope that this Key Village Scheme will be pursued with enthusiasm and the Minister for Agriculture who is always fond of asking for quick results will not make the mistake of asking for results within one year and ask the officers to produce cross-breed cows of excellent pedigree within a period of 2 to 3 years. It may even take ten years. I hope that he will be able to pursus this with necessary vigour and patience.

Sir, I would like to refer to the programme for poultry development, because I am greatly interested. I have always been interested in it, because I consider this to be a very useful occupation for the farmer. Reference has been made to the State Bank Scheme for poultry development which was initiated one and a half years ago. I would like to inform the Hon. Minister that the State Bank Scheme has not been a thorough success, because, as anticipated, they were under the compulsion of extending aid to the weaker sections of our society and they started distributing 50 birds at a time to each farmer. As a result of this, poultry farming being what it is, if there was a sudden casualty, that poor farmer was neither able to repay the loan nor was he able to afford the cost of feed to feed the birds under his care. Therefore, I would request the Hon. Minister—I have already told him—to realise that in any such scheme of poultry development—I do not mind if he selects the weakest farmer in the locality—unless the farmer is given 500 birds—a minimum of 500 birds—no farmer will have the interest or the capacity to look after the poultry farm that is established. My estimate is that on a farm of 500 birds, the minimum income that would accrue to the poultry farmer would be of the order of Rs. 500 a month and unless this incentive is given the giving of 50 birds and 100 birds would be a total waste of the Government money. It is far better that he does not do anything of that kind and winds up the Corporation rather than resorting to such steps. We must have intensive development. Although money available may be limited, I am sure there are banks and possibly Corporations which may be able to help him. I would request him to take this particular aspect into consideration and to spread it out throughout the length and breadth of Tamil Nadu because there is a great future for poultry farming. I know this because I have a farm myself with above 3,000 birds with a laying capacity of 2,500 eggs and although the cost of feed has risen enormously, we must realise that when millets are not available for human beings, it is natural that millets will be quoted at a very high price for poultry feed. The present cost is anywhere between Rs. 95 and Rs. 100 per quintal. I understand that the Hon. Minister has a good scheme of producing poultry feed at Rs. 50 or Rs. 55 per quintal. If he is able to produce this feed at Rs. 50 or Rs. 55 per quintal, I can assure him that the price of an egg would come down to 22 or 23 paise against the present market price of 30 to 31 paise. I hope that the Poultry Development Corporation which

nas been in existence for over 7 to 8 months will start moving vigorously in the field and will not only think in terms of marketing the eggs that are collected from the farmers but will set up an entire scheme for the whole State whereby at least 1,500 Farms will be started in the next three months with progressive increase as the years roll on. He would be contributing very sigally to the prosperity of the farmer and of our rural areas.

One word more and I have done, Sir. Only Jeresy bulls are available at present and the semen from these bulls is being distributed in many of the Veterinary Centres in the districts of Tamil Nadu. I would request the Hon. Minister to consider that when we have to go in for cross-breeding of cows, we require pure Sindhi Bull's semen also as well as the other variety which has proved very successful in India, Red Danes. The Hon. Minister has taken credit for importing 20 bulls into Tamil Nadu. I realise that foreign exchange may be involved. But, considering the number of cows that have to be serviced, 20 bulls are hardly sufficient to do the job, even though they may be foreign bulls with great capacity. I doubt whether they could service all the cows in our areas. There are so many P.L. 480 schemes in which grants are given. We can import a thousand bulls and maintain them at various centres and the semen could be collected and kept in these Veterinary Centres. I would, therefore, request that the semen of a larger number of variety bulls may be stocked in our Veterinary Centres and that the collection of semen should be done on a very scientific basis. At present, these poor Extension Livestock Assistants have to cycle to the village and take semen in a small thermos flask in ice. The semen is likely to be absolutely spoilt. Considerig the power cuts that have occurred, even in the Artificial Insemination Centres, the semen is likely to get spoilt. These are all difficult factors that have to be taken note of. Since I do not have more time, I would like to stress and urge that the Key Village Scheme should be made a success, that the artificial insemination service should be rendered more widespread and that full attention should be devoted to the rural areas where our cattle require a great deal of improvement.

Thank you, Sir.

1974 மார்ச் 29]

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, வேளாண்மைத் துறைக் கொள்கைக் குறிப்பின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நான் என்னென்ன சொல்ல வேண்டுமென்று நினைத்திருந்தேனோ, அதை நண்பர்கள் திரு. வெங்கா அவர்களும், திரு. அய்யணன் அம்பலம் அவர்களும், திரு. தாமோதரன் அவர்களும் விரிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆகவே அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. 5—40 பி. ப.

பொதுவாக நமது அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற போது எவ்வளவு வேகமாக, துரிதப்படுத்தி வேலை செய்தார்களோ, அதே போன்று வேளாண்மைத் துறையிலும் செய்கிறார்கள். அவர் இந்தத் துறைக்கு வந்தவுடன், விவரம் தெரியாது என்று நினைத்தவர்கள் கூட தங்கள் கருத்தை மாற்றிக்கொள்ளும் வகையில், இந்தத் துறையிலும் சாமர்த்தியம் உண்டு என்று தெளிவாகத் தெரியும் வகையிலே பல முனைகளிலே முனைந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் இப்போது இருக்கின்ற சில குறைகளை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

உரம் வழங்கப்படும் முறைபற்றிக் கூற விரும்புகிறேன். நான் கோவாப் ரேடிவ் மார்க்கெட்டிங் சொசைடி பிரசிடெண்ட். இப்போது உர விநியோ கத்தை மார்க்கெட்டிங் சொசைடியிடமிருந்து எடுத்துவிட்டு, பெடரேஷன் மூலமாக விநியோகிக்கின்றார்கள். அப்படி விநியோகிக்கப்படுவது விவசா யிக்குப் போய்ச் சேருகிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு சரியான ஏஜென்சி இல்லை. எங்களை சூபர்வைஸ் செய்யச் சொல்கிறார்கள். எப்படியோ விவசாயி யிடத்திலிருந்து வியாபாரிகளிடத்தில் போய்ச் சேர்ந்து 56 ரூபாய்க்கு விற்க வேண்டியது பல மடங்கு அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. சொசைடி பிரசிடெண்டே விற்றுவிடுகிறார்.

(ஒரு குரல்: விவசாயிகளே சிலர் விற்றுவிடுகிறார்கள்).

விவசாயி விற்றாலும் சரி. இப்போது கார்டு முறை வைத்து கட்டாயமாக விவசாயிக்கு உரம் கொடுத்து வருகிறோம். அப்படி விவசாயி விற்றாலும் தண்டனை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் உரம் சரியாக விநியோகம் ஆகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தக் குறிப்பிலே 10,000 விதைப் பண்ணைகள் ஏற்படுத்த திட்ட மிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது எங்கோ ஒரு இடத்தில் பண்ணை நடக்கின்றது. அந்த இடத்தில் விதை உற்பத்தி செய்யப் பட்டு, அதை வாங்கி மற்ற இடங்களில் போட்டால் நன்றாக உற்பத்தியாகும் என்று சொல்கிறார்கள். இப்போது ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கின்ற 10,000 விதைப் பண்ணைகள், 10 மைல், 5 மைல் தொலைவிற்குள் இருந்தால்,

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

பக்கத்தில் இருக்கின்ற விவசாயி நேராகச் சென்று பார்த்து, விதை நன்றாக விளைகிறது என்று தெரிந்துகொண்டு அதை வாங்கிப் போடுவதற்கு ஊக்கமாக இருக்கும். ஆகவே இந்த விஷயத்தில் ஊக்கம் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனக்கு இருக்கின்ற கவலை ஒன்றை எடுத்துக் கூற விரும்புகிறேன். ஒரு சமயம் நமது நாவலர் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திலே சொன்னார்கள். இந்தியாவிலே 8 லட்சம், 9 லட்சம் பம்புசெட்டுகள் இருக்கின்றன. அதில் தமிழ் நாட்டில் மட்டும் 1½ லட்சம் இருக்கிறது என்று சொன்னார்கள். எங்களைப் போன்றவர்கள் வியாபாரமும் செய்கிறோம் என்றாலும், விவசாயத்தைத் தான் நம்பியிருக்கிறோம். விவசாயத்தில் அதிக முதல் போட்டு, பயிர் செய்து கொண்டிருப்பவர்களுக்கு கோடைக் காலத்தில் கரண்ட் கிடைக்காமல் போனால், விவசாயம் என்னவாகும் என்பதைப்பற்றி ஆத்திரப்பட்டுக்கொண் டிருக்கிறோம். எந்த நேரத்தில் கரண்ட் நிறுத்தப்படுகிறது, எந்த நேரத்தில் கொடுக்கப்படுகிறது என்ற விவரம் தரப்படுவதில்லை. ஆகவே மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள், மின்சார அமைச்சரிடம் சொல்லி, இத்தனை மணியிலிருந்து இத்தனை மணி வரை கரண்ட் கொடுக்கப்படும் என்ற சரியான விவரத்தைக் கொடுத்துவிட்டால், வேலைக்கு கூலிக்காரர்களை அமர்த்த வசதியாக இருக்கும்.

பயிர் இன்ஷூரன்ஸ்பற்றிச் சொன்னார்கள். பயிர் இன்ஷூரன்ஸ் என்பதை முக்கியமாக நாம் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. பூச்சிக் கொல்லி மருந்து கொடுப்பதுபற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பூச்சிக் கொல்லி மருந்து பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கொடுக்கிறார்கள். சில பஞ்சாயத்து யூனியன்களில் அதை விற்றுவிட்டு, பூச்சிக் கொல்லி மருந்து மாதிரி அதே நேரத்தில் ஏதோ கொடுக்கிறார்கள் என்று என்னிடத்தில் சொல்லியிருக் கிறார்கள். அதற்கு இபெக்ட் (effect) இல்லை என்று என்னுடைய சொந்தக்காரர் ஒருவர் சொன்னார். எங்கள் பஞ்சாயத்து யூனியனில் வாங்கி வந்ததாகச் சொன்னார். அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் மேல்மட்டத்தில் இருப்பவர்கள் நன்றாக வேலை செய்கிறார்கள். கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் அக்கறையுடன் வேலை செய்வதில்லை. உதாரணமாக விருதுநகரில் 8 விவசாய அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் பல இலாக்காக்களில் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்களில் யாராவது கிராமத்திற்குச் சென்று அங்கங்கே என்ன நடக்கின்றது, பூச்சி விழுந்திருக்கிறதா, அதற்கு என்ன செய்திருக் கிறார்கள், என்ன செய்ய வேண்டும் என்று கருத்துச் சொல்கிறார்களா என்றால், கீழே இருப்பவர்களுக்கு கருத்துச் சொல்வதில்லை. அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறு வெட்டுவதற்கு சப்சிடி கொடுக்க வேண்டுமென்றுர்கள். கிணறு வெட்டுவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. கிணறு வெட்டிய பிறகு தண்ணீர் இல்லையென்றால், என்ன செய்வது என்று விவசாயிகள் திணறிக் கொண்டிருக் கிருர்கள். கிணறு வெட்டுவதற்கு டிவைனரை வைத்துப் பார்க்கிருர்கள். அப்படி வைத்துப் பார்த்தாலும் சரியாக இருப்பதில்லை. பத்தில் ஒரு பங்கு 5-50 பி. ப.
தான் வெற்றிகரமாக முடிகின்றது. அதற்குப் பதிலாக கவர்ன்மென்ட் குழாய்க் கிணறுகள் போட்டு, வெற்றிகரமாக வந்தால் பட்டாதார் கணக்கில் எழுதிக்கொண்டு, ஆகின்ற செலவை வட்டியுடன் வாங்கிக்கொள்ளலாம். இல்லா விட்டால் வஜா செய்ய வேண்டுமென்று அபிப்பிராயம் சொல்ல விரும்புகிறேன். நான் சென்னைக்கு அடிக்கடி காரில் வருகிறேன். புள்ளம்பாடியிலிருந்து திண்டிவனம் வரையில் பாலைவனம் மாதிரி இருக்கிறது. அந்த மாதிரி இடங் களில் கிணறுகள் போட்டு இலங்கையிலிருந்து வருகின்றவர்களையும், மற்றவர் களையும் குடியேற்றி அவர்களுக்கு உதவி செய்து செழிப்பதாகச் செய்தால், நல்ல முறையில் தமிழ் நாட்டில் விவசாயத்தைப் பெருக்க முடியும் என்று நான் கருதுகிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்றால், அவசியமாகக் கிடக்கும் காட்டைப் பண்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். இப்படிப்பட்ட இடங்களில் நல்லதொரு முயற்சியைக் கைக்கொள்ள வேண்டுமென்று அமைச் சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோழி வளர்ச்சித் திட்டம்பற்றி திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். எனக்கு நன்றாகத் தெரியும், கிட்டத்தட்ட 10, 15 வருடக் காலமாக கோழி வளர்ச்சித் திட்டத்திலே அவர்கள் ஆர்வம் காட்டி வருகி ருர்கள். அந்தத் திட்டத்திலே ஆதாயம் இருக்கிறதாவென்று இன்னும் சரியாக கிராமங்களில் இருக்கிறவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு கோழிக்கு நோய் வந்தால், எல்லாக் கோழிகளும் செத்துவிடுகின்றன. அதனால் அந்தப் பண்ணைகளை வைக்க ரொம்பவும் பயப்படுகிருர்கள். அதற்கு இன்சூரன்ஸ் மாதிரி ஒரு திட்டம் கொண்டுவந்து, நஷ்டம் வந்தால், அவர்களுக்கு சர்க்கார் பாதுகாப்பு கொடுக்குமென்ற அளவுக்கு ஒரு 'குவாரன்டி' கொடுத்தால், இந்தக் கோழி வளர்ச்சித் திட்டம் நல்ல பலனளிக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'ஆர்ட்டிபிஷியல் இன்செமினேஷன்' என்பது கத்துகின்ற நேரத்தில்—24 மணி நேரத்திற்குள்ளாகப் பண்ண வேண்டும். அந்த நேரம் தவறினால், அந்த நிலைமையை அடுத்தாற்போல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அந்த நேரத்தில் மருத்துவ மனைக்குப் போனால், டாக்டரும் இருப் பதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல், நன்றாக இந்தத் திட்டத்தைச்

செயல்படுத்த அமைச்சரவர்கள் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மொத்தத்தில் நம்முடைய விவசாயத் துறையானது நன்கு செயல்படுகின்றது. ஆனால் கீழ் மட்டத்திலுள்ளவர்கள், கிராம சேவக்குகள், எக்ஸ்டன்ஷன் ஆபீசர்கள் போன்றவர்கள் நல்ல முறையில் சேவை செய்தால்தான் நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி இன்னும் வெற்றிகரமாக இருக்கும்; மேலும் பலனளிக்கும்; நல்ல பெயர் கொடுக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு 69 கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். அதற்குத் தக்கபடி பலன் கிடைக்கிறதாவென்று பார்த்தால், கிடைக்கவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். அப்படிக் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், கீழ் மட்டத்திலுள்ள அலுவலர்களை நன்றாகக் கண்காணிக்க வேண்டும். எப்படி உரம் பிளாக்மார்க்கெட்டுக்குப் போகிறதென்பதைப் பார்க்க வேண்டும். அக்ரிகல்சுரல் எக்ஸ்டன்ஷன் ஆபீசர் சீட்டு கொடுத்துதான் உரத்தை வாங்குகிறார்கள். அது எவ்வாறு கள்ள மார்க்கெட்டுக்குப் போகிறதென்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இப்போது யூரியா பற்றாக்குறையாக இருக்கிறது. இதையெல்லாம் கவனித்து, நன்றாக இந்தத் துறை நடப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. டி. கே. பொன்னுவேலு:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வேளாண்மைத் துறைபற்றிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரவர்களும், இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் மிகத் திறமையாக அதை இயக்குகிறார்களென்பதில் நான் பெருமைப்படுகிறேன். விவசாயி ஆகிய நான் அதைப் பாராட்டுவது மிகப் பொருத்தமென்று கருதுகிறேன்.

இன்றைய தினம், கடந்த 5, 6 ஆண்டுகளுக்கும் மேலாக பச்சைப் புரட்சி என்ற பெயரில் விவசாய உற்பத்தியை நாம் வெகுவாக அதிகப்படுத்தியிருக்கிறோம். ஆனால் அப்படி அதிகப்படுத்திய உற்பத்தியால் விவசாயிகளுக்குப் பலன் உள்ளதாவென்று என்னைக் கேட்டால், அந்த உற்பத்தி மட்டும் விவசாயினுடைய முதுகெலும்பை முத்தமிட்டு தொப்புளைப் பிரித்துவிடாதென்று திட்டவட்டமாகச் சொல்லுவேன். அவர்களுடைய விளைபொருள்களில் முறையான லாபம் வருகின்ற நிலையை ஏற்படுத்தினால்தான், அவர்களுக்குப் பலன் கிடைக்குமென்று நான் உணர்ந்திருக்கிறேன். அந்த விற்பனை முறை எப்படி இருக்கிறதென்று உலக நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நான் அதை அமெரிக்க நாட்டோடு ஒப்பிட்டால், அதற்கொரு வர்ணம் தீட்டிவிடுவார்கள்.

அதை நான் ருஷ்ய நாட்டோடு ஒப்பிட்டால், அதற்கு வேறொரு வர்ணம் தீட்டி விடுவார்கள். வர்ணங்களுக்காக நான் பயப்படவில்லை. எனினும் அந்த வர்ணங்கள் என்னுடைய நாட்டுக்குத் தேவையில்லை என்ற உணர்ச்சியில் இன்றைய தினம் ஆஸதிரேலியா நாட்டில் இருக்கக்கூடிய விற்பனை முறை நம்முடைய நாட்டுக்குப் பொருந்துமென்று எண்ணி, அந்த நாட்டு முறையை இந்த மன்றத்தின் முன்னால் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் ஆஸ்திரேலியா நாட்டில் ஒவ்வொரு முக்கிய பண்டத்திற்கும் ஒரு தனி அமைப்பு —மார்க்கெட்டிங் போர்டு இருக்கிறது. அந்த போர்டு மூலமாக, எந்த அளவுக்குக் கோதுமை உற்பத்தி செய்ய வேண்டும்; எந்த அளவுக்கு சர்க்கரை உற்பத்தி செய்ய வேண்டும்; எந்த அளவுக்குப் பால் உற்பத்தி செய்ய வேண்டும்; முட்டை எவ்வளவு தேவை; அதனுடைய விலை என்ன என்பதையெல்லாம் நிர்ணயிக்கிறார்கள். இப்படி அங்கே 17 முக்கிய பண்டங்களுக்கு மார்க்கெட்டிங் போர்டு இருக்கிறது. அங்கே, உற்பத்தி செய்கிற விவசாயிதான் கதாபாத்திரமாக இருக்கிறான். அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக விளங்குகிறான். உற்பத்தித் தொழிலில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் ஓட்டராகி கட்டாயமாக ஓட்டளிக்க வேண்டும். அவன்தான் எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும்; எப்படி விளைவிப்பது; அதனுடைய விலை என்ன என்பதையெல்லாம் நிர்ணயம் செய்கிறான். இடையிலே வருகிற வியாபாரி, அனைத்தையும் பாதுகாக்க வேண்டிய சர்க்கார் ஆகியோரின் பிரதிநிதிகளும் இணைந்திருக்கிறார்கள். என்றாலும் அவர்களுக்கு அதிலே முக்கியத்துவம் இல்லையென்பதை நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். வியாபாரிகளின் பிரதிநிதியும், சர்க்கார் பிரதிநிதியும் கண்காணிப்பதுடன் நின்றுவிடுகிறார்கள்.

அந்த முறையில் நம்முடைய விற்பனை வாரியங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில், நம்முடைய விவசாய இலாக்காவின் விற்பனைப் பகுதிக்கான துணை இயக்குநர் மிகத் திறமையாகச் செயல்படுகிறார். ஆனால் விற்பனை வாரியம் எப்படிச் செயல்படுகிறதென்று பார்த்தால், எந்த அளவுக்கு நமக்குக் கிடைக்கும் பணம் திரும்ப அனுப்பப் படுகிறதென்று பார்த்தால்தான் அந்த விற்பனை வாரியம் எந்த அளவுக்குச் செயல்படுகிறதென்றும், இதை மற்ற மாநிலங்களுடன், தமிழ் நாட்டை இணைத்துப் பார்ப்பதன் மூலமும், உணர முடியும். இந்தியத் துணைக் கண்டத்திலே பஞ்சாப், அரியானு, உத்தரப் பிரதேசம், மராட்டியம், ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் உள்ள விற்பனை வாரியங்கள் பெற்ற பலனை, தமிழகத்திலுள்ள வாரியம் அடைய முடியவில்லையென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் இருக்கக்கூடிய நிலைமை மிகவும் அபாயகரமானதாகவும், விவசாயம் பாதிக்கப்படக்கூடிய

தாகவும் இருப்பதை நான் மிகவும் வேதனையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இங்கே வியாபாரிகள் வருகிறார்கள். பச்சைப் பட்டை கோணிப் பையைக் கொண்டுவருகிறார்கள். ஆனால் முழுங்கும் மரக்கலைக் கொண்டுவருகிறார்கள். அவர்கள் சொல்வதுதான் விலை. விவசாயி அவன் கைப்பிள்ளையாக மாறியாக வேண்டிய அவல நிலையில் இருக்கிறான். இந்த இழி நிலையைப் போக்க வேண்டும். அதை மாற்றாத வரையில், பச்சைப் புரட்சி உண்மையான புரட்சி யாக, விவசாயிக்கான புரட்சியாக இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த விற்பனை வாரியங்களை உண்மையான விற்பனை வாரியங்களாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பெரியவர் திரு. ஜெயராம செட்டியார் அவர்கள் உரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் மிகப் பெருமையுடன் ஒன்றைக் கூறிக்கொள் வேன். நம்முடைய விவசாய அமைச்சரவர்கள் கிடைக்காத யூரியாவுக்குப் பதிலாக, யூரியாவுக்கு மாற்றாக எப்படி எதை உற்பத்தி செய்வதென்பதைப் பற்றியெல்லாம், வெளியார்களை அழைத்து, அதைப்பற்றி வாதித்ததை நானே நேரில் கேட்டிருக்கிறேன்; பார்த்திருக்கிறேன். வைக்கோலுடன், இயற்கை யான காற்றை இணைத்து, நைட்ரஜனைச் சேர்த்து, யூரியாவை எப்படிப் பெறுவ தென்றெல்லாம் பரிசீலிக்க ஊக்கத்துடன் அவர் செயல்படுவதால், நிச்சயமாக விவசாயிகளின் எதிர்கால உரத் தேவையை ஓரளவுக்கு ஈடுகட்டும் நிலைமையை இங்கே காண முடிகின்றது. அப்படிப்பட்ட நிலைமையில் இன்றைய தினம் விவசாய அமைச்சர் காரியங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விவசாய இலாகாவிலேயிருந்து பல்வேறு முறைகளிலே விவசாயி கடன் பெறுகிறான். பெற்ற கடனைப் பற்றி என்னுடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் நிதி நிலை அறிக்கையின் மீது குறிப்பிட்டார்கள். பெற்ற கடனைத் தள்ளுபடி செய்துதர வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண் டார்கள். ஏற்கெனவே நெசவுத் தொழிலிலே ஈடுபட்டவர்களுக்கு ஒரு கோடி ரூபாய்க்குமேல் உள்ள கடனைத் தள்ளுபடி செய்த கருணையுள்ள சர்க்கார், விவசாயிகளுக்கும் தள்ளுபடி செய்து தரவேண்டும் என்று மிகவும் விநயமாக பணிந்து கேட்டுக்கொண்டார்கள்.

அதே போல, அதற்குப் பிறகு பொற்கொல்லர்களுக்கு இன்றைய தினம் கொடுக்கப்பட்ட கடனைத் தள்ளுபடி செய்வது என்று இந்த சர்க்கார் முடிவெடுத் திருக்கிறது. இவற்றையெல்லாம் நாட்டு மக்கள் ஜனத்தொகையில் 70 சதத் திற்கு மேல் உள்ள விவசாயி பெருமையாகப் பார்க்கின்றான்; வரவேற்கிறான்; மகிழ்கின்றான். ஆனால், தனக்கும் இப்படிப்பட்ட நிவாரணம் கிடைக்க வில்லையே, கிட்டவில்லையே என்று வேதனையடைகின்றான்.

1974 மார்ச் 29] [திரு. டி. கே. பொன்னுவேலு]

என்னைப் பொறுத்த வரைக்கும் சொல்லிக்கொள்வேன், டிராக்டருக்கு வாங்கிய கடனை ரத்து செய்ய வேண்டுமென்று எந்த விவசாயியும் யாசகம் கேட்கவில்லை. தோண்டிய கிணற்றிலே தண்ணீர் கிடைத்ததற்குப் பிறகு அதற்குக் கொடுத்த கடனை ரத்து செய்யுங்கள் என்று நாங்கள் மன்றுட வரவில்லை. வாங்கிய பம்ப்செட்டுக்குக் கொடுத்த கடனை ரத்து செய்யுங்கள் என்று நாங்கள் கேட்கமாட்டோம். ஆனால் நாங்கள் தோண்டித் தோண்டிப் பார்க்கிறோம். தண்ணீரே கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட கிணறுகளுக்கு கொடுக்கப்பட்ட கடனை அருள்கூர்ந்து ரத்து செய்ய வேண்டுமென்று விவசாயி களின் சார்பிலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல ஐ.எம்.எஸ். லோன் என்று கொடுத்திருக்கிறோம். திருப்பித் திருப்பிக் கொடுக்கப்படும் கடன் அல்ல அது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கடனை இனி கொடுப்பதில்லை என்றுகூட முடிவு செய்து நிறுத்தி விட்டோம். அப்படிப்பட்ட கடனை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்பது, 70 சதவிகிதம் மக்களைத் திருப்திசெய்யும் என்ற அளவிலே கருணையுள்ள நம் சர்க்கார் நிச்சயம் செய்யும் என்று கருது கிறேன். அப்படிச் செய்வது தவறில்லை என்றும் கருதுகிறேன். அப்படிப் பட்ட முறையிலே இந்தக் கடன் பிரச்சினைகள் அணுகப்பட வேண்டுமென்று நான் பணிந்து கேட்டுக்கொள்வேன். 6–00 பி. ப.

நில வள வங்கிகள் மூலமாக இன்றைய தினம் கடன் தரப்படுகிறது. விவசாயிக்கு உற்பத்தி செய்ய வேண்டிய மிகப்பெரும் கடமை இருப்பதை நான் உணர்கின்றேன், ஒத்துக்கொள்கின்றேன். ஆனால் விவசாயிக்கு மற்றவர்களுக் காக நெல்லையும், கரும்பையும், கேழ்வரகையும் உற்பத்தி செய்து கொடுப்பதற்குத் தான் கடன் என்று கூறுவது சரியல்ல. துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அவைக்குச் சொல்லிக்கொள்கிறேன். விவசாயிகளுக்கும் வாழ்க்கை இருக்கிறது. சுகதுக்கங்கள் இருக்கின்றன.

விவசாயி ஆகிய எனக்கு விவசாய நிலத்திற்குப் பதிலாக, நான் வீடுகளை வாங்கிவைத்திருந்தால், வாடகையாகப் பெற்றிருப்பேன். என்னுடைய வீட்டுத் திருமணத்திற்குப் பணம் தேவையென்றால், எந்த மார்வாடியாவது பணம் கொடுத்திருப்பான். ஆனால் என்னுடைய நிலத்தை வைத்து எந்த மார்வாடியும் பணம் கொடுப்பதில்லை. நான் ஒரு தொழிலாளியாக இருந்திருந்தால், அந்தத் தொழிலைக் காட்டினால், எந்த மார்வாடியாவது பணம் தருவான். ஆனால் துர்பாக்கியமான இந்த நாட்டில் நான் விவசாயி ஆகிவிட்டதால் என்னுடைய அயனான நிலத்தைக் காட்டினால், எந்த மார்வாடியும் பணம் தருவதில்லை.

ஆனால் எனக்கும் சுகதுக்கங்கள் இருக்கின்றன. ஆகவே 70 சதவிகிதம் ஆகவுள்ள எங்களுக்கு மட்டும் வெறும் உற்பத்தி செய்வதற்காக மட்டும் பணம் கடன் தருவது நியாயமல்ல என்பதனை மிகவும் பணிவோடு ஆனால் தெளிவுடனும், உறுதியுடனும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்களுடைய வீட்டிலே நடக்கக்கூடிய சுகதுக்கங்களை நாங்கள் அனுபவிக்க வேண்டும். அதற்கு சர்க்காரும் பொறுப்பேற்க வேண்டும். நாங்கள் யாசகமாகக் கேட்கவில்லை. ஏதோ பாண்டிலே பணம் தரவேண்டுமென்று கேட்கவில்லை. நெசவாளர்களுக்கு, பொற்கொல்லர்களுக்குத் தந்ததைப்போல நம்பிக்கையின் பேரிலே பணம் தர வேண்டுமென்று கூட கேட்கவில்லை. எங்களுடைய சொத்தைக் காட்டி அதற்கு ஈடாகப் பணம் தர வேண்டும். அந்த முறையிலே நில வள வங்கி வெறும் உற்பத்தியைப் பெருக்கும் இயந்திர சாதனமாக இல்லாமல் மனித உணர்வுபெற்ற அமைப்பாக இயக்கப்பட வேண்டுமென்று பணிந்து கேட்டுக்கொண்டு, எனக்கு 10 நிமிடமே கொடுத்ததால், இந்த அளவிலே நிறுத்தி, தங்களுக்கு நன்றியை மீண்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. எம். எம். பக்கர்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறைபற்றிய கொள்கை அறிக்கையின் மீது எனக்குப் பேசுவதற்கு இடமளித்ததற்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட நாள் பற்றாக்குறை மாநிலம் என்று கருதப்பட்ட தமிழகத்தை தன்னிறைவுள்ள மாநிலமாக மாற்றி, இன்று ஓரளவு உபரியை மற்ற மாநிலங்களுக்கு வழங்கக்கூடிய உபரி மாநிலமாகவும் மாற்றிய இந்த அரசை, இந்தத் துறையின் அமைச்சர் பெருமகனை, இதிலே ஈடுபட்டிருக்கின்ற அதிகாரிகளை, விவசாயப் பெருமக்களை நான் மனப்பூர்வமாக வாழ்த்தி என்னுடைய சில அபிப்பிராயங்களையும் சொல்வதற்கு விழைகின்றேன். விவசாயத் துறையிலே நம்முடைய தமிழகம் வெகுதூரம் முன்னேறியிருக்கிறது. பசுமைப் புரட்சியிலே தமிழகத்தினுடைய பங்கு மிக மகத்தானது என்று இந்தியாவிலே மட்டுமல்ல, உலக நாடுகளிலிருந்தெல்லாம் இங்கே விஜயம் செய்த நிபுணர்கள் தமிழகத்தைப் பாராட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதிலே தமிழன் என்ற முறையிலே நானும் அந்தப் பெருமையிலே பங்கு கொள்கின்றேன். இந்த வேளாண்மைத் துறையிலே தஞ்சை மாவட்டத்தின் பங்கு மிகவும் பெரியது என்று நான் நினைக்கின்றேன். இங்கே உற்பத்தியாகின்ற உணவிலே மூன்றில் ஒரு பகுதி தஞ்சை மாவட்டத்திலே உற்பத்தியாகிறது என்று கணக்குச் சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே எனக்கு இது ஒரு பெருமைதான். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறேன். 1952

1974 மார்ச் 29] [திரு. எம். எம். பக்கர்]

ஆவது ஆண்டிலே மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சரான போது, தஞ்சை மாவட்டத்திலே பண்ணையாள் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை விளக்கிப் பேசுவதற்காக தஞ்சை மாவட்டத்திற்கு அவர்கள் வந்திருந்தபோது, தாங்களும் அவர்களோடு வந்திருந்தீர்கள். தஞ்சை நகரிலே இராமநாதன் செட்டியார் ஹாலிலே தங்களுடைய அழகு தமிழ் பேச்சை நான் கேட்டேன். தஞ்சை மாவட்ட மக்களுக்கு தாங்கள் வேண்டு கோள் விடுத்தீர்கள். உங்களுடைய அழகு தமிழிலே, "சோறுடைத்து சோழ நாடு என்றாள் அவ்வை. அந்தப் பேருடைத்து இந்தப் பெருநாடு என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்" என்று தாங்கள் வேண்டுகோள் விடுத்தீர்கள். அது இன்றைக்கு நினைவுக்கு வருகிறது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் அதை நிரூபித்திருக்கிறோம். இன்றுகூட தமிழகத்தின் உணவு உற்பத்தியிலே மூன்றில் ஒன்றை நாங்கள் செய்கிறோம். அதற்காக நாங்கள் பெருமையும் கொள்கிறோம். ஆனால் அதே நேரத்தில் பொருளாதாரத் துறையிலே தஞ்சை மாவட்டத்தினுடைய நிலைமை என்ன என்பதை இங்கு சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவுதூரம் உணவு உற்பத்தி தஞ்சை மாவட்டத்திலே செய்திருந்தாலும்கூட தஞ்சை மாவட்டத்தி னுடைய பொருளாதார நிலை ஆண்டுதோறும் தாழ்ந்துகொண்டே போகிறதே தவிர, உயர்ந்துகொண்டு போகவில்லை என்பதைப் பல பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 1939 ஆம் ஆண்டிலே சென்னை மாகாணமாக இருந்தபோது, 25 ஜில்லாக்கள் இங்கே இருந்தன; அந்த 25 ஜில்லாக்களிலே சராசரி வருமானத்திலே தஞ்சை மாவட்டம் முதலிடத்திலே இருந்தது. 1945-லே தஞ்சை மாவட்டம் மூன்றாவது இடத்திற்கு வந்தது. 1955-லே ஐந்தாவது இடத்திற்கு வந்தது. இப்பொழுது ஒன்பதாவது இடத்திற்கு வந்திருக்கிறது. இப்படி சராசரி வருமானம் இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். இவ்வளவு உற்பத்தி செய்துங்கூட சராசரி வருமானம் எங்கள் மாவட்டத்திலே ஏன் ஏறவில்லை என்றால், நாங்கள் விவசாயத் துறையில் நெல் உற்பத்தியை மாத்திரம் நம்பியிருப்பதுதான் காரணம் என்று நான் நினைக் கிறேன். மதிப்புக்குரிய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். நெல்லை மாத்திரம் நம்பி நம்முடைய மாநிலம் வாழ்ந்தால் பொருளாதாரத்திலே சீர்கேடடையும் என்று அவர்கள் சொன்னார்கள். என் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், சொல்கிறேன், நெல் உற்பத்தியை மாத்திரம் தஞ்சை மாவட்டத்தில் நம்பி வாழ்ந்தால், பழைய முறையிலே காலனி ஆதிக்கம் என்று சொல்வார்களே, ஏதோ உற்பத்தி ஆனதை விற்று விட்டு வயிற்றைக் கழுவிக்கொள்ளக்கூடிய ஒரு நிலை, அதுதான் எங்களுக்கு ஏற்படுமே தவிர, மற்ற பொருளாதாரத் துறையிலே முன்னேற்றமான ஒரு முறையை நாங்கள் காணவே முடியாது என்று நான் கருதுகிறேன். விவசாயத்

துறை என்பது மிகச் சங்கடமான ஒரு துறை. விவசாயம் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். விவசாயத்திற்கு வேண்டிய உரமும் பூச்சி மருந்துகளும் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்
6–10 பி. ப. களெல்லாம் பேசினார்கள். அந்தக் குறை மட்டுமில்லாமல், விவசாயம் என்பது பருவ காலத்தையும் பொறுத்ததாக இருக்கின்றது. பருவ மழை முறையாக இருந்தால்தான் விவசாயமும் சரியாக இருக்கும். பருவ நிலையில் கோளாறு ஏற்பட்டுவிட்டால், எவ்வளவுதான் உரத்தையும் பூச்சி மருந்தையும் போட்டாலும் பலன் கிடைப்பதில்லை. திரு. வெங்கா அவர்கள் தமிழ் நாட்டிலே ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை காய்ச்சல் வருகிறது என்று குறிப்பிட்டார்கள். உண்மைதான். அதோடு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வெள்ளமும் வருகின்றது என்பதை மறுப்பதற்கில்லை. இவ்வளவுக்கும் மிஞ்சிப் போனால் உற்பத்தியாகும் நெல்லுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. இந்த நிலை வேதனைக்குரியதாகும். உணவுத் துறை அமைச்சர் அவர்கள் எல்லா சாமான்களுக்கும் விலையை ஏற்றித்தருவதைப் போல விவசாயப் பொருள்களுக்கு, நெல்லுக்கு ஏற்றித் தரமுடியாது என்ற முறையில் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒரு கணக்கைத்தான் போட்டார்கள். மதிப்பிற்குரிய திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, வாங்குகின்றவர்கள் அந்த அளவிற்குத் தொகையைக் கொடுத்து வாங்க முடியுமா என்றுதான் கணக்கைப் போட்டார்களே தவிர, உற்பத்தியாளர்களைப்பற்றி எண்ணிப் பார்க்கவில்லையோ என்று தோன்றுகிறது. உற்பத்தி செய்கின்றவர்களும் வாங்குகின்றவர்கள்தான். நெல்லை விற்று விட்டு மற்றதை வாங்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் வாங்கும் சாமான்களுக்கு விலைக் கட்டுப்பாடோ அல்லது விலைக் குறைப்போ இல்லை. தஞ்சையில் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு மட்டும் உண்டு என்றால்? தஞ்சையில் குறுவை அறுவடையாகும். உடனே நெல் வியாபாரிகள் வருவார்கள். அத்துடன் உணவுத் துறையிலிருந்து உத்தரவும் வரும். தஞ்சையிலிருந்து உத்தரவின்றி நெல்லை வெளியே எடுத்துக்கொண்டு போகக்கூடாது என்று வரும். நிலைமை என்ன? கொள்ளிடத்தின் தெற்குக் கரையில் ரூ. 39-க்கு விற்க முடியாது. ரூபாய் 40 என்று சர்க்கார் விலை நிர்ணயம் செய்திருந்தாலும், ரூ. 39-க்கே விற்க முடியாது. ஆனால் வடக்குக் கரையில் ரூ. 45-க்கு நெல் கிடைக்காது. இப்படிப்பட்டதொரு நிலைமை. இங்கேயே இப்படி என்றால் கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களிலே ரூ. 50, 60-க்கும் கிடைக்காது. ஏன் இதைச் சொல்லுகின்றேன் என்றால், உற்பத்தி அதிகமாகச் செய்கிறோம் என்ற காரணத்தினால், இத்தகைய கட்டுப்பாடுகள் எல்லாம் எங்களுக்குத்தான் இருக்கின்றன. இந்தியாவிலேயே ஒரு மாவட்டத்தை மட்டும் கொண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்றால், அது தஞ்சை மாவட்டம்தான். தஞ்சை மாவட்டத்திற்குத்தான் பண்ணையாள்

சட்டம் என்று கொண்டுவரப்பட்டது. ஏனென்றால் நமது மாநில அரசுக்கு விவசாயத் துறையில்தான் எந்தச் சட்டத்தை வேண்டுமானாலும் கொண்டுவர அதிகாரம் இருக்கின்றது. எங்களைக் கட்டுப்படுத்துகின்றார்கள். நாங்களும் கட்டுப்படுகிறோம். நாங்கள் எவ்வளவு பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கினாலும், எங்களுக்கு இந்த நிலை என்றால்? இந்த நிலைமையைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று, தலைவரவர்களே, தங்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களை, அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதற்கு வழி என்ன? தஞ்சை மாவட்டம் மற்ற மற்ற மாவட்டத்தைப் போல பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமானால், தஞ்சையில் இப்போதுள்ள விவசாயத்தின் முறை, 'பேட்டர்ன்' மாற வேண்டும். திரு. தாமோதரன் அவர்கள் வெறும் நெல்லை மட்டும் உற்பத்தி செய்து விட்டு மற்ற கேஷ் கிராப் எதையும் உற்பத்தி செய்யவில்லை என்றால் இப்படித்தான் இருக்கும் என்று சொன்னார்களே. ஏன் தஞ்சையிலே தொழில் துறை விரிவடையவில்லை என்றால், மூலப்பொருள்கள் அங்கே கிடைப்பதில்லை என்று சொல்லிவிடுகின்றார்கள். எப்படி மூலப்பொருள்கள் வரும்? எங்கள் மாவட்டத்தில் கனி வளம் கிடையாது. நெல் விளையும் பூமி அது. நாற்றை நட்டால் பிறகு வைக்கோல்தான் கிடைக்கும். அதுதான் மூலப்பொருள். நெல் கிடைக்கிறது. அதுதான் மூலப் பொருள். பல முறை தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்க வேண்டும் என்றும் வைக்கோலிலிருந்து தாள் செய்ய வேண்டும் என்றும் முயற்சித்தார்கள். அதெல்லாம் வெறும் கனவாகத்தான் போய்விட்டது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: துணைத் தலைவரவர்களே, அதெல்லாம் கனவாகப் போய்விடவில்லை. ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தது. தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் என்று இருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஊர். அங்கே தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு இயந்திரங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு நான்கு இலட்சம் ரூபாய் என்ற அளவில் லாபம் வருகின்றது. அதைப் பார்த்து விட்டு பிறகு சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. எம். எம். பக்கர்: துணைத் தலைவரவர்களே, அந்த எண்ணெய் எதற்குப் பயன்படுகிறது என்று தெரியவில்லை. நான் பயன்படுத்தாததால் எனக்குத் தெரியவில்லை. அடுத்து, இந்த நிலைமையில் தஞ்சையில் விவசாயத்தின் பேட்டர்ன் மாற்றப்பட்டாக வேண்டும். உதாரணமாக ஒரு வேண்டுகோளை விடுக்க ஆசைப்படுகிறேன். தஞ்சையில் காவிரிப் பாசனத்தால் ஆண்டொன்றுக்கு எட்டு மாதத்திற்குப் பாசன வசதி கிடைக்கிறது. அரசு இதன் மூலம் ஆண்டுக்கு இரண்டு போக சாகுபடிக்கு ஊக்கம் அளிக்கிறது. மகிழ்ச்சி.

உற்பத்தி செய்கிறோம். ஆனால் ஒன்றைக் கேட்டுக்கொள்ளுகிறேன், எங்களுக்கு ஒரு க்ராப் மட்டும், நெல் உற்பத்தி செய்வதற்கு அனுமதி கொடுங்கள். ஏனென்றால் நெல்லை மட்டும் உற்பத்தி செய்தால், எங்களுக்கு இப்போதுள்ள நிலையில் கட்டுப்படியாகவில்லை. சிறு விவசாயி. என்னால் தாங்க முடியவில்லை. அடுத்து, ஒரு க்ராப்பிற்கு கேஷ் கிராப் போடுகிறோம். தொழில் துறையில் அங்கே ஒன்றும் ஏற்படவில்லையென்றால், வெறும் நெல்லை மட்டும் வைத்துக்கொண்டிருந்தால், என்ன ஏற்படும்? ரைஸ் மில்கள்தான் இருக்கின்றன. சுமார் 15 லட்சம், 17 லட்சம் ஏக்கர் அந்த மாவட்டத்தில் இருப்பதாகக் கணக்குச் சொல்லுகின்றார்கள். ஒரு கிராப்பில் பஞ்சு போட்டால், அங்கே பல பஞ்சாலைகள் ஏற்பட வாய்ப்பிருக்கும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். இப்போது அங்கே விவசாயத்திலுள்ள நெருக்கடி குறையும். மற்ற மாவட்டத்தில் உள்ளவர்கள் மாதம் 250 ரூபாய் சம்பாதிக்கின்றார்கள் என்றால், தஞ்சையில் உள்ளவர்களுக்கு ஆறு மாதம் வேலை கிடையாது. எனவே இந்த பேட்டர்ன் மாற்றப்பட வேண்டும் என்று நான் மனப்பூர்வமாக வேண்டிக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இப்போது சில உச்ச வரம்பு என்று வைத்திருக்கிறார்கள். நில வரியை, லேண்டு டேக்ஸை அடிப்படையாக வைத்து ஸீலிங்கை நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். அதை அடிப்படையாக வைத்து வெள்ளைக்காரன் காலத்தில். வெள்ளைக்காரன் காலத்திலே மற்ற மாவட்டங்களிலே விவசாயம் அடியோடு இல்லாமல் இருந்தது. கோயம்புத்தூர் போன்ற இடமெல்லாம் இப்போதுதான் விவசாயத்துக்கு வந்திருக்கின்றது. இப்போது கோவையில் விவசாயத்தில் ஒரு ஏக்கருக்கு தஞ்சையில் கிடைப்பதைவிட மூன்றரை மடங்கு அல்லது இரண்டு மடங்கு வருமானம் கிடைக்கிறது. இதை மறுக்க முடியாது. ஆனாலும் ஸ்டாண்டர்டு ஏக்கரேஜ் என்று பார்க்கும்போது, அன்றைக்கு இருந்த தீர்வையின் அடிப்படையில் நிர்ணயித்துவிட்டார்கள். அதன்படி எங்களுக்குக் குறைச்சல், அவர்களுக்கு அதிகம் என்று ஆகிவிட்டது. எனவே ஒரு நிலத்தின் உற்பத்தியின் அடிப்படையில் ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கிட்டால், இந்தக் கோளாறுகள் ஏற்படாது என்று நினைக்கிறேன்.

ஒரே ஒரு விஷயம். தஞ்சை மாவட்டத்தில் குத்தகைதாரர்களுக்குக் கிடைக்க வேண்டிய நெல் முறையாகக் கொடுக்கப்படுவதில்லை. ஒரு வருஷம் இரண்டு வருஷம் கொடுக்காமல் இருந்துவிட்டு பிறகு அதைத் தள்ளிவிட வேண்டுமென்று கேட்கின்றார்கள். இதனால் ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் வைத்திருக்கும் ஏழை விவசாயிகள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் அதற்காக கோர்ட்டுக்கும் போக முடியவில்லை. ஏழைகள் அவர்கள். ஒரு ஏக்கர் வைத்துக்கொண்டு அவர்கள் என்ன செய்ய முடியும்?

1974 மார்ச் 29]

திரு. காட்டூர் கோபால்: மற்ற மாவட்டங்களில், குறிப்பாக கோவை மாவட்டத்தில் விளைச்சல் இரு மடங்கு இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நிலம் மட்டும் காரணமா அல்லது அந்தப் பகுதி மக்களுடைய உழைப்பும் காரணமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். எம். பக்கர்: ஏழையாக உள்ளவர்கள் ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் என்று வைத்திருப்பவர்கள் தொல்லைகளுக்கு உள்ளாகின்றார்கள். ஆகவே வருஷம் தவறாமல் அவர்களுக்கு உண்டான நெல் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தால், ஆயிரக்கணக்கான ஏழைகள் அமைச்சர் அவர்களை வாழ்த்துவார்கள் என்று சொல்லி நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த வேளாண்மைத் துறையைச் சேர்ந்துள்ள தொழிலாளர்களும், உற்பத்தி பண்ணக் கூடிய விவசாயிகளும் பெரும் சிக்கலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஆளும் கட்சித் தரப்பினரும், எதிர்க் கட்சித் தரப்பினரும் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்தோம். இங்கே பேசிய நண்பர்கள் அத்தனை பேர்களும் ஒரே கருத்து உள்ளவர்கள் என்பதை இந்த அவைக்கு நிரூபித்துக் காண்பித்தோம். இன்றைக்கு விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகள் பூராவும் அவர்களின் சொந்தமான பிரச்சினைகள் தான் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். 6·20 பி. ப.

இயற்கை ஒத்துழைத்தால் தான் விவசாயம் செய்ய முடியும். ஏதோ மந்திரத்தால் மாங்காய் காய்க்கும் என்ற முறையில் மந்திரத்தால் விவசாயம் செய்வதில்லை. உழைப்பு, இயற்கையின் ஒத்துழைப்பு இரண்டும் ஒன்றாக இணைந்தால் தான் விவசாயம் செய்ய முடியும். இன்றைக்கு அரசாங் உதவி பல காரியங்களில் இன்றைக்கு இருக்கிறதா என்று பார்த்தால், இங்கே பேசிய அனைத்து நண்பர்களும் உதவிகள் சரிவரக் கிடைக்கவில்லை என்பதைத் தான் எடுத்துக் காட்டினார்கள். எப்படியெல்லாம் நிவர்த்திக்கப் போகிறோம் என்பதை அமைச்சரவர்கள் உணர்ந்திருந்தாலும், இது பெரிய நிர்வாகமாக விஸ்தரிக்கப்பட்டு, 4, 5 அமைச்சர்கள் இந்த விவசாயிகளுக்கு உதவக்கூடிய நிலையில் இது ஒரு அமைப்பாக இருப்பதைப் பார்க்கும்போது, ஊர் சேர்ந்து தேர் இழுப்பது போன்ற ஒரு நிலையில் விவசாயத்தை இழுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். என்றைக்கு மனிதன் தோன்றினானோ உண்ண என்றைக்குக் கற்றுக் கொண்டானோ, அன்று முதல் இந்தத் தொழில் க்ஷீணித்த நிலையில் இருக்கிறது. ஏதோ உணவு தான் மையம் என்ற

வைத்துப் பேசுகிறார்களே தவிர, உணவு தான் நாட்டின் பொருளாதாரம் என்று தெரிந்திருந்தாலும், விவசாயம் செய்யப்பட்டால் தான் நல்லது என் பதை நாடு உணர்ந்திருந்தாலும், இதற்காக ஆக்க பூர்வமாக காரியங்கள் செய்யப்படுகிறதாவென்று பார்த்தால், இல்லையென்று கூற முடியும். இன்றைக்கு விவசாயிகளுக்குப் பல இன்னல்கள். ஆனால் இன்றைக்கு மாண்பு மிகு அமைச்சரவர்கள் ஒரு கருத்தை இந்த அவைக்குத் தெரிவித்தார்கள். இன்றைக்கு விவசாயம் ஒரு வருவாய் வரக்கூடிய தொழிலாக இருக்கிறதென்று கூறினார்கள். நல்ல வருவாய் வரலாம். ஆனால் விவசாயிகளின் கடன் நிலை தீர்ந்ததாவென்று பார்த்தால், இன்று வரை தீரவில்லை. பாட்டன் காலத்தில் அவன் கடன்காரன், அப்பன் காலத்திலும் கடன்காரன். விவசாயம் செய்யக் கூடிய எவனும் கடன்காரனாக தலைமுறை தலைமுறையாக இருக்கிறான். அவர்கள் எப்போதும் கடன்காரர்களாக இருக்கிறார்கள். இன்றைய வரையில் கடன் தொல்லையிலிருந்து நீங்கியவர்களாக இல்லை. அவர்களுக்கு என்ன விமோ சனம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மைய அரசாக இருந்தாலும் சரி மாநில அரசாக இருந்தாலும் சரி, இந்தச் சிக்கலிலிருந்து அவர்களை மீட்பதற்கு என்ன வழி, நிலை என்பதைப் பார்க்க வேண்டுமென்று இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். உலக நாடுகளில் கூடக் கூறுகிறார்கள். நகர்ப்புறங்கள் பெருகிக்கொண்டு வருகின்றன. கிராமப்புறங்கள் சீரழிந்துகொண்டு வருகின்றன. காரணம், கிராமப்புறங் களில் விவசாயத் தொழிலை நம்பியிருக்கக் கூடியவர்கள் அதை விட்டு வெளி யேறக் கூடிய சூழ்நிலை வெளிநாடுகளிலும், இந்தியாவிலும் இருக்கிறது. கிராமப்புறங்களில் செய்யக்கூடிய தொழில் வருவாய் உள்ளதாக இல்லை. நகர்ப் புறங்களில் உள்ள தொழில் வருவாய் உள்ளதாக இருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இதற்கான பரிகாரங்களைக்கண்டு இதை எப்படி நிவர்த்திக்கலாம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இதை வருவாய் உள்ள தொழிலாக, நாகரீகம் உள்ள தொழிலாக ஆக்குவதற்கு அரசு முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரசாயன உரங்கள்பற்றிக் கூறினார்கள். இன்றைக்கு இரசாயன உரங்கள் பற்றாக்குறையாக இருக்கின்றன என்பதை நாடு அறியும். மாண்புமிகு அமைச் சரவர்கள் குறிப்பில் கூட உலக நாடுகளிலெல்லாம் பற்றாக்குறை இருக்கிற தென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நமக்குக் கிடைக்கக்கூடிய உரம் நல்ல முறையில் வினியோகிக்கப்படுகிறதாவென்பது தான் பிரச்சினை. வினியோகத் தில் தவறுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். எப்படித் தவறுகள் ஏற்படுகின்றன என்று பார்த்து கிடைக்கக்

கூடிய உரங்களை நல்ல முறையில் வினியோகிக்க நடவடிக்கை எடுத்தாலொழிய பரிகாரம் காண முடியாது என்பதைக் கூறிக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் விவசாயிதான் வியாபாரிக்கு அதிக விலைக்கு உரத்தை வாங்கிக் கொடுக்கிறார், விற்கிறார் என்ற பிரச்சினையை எழுப்பினார்கள். காலம் கடந்து, நடவுக்குக் கேட்ட இரசாயன உரம் அறுவடைக்குக் கிடைத்தால் அவன் விற்காமல் என்ன செய்ய முடியும்? காலத்தில் கிடைக்காததினால் இந்த நிலை ஏற்பட்டது. இப்படி விற்கக்கூடிய நிலை ஏற்படுகிறது என்பதையும் விவசாயிகள் கூறுகிறார்கள். இதையெல்லாம் பரிசீலிக்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இரசாயன உரங்களை மேன்மேலும் போடுவதனால் நிலங்களின் தரம் கெட்டுக்கொண்டிருக்கிறது என்பதை உணர வேண்டும். காரணம், எந்தக் காலத்திற்கு, எந்த மண்ணுக்கு, எந்த உரம் தேவை என்று தெரியாத ஒரு நிலை. ஒரு பெரிய நிர்வாகத்தை வைத்துக்கொண்டிருக்கிற நாம் இதை விவசாயிகள் மத்தியில் சொல்வது கிடையாது. சாயில் சாம்பிள், மண் பரிசோதனையை அதிகமாகச் செய்யக்கூடிய நிலையில் நாம் இல்லை. சாதாரண படிக்கத் தெரியாத ஏழை எளிய விவசாயிகள் பொதுவாக யூரியா என்று தான் கூறிக்கொண்டிருப்பார்கள். சிந்திரி யூரியா என்று கூறிக்கொண்டிருப்பார்கள். இப்படிப் பெயர்களைச் சொல்வார்களே தவிர, எந்த நிலத்திற்கு எந்த இரசாயன உரங்கள் போட்டால், எந்த விளைச்சல் நன்றாக இருக்கும் என்பதைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது. அதிகாரிகள் தான் இதைக் கூற முடியுமே தவிர, விவசாயிகளால் உணர முடியாது. ஆய்வுக் கூடங்கள், அதாவது மண் பரிசோதனை நிலையங்கள், ஒன்றிரண்டு தான் இருக்கின்றன, அல்லது மாநிலத்திலே 5, 6 இடங்களிலே இருக்கின்றன என்று நினைக்கிறேன். ஒவ்வொரு யூனியனுக்கும் மொபைல் யூனிட் என்ற முறையில் மண் வள பரிசோதனை செய்வதற்கு வழி வகை செய்ய வேண்டும். அவைகள் பல இடங்களுக்குச் சென்று மண்ணைப் பரிசோதனை செய்து என்னென்ன உரங்களை எந்தெந்த மண்ணுக்கு எந்தெந்தக் காலத்தில் போட்டால் நலமாக இருக்கும் என்று தெரியப்படுத்துவது நலமாக இருக்குமென்று இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் பல நேரங்களில் குறிப்பிட்டுக் காட்டியும், எடுக்கப்படவில்லையென்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் செய்தால் தான் விவசாயம் தரமுள்ளதாக ஆகி, நாம் சொல்கிற பசுமைப் புரட்சி ஏற்பட முடியும். நேற்றைக்குப் போட்ட உரம் இன்றைக்குத் தேவையில்லை என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளுக்கே கூட எந்த உரத்தை எப்போது போடுவது என்பதில் குழப்பமாக இருக்கிறது. இன்றைக்கு நம் மாநிலத்தில் இருக்கிற கோவை விவசாயப் பல்கலைக் கழகம் நீண்ட நாட்களுக்குப் பின்னால்

மாட்டுச் சாணம் நல்ல உரம் என்று ஏதோ புதிதாகக் கண்டுபிடித்த மாதிரி பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. காலாகாலமாக, பாரம் பரியமாக, பாட்டன் காலத்திலிருந்தும் அதற்கு முன்னுலிருந்தும், மாட்டுச் சாணத்தைப் போட்டும், தழை உரங்களைப் போட்டும் மனிதன் பயிரிட்டுக் கொண்டிருந்தான். இவர்கள் ஏதோ தாங்கள் புதிதாகக் கண்டுபிடித்த மாதிரியாக நமக்குச் சொல்லும்போது, நமக்கு வேடிக்கையாகவும் இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது. விவசாயிகள் இதையெல்லாம் பார்க்கும்போது, இவர்கள் இதைச் சொல்வதற்காகத் தான் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தினுர்களோ என்ற ஐயப்பாட்டு உணர்வு கொள்கிறுர்கள். இதையெல்லாம் தவிர்த்து, இந்த இரசாயன உரங்களை எப்படிப் போடுவது என்பதை மனதிலிருத்தி காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பூச்சிக்கொல்லி மருந்து கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவரவர்களே, பூச்சிக்கொல்லி மருந்து எந்த ஊரில் இல்லையென்று சொன்னுல், இங்கே அதிகாரிகள் எல்லாம் வந்திருக்கிற காரணத்தினுல், அதைத் தெரிந்துகொண்டு நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. எல். பலராமன்: அமைச்சரவர்கள் எந்த ஊரில் இல்லை என்ற விவரத்தைத் தெரிவிக்கும்படி கேட்டார்கள். மிக்க நன்றி. டி.டி.டி. 5 சதவீதம் டி.டி.டி. 50 சதவீதம் எங்கள் யூனியனில், அதாவது கணியம்பாடி யூனியனில் கிடைக்கவில்லை என்பதைப் பணிவுடன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். எங்கள் மாவட்டத்தில் கூட பரவலாகக் கிடைக்கவில்லை. பஞ்சாயத்து யூனியனில் 27 ரூபாய் அளவிற்கு விற்கக்கூடிய டி.டி.டி. 5 சதவீதம், 50 சத வீதம் போன்றவைகள் வெளி மார்கெட்டில் 50, 60 ரூபாய் அளவிற்கு வியாபாரி களிடம் கிடைக்கின்றன. இதைக் கேட்டால், மத்திய சர்க்கார் கொள்கை என்று சொல்வார்கள். ஆனுல் இந்தப் பஞ்சாயத்து யூனியனில் ஆண்டு ஆரம் பத்தில், அதாவது சம்பா நடவிற்கு முன்னுல், மருந்து அதிகமாக இருந்தது. திடீரென்று காணுமல் போய்விட்டது. எங்கள் மாவட்டத்தின் மூலமாக அண்டை மாநிலங்களுக்குச் சென்றுவிட்டது என்பதை நான் தெரிந்து கொண்டேன். மாவட்ட பார்டர் இடங்களில் மற்ற மாநிலங்களுக்கு, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்குப் போன லாரிகளை மடக்கி, பூச்சிக்கொல்லி மருந்து களையெல்லாம் பிடித்தார்கள். இப்படி வெளியில் அதிக விலையில் பூச்சிக்கொல்லி மருந்து விற்கப்படுகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களில் வரவழைக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை

நல்ல முறையில் விற்க ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆரம்பத்தில் இருந்த விலைகளைக் காட்டிலும், நாளுக்கு நாள் விலை ஏறிக்கொண்டு போகின்றன. நேற்றிருந்த விலை மறு நாள் இல்லை என்கிற அளவிற்கு விலை பல மடங்கு ஏறிக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, இதற்கு விலைக் கட்டுப்பாடு கிடையாதா? விவசாயி உற்பத்தி செய்யும் நெல் உற்பத்திக்கு மட்டும் விலைக் கட்டுப்பாடா? இது மனிதாபிமானக் கேள்வியாகும். இங்கே பேசிய அங்கத்தினர்களெல்லாம் நெல்லுக்கு ஒரு நல்ல விலை நிர்ணயிக்க வேண்டுமென்று கூறினார்கள். நான் கூறும் அபிப்பிராயம் இது தான். அரசு தன்னிடத்தில் பல ஆராய்ச்சிப் பண்ணைகளை வைத்துக்கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய அதிகாரிகள் இருக்கிறார்கள். அங்கே, அந்தப் பண்ணைகளில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களில் நீங்கள் பரீட்சார்த்தமாக நெற்பண்ணை வைத்து ஒரு மூட்டை நெல் உற்பத்தி செய்ய என்ன செலவாகிறது என்று கண்டு பிடித்து, அரசாங்கத்திற்கு எவ்வளவு கட்டுப்படியாகிறதோ அந்த அளவிற்கு விவசாயிகளுக்குக் கொடுத்தால் போதும் என்று தான் ஏழை எளிய விவசாயிகள் பணிந்து கேட்கிறோம். இந்த அடிப்படையில் விலை நிர்ணயிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அமைச்சரவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பூச்சி மருந்துகளில் சிலவற்றைப் பயிர்களுக்குப் போட்டுப் பயிரிடுவதால், சர்ம நோய்கள் வருகின்றன என்று பரவலாக டாக்டர்கள் கருதுகிறார்கள். இது எதிர்காலத்தில் மக்களுக்கு பாதகம் விளைவித்துவிடாதபடி அரசாங்கம் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6·30 பி. ப.

திரு. எஸ். டி. ஆதித்தன்: தலைவரவர்களே, இந்த மாதிரிப் பிரசாரம் செய்து வருவது நாட்டுக்கு மட்டுமல்ல, யாருக்குமே நல்லதல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, நல்லது என்பதால்தான் இந்த அவையில் கூறுகிறேன். இத்தாலி நாட்டில் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னால், நிலங்களில் இந்த டி.டி.டி. 5 சதவீதம் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் போட்டு வந்ததன் காரணமாக, அங்கிருந்த தவளைகள், நரிகள் இவைகளுக்கு கண்கள் தெரியாமல் போய்விட்டன. அந்தக் காலத்தில் பரி வேட்டை என்று கேள்விப்பட்டிருக்கலாம். அப்படி அங்கு வேட்டை ஆடச் சென்றவர்கள், நரிகளை நெருங்கிச் சுடுவதற்கு முயற்சித்தபோது, அவைகள் ஓடாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தன. காரணம் அந்த நரிகளுக்குக் கண் தெரியவில்லை. பிறகு ஆராய்ச்சி செய்து பார்த்தபோது, அந்த நிலத்தில் இறந்து கிடந்த

வெட்டுக்கிளிகளை அந்த நரிகளும் தவளைகளும் தின்றுகொண்டிருந்தனவாம். அந்த வெட்டுக்கிளிகள் அந்த மருந்தின் காரணமாக இறந்து விட்டவை என்று தெரிய வந்திருக்கிறது. அந்த அளவுக்கு மேலே நாடுகளில் ஆராய்ச்சி செய்து பார்க்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இட்டிலியா, தோசையா, அதை முதலில் சொல்லுங்கள்.

திரு. எல். பலராமன்: இத்தாலி நாட்டில் என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வது இத்தாலி நாட்டில் எப்பொழுதோ நடந்தது. இன்றைக்கு நாட்டுக்குத் தேவை உணவுப் பொருள்கள். அந்த நேரத்தில் இந்த மாதிரியான தவருன பிரசாரங்களைச் செய்வதன் மூலமாக உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனிதன் உணவு சாப்பிட முடியாமல் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும். இத்தாலி நாட்டில் யார் சொன்னர்கள்? இத்தாலி நாட்டில் எந்த ஆராய்ச்சிக் கூடத்தில் சொன்னர்கள்? நான் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்தேன். கடைசியில் பதில் சொல்லலாம் என்று இருந்தேன். உறுப்பினர் அவர்கள் மீண்டும், மீண்டும் அதையே சொல்வதால், இப்பொழுதே பதில் சொல்ல விரும்பினேன்.

சாயில் டெஸ்டிங் லெபொரெட்டரி ஒன்று, இரண்டு, மூன்று என்று கூட்டிக் கொண்டே போனர். தமிழ் நாட்டில் மொத்தம் 16 இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திலும் இருக்கிறது. அதையும் தவருகச் சொல்லிக்கொண்டு போவது நல்லதல்ல.

அடுத்து, பூச்சிக்கொல்லி மருந்து உபயோகிக்கப்படுவதால் பாதகம் ஏற்படுபடுகிறது என்று சொன்னர். நோபல் பரிசு பெற்ற . என்ற நிபுணரே பூச்சிக்கொல்லி மருந்துகள் போடலாம் என்று சொல்லியிருக்கிருர். ஆகையினல் அதன் மூலம் பாதகம் ஏற்படும் என்று சொல்வது உண்மையல்ல. மனிதன் கொஞ்சம் பாதிக்கப்பட்டால்கூட பாதகமில்லை என்று அந்த நோபல் பரிசு பெற்ற நிபுணர் வெகு சமீபத்தில் சொல்லியிருக்கிருர். பூச்சிக்கொல்லி மருந்தால் யாருக்காவது உயிருக்கு ஆபத்து வந்தது என்றுல், ரூபாய் 1,000

தருவதாக அரசு சொல்லியிருக்கிறது. உங்களுடைய மாவட்டத்திலிருந்து யாரும் கேட்கவில்லை, கொடுக்கவும் இல்லை. ஆனல் பூச்சிக்கொல்லி மருந்தால் பாதகம் என்று சொல்லி உபயோகப்படுத்தாமல் இருந்து விட்டால் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும். இப்பொழுது நாம் ஒரு ஏக்கருக்கு இரண்டு டன், இரண்டரை டன், ஐ.ஆர். 8 ஆக இருந்தால் மூன்று டன் விளைச்சல் பெறுகிறோம். இந்த மாதிரி நாம் போடாமலிருந்தால், நாற்றங்காலிலேயே அவைகள் கருகிவிடும். இன்னெரு தவறையும் சொல்கின்றர். தொழு உரம் மிக நல்லது அதை இப்பொழுதுதான் கண்டுபிடித்திருக்கிருர்கள் என்று சொல்கிருர். இப்பொழுது யாரும் கண்டுபிடிக்கவில்லை. தொழு உரத்தில் 1 சதவீதம்தான் நைட்ரஜன் உர சத்து இருக்கிறது. இப்பொழுதும் அவ்வளவுதான் இருக்கிறது. அதிகமாக இருக்கிறது என்று யாரும் சொல்லவில்லை. அப்படி எந்தப் பல்கலைக் கழகமும் சொல்லிவிடவில்லை. மாருக திரு. வெங்கா அவர்கள் சொன்னர்கள், வேப்பம் புண்ணக்கில் 5 சதவிதம் இருக்கிறது என்று. அம்மோனியம் சல்பேட்டில் 20 சதவிதம் இருக்கிறது. அம்மோனியம் குளோரைடில் 25 சதவீதம் இருக்கிறது. யூரியாவில் 45 சதவீதம் இருக்கிறது. ஐ.ஆர். 8 போன்றவற்றில் ஏக்கருக்கு மூன்று டன் உற்பத்தி செய்ய வேண்டுமானல், நிச்சயமாக ரசாயன உரங்கள் போட வேண்டும். தொழு உரத்தை வைத்துக்கொண்டு யாரும் அவ்வளவு விளைச்சலைப் பெற்று விட முடியாது. உண்மைக்குப் புறம்பாக எதையும் சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களே பல கேள்விகளை என்னை நோக்கிக் கேட்டார்கள். அவரது கேள்விகளுக்கு எனது நன்றியும் வணக்கமும் உரித்தாகுக. ஏதோ நான் சொல்வதால் மக்கள் பூச்சி மருந்துகளை வாங்கித் தெளிக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தில் நான் சொல்லவில்லை. நம்முடைய பொது மக்கள் பாதிக்கப்படக் கூடாது, அதற்கான வழியில் அந்தப் பிரிவில் உள்ளவர்கள் ஆராய்ச்சி செய்து மனித உடலுக்குப் பொருந்துமா இல்லையா என்று பார்த்து அதன் பிறகு நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் ஐ.நா.வில் கூட டி.டி.டி. 50 சதவீதம் உலக நாடுகளில் உற்பத்தி செய்து உபயோகிக்கக் கூடாது என்ற ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிருர்கள். நமது நாட்டில் அதை பல்வேறுன மாநிலங்களிலும் போட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலும் போடுகிறோம். அதனல் பல விளைவுகள் ஏற்படுகின்றன. எனக்கு ஒரு டாக்டர் சொன்ன அளவுக்குத்தான் நான் இங்கு சொல்கிறேன். யார் சொன்னர்கள் எப்படிச் சொன்னர்கள் என்ற நிலைமையைச் சொல்வதற்கு என்னல் இயலாது.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, யாரோ ஒரு டாக்டர் சொன்னூர் என்றூல், மக்கள் நம்பமாட்டார்கள். ஆனல் திரு. பலராமன் சொல்கின்ற போது அதற்கு முக்கியத்துவம் இருக்கிறது. அவர் சொன்னல் அதற்கு மக்களிடம் நம்பிக்கை ஏற்பட்டுவிடும். ஆதலால் யோசித்துச் சொல்ல வேண்டும்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, நான் அனுபவபூர்வமாகக் கூற வேண்டுமானல், சொல்லத் தயாராக இருக்கிறேன். இது பெரும் பிரச்சினையாகக் கிளம்பி விட்டதால், நான் இங்கு சொல்கிறேன். நான் ஒரு விவசாயி. எனக்கு திராட்சைத் தோட்டம் இருக்கிறது. மருந்து தெளித்தால்தான், அதாவது பாலிடால் தெளித்தால்தான், அதிக விளைச்சல் கிடைக்கிறது. அந்தப் பழங்களைக் கழுவாமல் அப்படியே சாப்பிட்டால், தொண்டையில் கரகாப்பு ஏற்படுகிறது. அதன் விளைவாகப் பிற்காலத்தில், நம்முடைய இறுதிக் காலத்தில் சர்ம வியாதிகள் ஏற்படுகின்றன என்று கூறுகிறூர்கள். அதனல்தான் மக்களுக்கு எந்தவிதமான பாதகமும் இருக்கக்கூடாது என்ற முறையில் அதிகாரிகள் நல்ல முறையில் மருந்துகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்லபடி ஆராய்ச்சி செய்து பார்த்த மருந்துகளை மட்டும் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது) எங்கள் தலைவர் இல்லை. நான் தலைவருக்காகவும் சேர்த்துப்பேச வேண்டியிருக்கிறது. இடையில் குறுக்கீடுகள் இருக்கின்றன. தயவுசெய்து கொஞ்சம் அதிக நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஐந்து நிமிஷம்தான்.

திரு. எல். பலராமன் : இங்கு வேளாண்மைத் துறை உற்பத்தியைப் பொறுத்த புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறூர்கள். இவற்றைப் பார்க்கும் போது, நான் பொதுவாகக் கூறவேண்டுமானல், பழைய காலத்தில் அரசாங்கப் புள்ளி விவரங்கள் எல்லாமே தப்பு என்று கூறும் வார்த்தைகள் ஞாபகத்திற்கு வருகின்றன. இது எப்படித் தப்பாக இருக்கலாம் என்று கேட்டால், என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இது போன்ற புள்ளி விவரங்களைப் பார்த்தால், அதை உணர முடியும். எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நான் இதை எடுத்துக் காட்ட முடியும். என்னல் மாநில அளவில் நிரூபிக்க முடியாது. எல்லா மாவட்டங்களிலும் இந்த மாதிரி முறையில் சேகரிக்கப்பட்டு இங்கே மாநில அளவில் மொத்தமாகத் தயாரிக்கப்

படுகிறது. அந்த முறையில் இதிலே தவறு இருக்கும் என்று என்னுல் கூற முடிகிறது. இதுபோன்று தவருன புள்ளி விவரங்களைத் தரவேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஐ.ஆர். 8, 20, 22 போன்ற புதிய நெற்களை நல்ல முறையில் அந்தப் பிரிவினர் கண்டுபிடித்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிருர்கள். ஒரு விவசாயியிடம் 100 மூட்டைகள் இருந்தால், அது முளைக்கக் கூடியதா இல்லையா என்றுகூடப் பார்க்காமல், அதை வாங்கி வந்து விடுகிருர்கள். அப்படி முளைக்காத வித்து டிப்போவில் நிறைய இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விதைகளெல்லாம் முளைக்கக்கூடிய விதைகள்தானு என்று நல்ல முறையில் பரிசீலித்து அதன் பிறகே விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக மூன்று ஆண்டுகளுக்கு மேல் அந்த விதைகளில் வீரியம் இருப்பதில்லை. அப்படி இருக்கும்போது விவசாயிகளிடமிருந்து 5, 6 ஆண்டுகளுக்குப் பின்னுல் வாங்கும் நிலைமையில் இருக்கிருர்கள். பண்ணைகள் ஏற்படுத்தி புதிய நெல்கள் எல்லாம் உற்பத்தி செய்கின்ருேம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். அதைப் பாராட்டி அவற்றை நல்ல முறையில் செய்ய முயற்சிக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு அடுத்து ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். கொள் விளையும் நிலங்களில் பருப்பு வகைகளை உற்பத்தி செய்ய வகை செய்வோம் என்ற தகவலைப் பார்த்தேன். சாதாரணமாக கொள் விளையும் நிலத்தில் மற்ற பயிர்கள் செய்ய முடியாது என்ற நிலைமை இருந்தாலும், அதைச் செய்ய ஏற்பாடு செய்வது வரவேற்கத்தக்கதாகும்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மாவட்ட விற்பனை சங்கத்திற்கு—மார்க்கெட்டிங் கமிட்டிக்கு தேர்தலே நடைபெறுவதில்லை. ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் நிலைமையில் தேர்தலையே நடத்த விடாமல் தடை செய்து வருகிருர்கள். அதை ஏன் நடத்தவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை எல்லாம், மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக விவசாயிக்கு ஆயில் என்ஜின் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆயில் என்ஜின் விலையும் உயர்ந்திருக்கிறது. இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னுல் சாராயத்தால் ஓடக்கூடிய என்ஜின்களைத் தயாரிக்க இருக்கிருேம் என்று கூறினுர்கள். அது விரைவில் கிடைக்கக்கூடிய அளவுக்கு பொறியாளர்கள் விரைந்து பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6.40 பி.ப.

இந்த விஞ்ஞான காலத்தில் நில உச்ச வரம்பு என்று வைத்து, அதன் காரணமாக பெரிய டிராக்டர்களைக் கொண்டு விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறது. அயல் நாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் டிராக்டர்களின் விலை ஒன்றுக்கு இரண்டு மடங்காக ஆகியிருப்பதைப் பார்க்கின்றபோது, சிறு விவசாயிகளுக்காக சிறிய டிராக்டர்களை உற்பத்தி செய்ய என்ன வழிவகை செய்து கொண்டிருக்கிறோம் என்று பார்த்தால், வேதனையாக இருக்கிறது. இன்றைக்கு மாடும் கிடைப்பதில்லை. மதிப்பிற்குரிய வெங்கா அவர்கள் கூறியது போன்று, மாடு வாங்க கடன் கொடுக்கப்படாததால், மாடு வாங்கி உழவு செய்ய முடியவில்லை. ஆகவே சிறிய விவசாயிகளுக்கு கிருஷிக் போன்ற 5 குதிரையோட்ட சக்தி உள்ள டிராக்டர்களை, ஜப்பான் கார்டன் லேண்டில் வாங்கப்படக்கூடிய டிராக்டர்களை வாங்கி விவசாயிகளுக்கு வழங்கத் திட்டம் செய்யப்பட வேண்டும். ஆரம்பத்தில் நான்காயிரம், ஐந்தாயிரம் என்றிருந்த டிராக்டர்கள், இன்றைக்கு 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. விவசாயிகள் வாங்குகின்ற மோட்டார் போன்றவை எல்லாம் விலையேறியிருப்பது போல், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் விலையும் உயரும் என்று அரசாங்கமும், மக்களும் கூறுவது. . . . (மணியடிக்கப்பட்டு பேச்சு முடிக்கப்பட்டது).

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதையெல்லாம், ஒவ்வொன்றாக நான் நன்றாகக் குறித்து வைத்திருக்கிறேன். ஆகையால் நேரமிருந்தால் எல்லோருக்கும் தனித்தனியாகக் கூட பதில் சொல்ல முடியும். ஆனால் இப்போது நேரமில்லை. நான் மட்டும் குறித்து வைத்து சும்மா விட்டுவிடாமல், அதிகாரிகளும் இங்கே வந்து குறித்துக்கொண்டிருக்கிறார்கள்; ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியவற்றை எல்லாம் நன்றாக ஆராய்ந்து பார்த்து, அவர்கள் கருத்தைப் பின்பற்றி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அவை எடுக்கப்படும் என்ற உறுதியை முதலில் கூறிக்கொள்கின்றேன்.

விவசாயத்தின் அடிப்படைக் கொள்கை என்ன என்பதை நான் முதலில் விளக்கிவிட்டால், பின்னால் இந்தத் துறையிலே நடக்கின்ற பல காரியங்கள் நன்றாக விளங்கும் என்று கருதுகிறேன். 'What is the basic policy' தமிழ்நாட்டு விவசாயத்தை எந்தத் திசையை நோக்கி இந்த அமைச்சு அழைத்துக்கொண்டுபோகிறது என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாகச் சொல்வதென்றால், இந்தத் துறையின் அடிப்படைக் கொள்கை விவசாய உற்பத்தியைப் பெருக்குவது என்று சொல்லிவிட முடியும். அதுதான் விவசாயத் துறையின் நோக்கமாக இருந்தாக வேண்டும். விவசாய

உற்பத்தியை இரண்டு வகையில் பெருக்க முடியும். ஒன்று, விவசாயம் செய்யக் கூடிய நிலப்பரப்பை அதிகரிப்பது. அம்மாதிரி அதிகரிப்பதற்கு தமிழ் நாட்டில் மேலும் வழியில்லை. ஆகையினால் நாம் அடுத்த முறையைத் தீவிர மாகக் பின்பற்ற வேண்டுமென்று முனைந்து நிற்கின்றோம். ஒரு எக்கர் நிலத் தில் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு விளைவிக்க முடியுமோ அதை அதிகரிப்பது, 'To get more per acre per year' என்று முனைந்து நிற்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பக்கர், எவ்வளவு வருமானம் வருகிறது என்று கேட்டார்கள். நான் அடிப்படையைச் சொல்கிறேன். எந்தப் பயிரை யார் விளைவிக்கின்றேன் என்றாலும், நான் முதலில் இதைத்தான் கேட்பேன். எவ் வளவு நாள் பயிர்? இந்தப் பயிரை விளைவித்தால் செலவுபோக ஒரு வருடத் தில் என்ன லாபம் கிடைக்கும், என்று இந்த அடிப்படைக் கேள்வியைக் கேட்டு, எது அதிகமாக லாபம் கொடுக்க முடியுமோ அதை விளைவிக்கச் சொல்லி வருகிறேன். சில புது ரகங்களைச் சொல்லி வருகிறேன் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இதுவரையில் சில மாவட்டங்களில் 'டாபி யோகா', மரவள்ளிக் கிழங்கு விளைவிக்கப்படவில்லை. அதைப் பெருவாரியாகப் பெருக்கிக்கொண்டு வருகிறோம். வெங்காயத்தில் புதிய ரகம் கண்டுபிடிக்கப் பட்டு, ஒரு எக்கரில் 60 நாளில் 5,000 கிலோவுக்கு மேல் விளைகிறது. இப்படிப் பட்ட காரியங்களையெல்லாம் செய்து, ஒரு எக்கரில் எவ்வளவு அதிக விளைச்சல் காணமுடியுமோ, அவ்வளவு அதிக விளைச்சல் கண்டாக வேண்டும். அதை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். அதிக விளைச்சல் என்று சொல்லு கின்றபோது நண்பர் ஒருவர், விவசாயி பாதி நாள் சும்மா இருக்கிறான்; அவன் நேரம் பாழாகிறது என்றார். அப்படிக் கிடையாது. நமது பொருளாதாரப் புத்தகங்களில். . .

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, சேலம் பகுதியிலே அதிகமாக மரவள்ளிக் கிழங்கு பயிராகிறது. அங்கே அந்தப் பயிர் இயற்கையாக அதிக மாக நோயால் பாதிக்கப்படுகிறது. அந்த நோயைத் தீர்க்க முடியவில்லை. நோய் வராத குச்சி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? அது உடனடியாக இண்டிரடியூஸ் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, குறிப்பாக நான் மாதிரிக்காகச் சொன்னேன். மூன்று நாளைக்கு முன்னால் நான் சேலம் சென்றிருந்தபோது, இந்த மாதிரி நோய் இருக்கிறது என்று கேள்விப்பட்ட வுடன், 'மொசேயிக்' என்ற மரவள்ளிக் கிழங்கு வியாதி தாக்குகிறது என்று அறிந்து, அதற்கு என்ன மருந்து போடலாம், எப்படிச் சீர்ப்படுத்தலாம் என்று ஆலோசித்துவிட்டு, அங்கே புதிதாக 97-ஆம் நம்பர் மரவள்ளிக்

கிழங்கையும், 226-ஆம் நம்பர் மாவள்ளிக் கிழங்கையும் போட்டரல், இலகுவாக நோய் நொடியால் தாக்கப்படாது, லாபகரமாக இருக்கும், என்று அந்த ரகங்களைப் போடும்படி சொல்லியிருக்கிறேன். வேறுபல மாவட்டங்களில் கூட இதனல் அதிக வருவாய் கிடைக்க முடியும். நான் சொன்ன 97-ஆம் நம்பர் மரவள்ளிக் கிழங்கு ரகம், ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு—ஆண்டு என்ருல் நாள் முழு ஆண்டு என்றுகூட சொல்லவில்லை, 8, 9 மாதங்களில்—ஒரு ஏக்கர் ஒன்றுக்கு 30 டன் விளையும். அப்படி அதிக விளைசல் காணக்கூடிய பயிர்களை நாம் பயிர்செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு வருவாயைப் பெருக்க வேண்டும். நிச்சயமாக நாம் அதைச் செய்தாக வேண்டும். சில நாட்களுக்கு முன்பு பேரவையில் ஒரு வாதம் வந்தது. யாருக்கு விவசாயம் தெரியும், யாருக்கு விவசாயம் தெரியாது என்ற வாதம் எழுந்தபோது, நான் கூறியது, யார் விவசாயத்தில் லாபம் பெற முடியும் என்று சொல்கிருர்களோ அவர்கள் விவசாயம் தெரிந்தவர்கள்; யார் உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது, நஷ்டத்தில்தான் நடைபெறும் என்கிருர்களோ, அவர்கள் விவசாயத்தைப் போதுமான அளவுக்குப் புரிந்துகொள்ளவில்லை என்று பொருள் என்று சொன்னேன். எவனெருவன் நிலத்தை கைவசம் வைத்துக்கொண்டு, அதற்குப் பிறகு கூட தான் வறுமையாக இருக்கின்றேன், வறுமையின் காரணத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறேன் என்று சொல்கிருனே, அவனைப் பார்த்து "நிலமெனும் நல்லாள் நகும்", அந்த நிலமே அவனைப் பார்த்துச் சிரிக்கும் என்று முன்காலத்திலேயே கூறப்பட்டிருக்கிறது.

நான் விவசாயத்தின் அடிப்படைக் கொள்கையைச் சொன்னேன். இப்போது உடனடியாக நம் முன்னல் நிற்கின்ற பிரச்சினை என்ன என்பது எனக்கு நன்ருகத் தெரியும். நான் வேறு பயிர்களுக்குப் போகவில்லை. நெல்லைப்பற்றிப் பேசுகிறேன். நெல் பயிருக்கு போதிய உரமில்லை, போதிய பூச்சிக் கொல்லி மருந்தில்லை என்று சொன்னுர்கள். பூச்சிக்கொல்லி மருந்து இல்லை என்ற பிரச்சினை இனிமேல் வராது. அதை நான் உறுதியாகச் சொல்ல முடியும். ஏனென்ருல் இன்றைக்கு விவசாயத் துறையினிடத்தில் ஏறத்தாழ ஒரு லட்சம் லிட்டர் எண்டிரீன் (Endrine) இருக்கிறது. ஒரு லட்சம் கிலோ B.C.H.10 கைவசமிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது எந்த டிப்போவிலாவது மருந்தில்லை என்று தெரிவிப்பார்களேயானல், உடனடியாக அனுப்ப முடியும். ஆகவே நான் பூச்சிக் கொல்லி மருந்தைப்பற்றி அதிகமாகச் சொல்லவில்லை. அதை எப்படி உற்பத்தி செய்ய முடியும் என்பதைக்கூட நாம் பார்த்து வந்திருக்கிருேம். உரத்தைப்பற்றிச் சொல்கின்றபோது, ரசயான உரம் மிகவும் தேவை; ரசாயன உரமில்லாமல் நெல்லை விளைவிக்க முடியாது என்பது

நமக்குத் தெரியும். நண்பர் திரு. வெங்கா பேசும்போது, சில விஷயங்களைச் சொன்னார்கள். அவர்களுடைய சில கருத்துக்களுக்குப் பதில் சொல்வதாக இருக்கிறேன். நெல் பயிருக்கு 17, 17, 17 போடுவதாக நண்பர் திரு. வெங்கா சொன்னார்கள். 17 நைட்ரஜன், 17 பாஸ்பரஸ், 17 பொட்டாசியம், 17 தழைச் சத்து, சாணிச் சத்து என்று சொல்வார்கள். நான் திரு. வெங்கா அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 17, 17, 17 நெல்லுக்குப் போட வேண்டாம். நெல்லுக்குப் பொட்டாசியம் தேவை கிடையாது. தமிழ் நாடு பூராவும் ஏராளமான பொட்டாசியம் நிலத்தில் இருப்பதால், கலப்பு உரம் செய்கிறவர்களைக்கூட நான் கேட்டிருக்கிறேன். நீங்கள் 17 நைட்ரஜன் என்று போடுவதாக இருந்தால், அதில் பாதி வேண்டுமென்றால் பாஸ்பரஸ் போடுங்கள் என்று. அதுகூடத் தேவையில்லை நெல்லுக்கு. நெல்லுக்கு நைட்ரஜன்தான் உரச்சத்து. யூரியாவில் 45 சதவீதம் நைட்ரஜன் இருக்கிறது. அமோனியம் குளோரைடில் 25 சதவிகிதம் நைட்ரஜன் இருக்கிறது. அமோனியம் சல்பேட்டில் 20 சதவிகிதம் நைட்ரஜன் இருக்கிறது. உரங்களைப் பற்றிச் சொல்லும்போது. கோழியின் எச்சத்தைப்பற்றிக்கூடச் சொன்னார்கள். அது நல்ல உரமென்று புத்தகத்தில் இருக்கிறது. ஆனால் அதிலே 1.46 சதவிகிதம்தான் நைட்ரஜன் இருக்கிறது. அதைக் கொண்டு நிலத்தில் நெல்லை விளைவிக்க முடியுமென்று சொல்லும்போது, அதை ரசாயன உரத்தோடு சேர்த்துப் போட்டாலொழிய நல்ல விளைச்சல் இருக்காது. அதே போன்று தழை உரம், குழி உரம், கம்போஸ்ட் உரம் போன்றவைகளை மட்டும் போட்டு விளைவிக்க முடியுமாவென்று பார்த்தால், அதில் ரசாயன உரத்தின் அளவுக்குப் பலன் கிடைக்காது. ரசாயன உரம் போட்டுப் பயிர் செய்யும்போது, ஐ.ஆர். 8 போன்ற பயிர்களில் ஏக்கருக்கு 3 டன்னும், கருணை போன்ற பயிர்களில் ஏக்கருக்கு 2 டன்னும் கிடைக்கும். அந்த அளவுக்கு விளைச்சலை இந்த உரங்களின் மூலம் எதிர்பார்க்க முடியாது. சாதாரண உரத்தில் நைட்ரஜனை அதிகமாகச் சேர்ப்பதற்கு வழிகளைக் கண்டுபிடித்து, ஏறத்தாழ 10 அல்லது 12 சதவிகிதம் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறோம். உரம் பெருவாரியாக கள்ளச் சந்தையில் விற்கப்படுகிறதென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சொல்லுவது தவறல்ல என்பது எனக்குத் தெரியும். இதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்க வேண்டும். முதலில் பற்றாக்குறை இருக்கிறது. பற்றாக்குறை எவ்வளவு என்பதுபற்றிப் புத்தகத்தில் புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறேன். முதலில் மத்திய அரசு 1,75,000 டன் உரம் தருகிறேன் என்று சொல்லி, 1,61,900 டன் உரம் ஒதுக்கப்பட்டு, நமக்கு வந்து சேர்ந்தது 87,186 டன்தான். அந்த அளவுக்கு மிகக் குறைவாக வந்து சேர்ந்தது. வருகிற இந்தப் பட்டத்திலேயும்கூட 1,30,000 டன் தருகிறேன் என்று

6·50 பி.ப.

சொன்னர்கள். மீண்டும் கடிதம் எழுதியிருக்கிறர்கள். இப்போது 1,18,000 டன் என்று குறைத்திருக்கிறர்கள். இன்னும் எவ்வளவு குறையுமோவென்பது வந்து சேரும்போதுதான் தெரியும். நிச்சயமாகப் பற்ருக்குறை இருக்கிறது. தமிழகத்தில் மட்டுமல்ல; அகில இந்தியாவிலும் இருக்கிறதென்பது மட்டு மல்லாமல், உலகம் முழுவதற்கும் இந்தப் பற்ருக்குறை இருப்பதை என்னுல் நிரூபிக்க முடியும். பல பத்திரிகைகளிலிருந்து காண்பிக்க முடியும். அப்படிச் சொன்னல், யாருடைய மனதும் நிறைவுபடாதென்பதும் எனக்குத் தெரியும். மற்றவர்களைச் சுட்டிக்காட்டி, அங்கே இன்னும் அதிகமாகக் கஷ்டப்படுகிறர் களென்ருல், அதனல் நமக்கு என்ன மகிழ்ச்சி ஏற்படப்போகிறது. குஜராத் தில் என்ன விலை கொடுத்தாலும், உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லையென்று கலவரம் நடந்ததென்ருல், அதில் நமக்கு என்ன மகிழ்ச்சி? மற்ற இடங்களி லும் பற்ருக்குறை இருக்கிறதென்று சொல்லி என்னை நானே ஏமாற்றிக் கொள்ளலாமே ஒழிய, உங்களில் யாரையும் திருப்திப்படுத்த முடியாது. நாம் நைட்ரஜன் உரங்களை உற்பத்தி செய்தாக வேண்டும். அமோனியம் சல்பேட் போன்றவற்றை உற்பத்தி செய்யும் பெரிய பெரிய தொழிற்சாலைகள் இல்லை யென்ருலும், சிறிய இயந்திரங்களை வைத்து, சாதாரண கம்போஸ்ட் உரத்தில் நாம் அதிகமான நைட்ரஜன் சத்தை ஏற்ற முடியுமென்று கண்டுபிடித்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு உள்ள உரப் பற்ருக்குறையை இல்லாமல் செய்ய முடியுமென்று சொல்லியிருக்கிறேன். தமிழ் நாட்டில் உணவுப் பற்ருக்குறை வருவதற்கு எனக்கு மனது வராது.

அடுத்தப்படியாக 'பிளாக் மார்க்கெட்டிங்' மூலம், கள்ளச் சந்தை மூலம் உரங்களை விற்கிறர்கள். மதுரை, தஞ்சை, தென் ஆற்காடு, சேலம் போன்ற மாவட்டங்களில் இந்த நிலைமை இருக்கிறது. கள்ளச் சந்தையில் லாரி லாரி யாகப் போவதை பல முறை பிடித்திருக்கிறேம். இதைப் பார்த்து நான் வேதனையடைந்திருக்கிறேன். அது மட்டுமல்ல. எனக்குள்ளாக ஒரு சங்கல்பம் செய்துகொள்ள வேண்டியவனுக இருக்கிறேன்; சபதம் எடுத்துக் கொள்ள வேண்டியவனுக இருக்கிறேன். என்னுடைய வாழ்நாளில், கள்ளச் சந்தையைப் பார்க்க எனக்கு என்ன தலைவிதி? அதை அழிக்காவிட்டால், இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பலனில்லை. இதை எப்படியாவது நிறுத்த வேண்டும். இதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்று பார்க்கும் போது, நம்மிடம் போதுமான அளவுக்கு கண்காணிக்க அதிகாரிகள் இல்லை. 9,465 இடங்களில் இந்த ரசாயன உரத்தை விற்ருலும் அதைக் கண்காணிப் பதற்கு 8 இன்ஸ்பெக்டர்கள்தான் நம்மிடம் இருக்கிறர்கள். ஆகையால் இன்னும் அதிகமாகக் கண்காணிக்கும் வேலையைப் பார்த்தாக வேண்டும்.

அதற்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். கள்ளச் சந்தையில் விற்பதைப் பிடிப்பது மட்டுமல்ல, இந்த 9,465 டெப்போக்களிலும் உரங்களை விவசாயிகளுக்குத்தான் விற்க வேண்டுமே தவிர, வியாபாரிகளுக்கு விற்கக் கூடாது. வேறு வியாபாரிகளுக்கு விற்றுமென்றால், அது கள்ளச் சந்தைக்கு அடிகோலும். இன்ன விவசாயிக்கு, இன்ன பயிருக்கு, இன்ன தேதியில் கொடுத்தோமென்று குறிப்புகள் இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியிருக்கிறோம். புதிதாக விதிகளைப் போட்டிருக்கிறோம். கண்காணிப்பாளர்களை அதிகப்படுத்தியிருக்கிறோம். இப்படி கள்ளச் சந்தையை நிறுத்தினால்தான் ஏராளமாக உரம் விவசாயிக்குக்கிடைக்கும். "Enriching the nitrogen content, ammoniated organic matter" என்பதை பெருமளவில் தயாரித்துக் கொடுப்போமானால், நிச்சயமாக நமக்கு இந்த உணவுத்துறையிலே பற்றாக்குறை வராது. இந்தத் துறையில் நாம் நல்ல பெயர் வாங்கியிருக்கிறோம். 5 மாநிலங்களுக்கு அரிசி கொடுத்திருக்கிறோம். பீகார், மேற்கு வங்காளம், மராட்டியம், கேரளம் போன்ற மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். குஜராத் மாநிலம் மிகவும் கஷ்டப்பட்ட நேரத்தில் கொடுத்திருக்கிறோம். 5 மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இந்தியாவிலுள்ள எந்த மாநிலமும், தங்களுக்கு உணவுப் பற்றாக்குறை இருக்கிறதென்று கேட்டால், கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை. ஆனால் இங்கே உற்பத்தி குறைந்துவிடுமானால், அவர்கள் கை ஏந்தியதற்குப் பதிலாக, நாம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படும். ஆனால், நான் பார்க்கிறவரையில் அந்த நிலைமை வராதென்பதை உணர்ச்சியோடு, என் முடிவான ஒரு தீர்மானமாகச் சொல்கிறேன். தமிழன் எந்த நாளும் கையேந்தி வாழ்ந்ததில்லை. "தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்று சொல்லுவார்கள். என்ன குணமென்றால் மானத்தை விட்டு உயிர் வாழ மாட்டான், "மயிர் நீக்கின் உயிர் வாழாக் கவரி மான்" போன்று. இன்னொரு இடத்திற்குப் போய், உணவுக்குக் கை நீட்டுகின்ற நிலைமையை உண்டாக்குவோமானால், இந்த விவசாயத் துறையில் நான் இருந்து பணியாற்றுவதற்கு அருகதையற்றவனே என்று என்னை நானே கேட்டுக்கொள்வேன். இதைப்பற்றி மட்டும் இவ்வளவு விளக்கங்களைச் சொல்வதால், மற்ற பயிர்களைப்பற்றித் தெரியாதென்று பொருளல்ல. உணவு உற்பத்தி அடிப்படையாக இருப்பதால், அது கட்டாயம் உற்பத்தி செய்தாக வேண்டிய பொருளென்று சொன்னேன்.

பல இடங்களைப்பற்றிச் சொன்னார்கள். நெல் உற்பத்தியைப்பற்றிச் சொன்னார்கள். அந்தக் கணக்குகூடத் தவறென்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப்படவில்லை. அரிசியைப் பார்ப்

போமாஞல், தஞ்சையில் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறேமென்று சொல்வதில், எந்த வித உண்மையுமில்லே. தஞ்சையைவிட மற்ற இடங்களில் அதிக உற்பத்தி செய்திருக்கிறேம். கிழக்கு இராமநாதபுரத்திற்கு வந்தால் தெரியும். முன்பெல்லாம் பஞ்சப்பிரதேசமென்று சொல்வார்கள். போன வருஷமும் இந்த வருஷமும் 'சர்ப்ளஸ்' ஆக இருக்கிறது. அங்கிருந்து கோவில்பட்டித் தாலூகாவிற்கு அரிசி போகக்கூடாதென்று செக் போஸ்ட் போட்டிருக்கிறேம். அங்கேயெல்லாம் தண்ணீருக்கு கிணறுகள் வெட்டி, உதவி செய்து, நெல் விளேவிக்க ஏற்பாடு செய்திருக்கிறேம். திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு ரோடு மார்க்கமாகப் போகும்போது, சுற்றிலும் பார்த்தால், தஞ்சை மாவட்டத்தில் எப்படி இருக்கிறதோ, அப்படித் தான் தோன்றும். இடையிடையே பம்ப்செட் கட்டிடம் இருக்குமே தவிர, தஞ்சை மாவட்டம் எப்படி விளங்குகிறதோ, அப்படித்தான் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ஐ.ஆர். 8 விளேவ

(பிற்பகல் 7-00)

இல்லே. அங்கே மொத்தத்தில் விளேச்சல் குறைவு. மற்ற மாவட்டங்களில் அதிகம். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஐ.ஆர். 8 விளேவித்து கண்டுமுதல் நிச்சயம் 3 டன் ஆகியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலேவர் : மாண்புமிகு அமைச்சரின் பேச்சு முடியும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : அடிப்படையான விஷயத்தைச் சொன்னேன். எங்கேயும் உணவு உற்பத்தி குறையாதவாறு பார்த்துக் கொள்வேன் என்றும் சொன்னேன். இயற்கை சற்று தன்மை செய்கிறது என்று சொன்ஞர்கள். அது உண்மையில்லே. நமக்கு 1967-க்கு முன்ஞல் பெய்த மழையைவிட அதற்குப் பிறகு பல ஆண்டுகள் மழை குறைவாகத்தான் பெய்கிறது. நமக்கு கங்கை, கோதாவரி, கிருஷ்ணு போன்ற பெரிய ஆறுகள் கிடையாது. நமக்கு காவிரி ஒன்றுதான் இருக்கிறது. ஆகவேதான் 6½ லட்சம் பம்ப் செட்டுகளே வைத்து நிலத்தடியில் உள்ள நிரையெடுத்துப் பயன்படுத்தக்கூடிய நிலேயிலே இருக்கிறேம். ஆற்றுத் தண்ணீர் நமக்குக் குறைவாக இருப்பதை இது சரிக்கட்டுகிறது. எப்படி தரையிலே ஆறுகள் ஓடுகின்றனவோ, மேற்கே இருந்து தென் கிழக்காக, தெற்கே இருந்து கிழக்காக ஓடுகின்றனவோ, அதேமாதிரி நிலத்தடியிலும் நீரோட்டம் இருக்கிறது. அதுவும் கிழக்கே, தெற்கே என்று ஓடுகின்ற காரணத்தால், அந்த நீரைப் பயன்படுத்துகிறேம். தமிழ் நாட்டிலே மழை குறைவு என்ற உண்மையை ஒப்புக்கொண்டாக வேண்டும். மேற்கே மேற்குத் தொடர்ச்சி

மலைகள், கிழக்கே இலங்கையிலே உள்ள மலைகள் ஆகியவற்றின் 'ரெயின் ஷேடோ' மழை நிழல் பகுதியிலேதான் நாம் வாழ்கின்றோம். இயற்கை ஒரு இடத்தில் குறை வைத்தால், மறு இடத்தில் நிறைவு செய்கிறது. ஆகவே நமக்கு மழையின் அருள் குறைவாக இருந்தாலும், நிலத்தடிநீர் அதிகமாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே எத்தனையோ கிணறுகளை வெட்டியிருக் கிறோம் என்பார்கள். ஆனல் இதுவரையில் நிலத்தடியில் உள்ள நீரில் அங்கே மொத்தத்தில் 4 சதவீதம் தான் பயன்படுத்தியிருக்கிறோம். Ninety-sixpercent fo the water underground is still unexploited அதை அதை எடுத்து பல இடங்களுக்கு அனுப்ப முடியும். ஆகையினல் இயற்கையாக மழை பெய்தாலும் அல்லது மழை குறைந்தாலும், நமது தேவைக்கு அதிகமாக நீரை உற்பத்தி செய்ய முடியும். அதற்கு நிலத்தடி நீர் நிறைய இருக்கிறது என்று சொல்லிவிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன இரண்டொரு கருத்துக்களுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வெங்கா அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகிற போது, நம் மாநிலத்தில் நெல் தன்னிறைவு ஏற்பட்டிருக்கிறது, உபரியாக உற்பத்தியாகிறது என்று சொன்னர்கள். தஞ்சை மாவட்டத்தில் 13 இலட்சம் ஏக்கரில் நெல் விளைவிக்கிறோம். பேரறிஞர் அண்ணு அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே ஒரு திருத்தத்தைச் செய்தார்கள். அவர்கள் பொருளாதாரத்தில் ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தினர்கள் என்பதை உலகம் போகப் போகத் தெரிந்துகொள்ளும். நாமெல்லாம் மேல்நாட்டில் உள்ளவர்களுடைய பொருளாதாரப் புத்தகத்தைப் படித்தவர்கள். அதைச் சொல்லிக்கொண்டே இருந்தோம். விவசாயம் என்பது 'சீசனல் ஆப்பரேஷன்' கொஞ்சநாள் ஒரு மனிதனுக்கு வேலை கொடுக்குமே தவிர, ஆண்டு முழுதுக்கும் வேலை கொடுக்காது என்று பாசிக் என்று ஒருவர் எழுதியிருக்கிறர். அதை அப்படியே காப்பி அடித்து பொருளாதாரக் கல்லூரிகளிலே படித்திருக்கிறோம். இது இங்கிலாந்து நாட்டில், ஜெர்மன் நாட்டில், அமெரிக்க நாட்டில் உண்மை யாக இருக்கலாம். ஏனென்றல் அங்கேயெல்லாம் 50, 60 நாட்களுக்குத்தான் வெயில் அல்லது மழைக்காலம். குளிர்காலத்தில் அங்கே பச்சை என்பதையே பார்க்க முடியாது. விவசாயமும் செய்ய முடியாது. ஆனல் நமது மாநிலம் ஈக்வேடருக்கு மிக அருகில் உள்ள மாநிலம். டிராபிகல் கிளைமேட் நிலவுகிறது. பயிர்கள் ஆண்டுமுழுதும் வளர முடியும். இங்கே பச்சையாக இல்லாத நாள் ஒன்றுகூட இல்லை. அங்கு autumn இலையுதிர் காலம் என்று இருக்கிறது. ஆனல் நமக்கு இலையுதிர்காலம் இல்லை. எப்பொழுதும் வளர்கிறது. தஞ்சா வூரிலே 13 இலட்சம் ஏக்கரிலே நெல் விளைவிக்கிறோம்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இலையுதிர் காலம் என்று ஒன்று இல்லை என்று கூறுகிறார்கள். இயற்கைக்குப் புறம்பான ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். இலை உதிரும், பின்னால் துளிர்க்கும என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்கின்றார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இலையுதிர்காலம் என்பது Qutumn அப்பொழுது மேலை நாடுகளில் போய்ப்பார்த்தால்—செப்டம்பர் மாதத்தில் மரங்கள் எல்லாம் இலைகளை உதிர்த்துவிட்டு ஹைபர்நேடிங்—தூங்கிக் கொண் டிருக்கும். அப்பொழுது எதுவும் விளையாது. விண்டர்—ஏப்ரல் வந்தால் வளரும். அப்படிப்பட்ட நிலைமை இங்கு கிடையாது. இங்கு ஒரு வேளை பழைய பொருளாதாரத்தைப் படித்திருப்பீர்கள். அறிஞர் அண்ணா அவர்கள் எம்.ஏ. படித்திருந்தார்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, இங்கே இலையுதிர்காலம் என்ற பருவம் இருக்கிறதா இல்லையா, மரங்கள் இலைகளை உதிர்க்கின்றனவா இல்லையா என்று நண்பர் திரு. பலராமன் அவர்கள் சொன்னார்கள். இலையுதிர்காலம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அந்த நாட்டிற்கும் இந்த நாட்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது என்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மேல்நாடுகளிலே பார்த்தால், இலையுதிர்காலம் இருக்கும். இலை உதிர்ந்து மொட்டை மரமாக தூங்கிக்கொண்டு உயிர் இருக்கிறதா அல்லது இல்லையா என்று எண்ணும்படி இருக்கும். அப்படி இலை உதிர்ந்து போவது இங்கே கிடையாது. இங்கே பச்சையே இல்லாத அளவுக்கு எல்லா இலைகளும் உதிர்ந்துவிடுவது கிடையாது. ஆகவே 1967 லே அறிஞர் அண்ணா அவர்கள் புதிதாக ஒரு பொருளாதாரத் தத்துவத்தைக் காட்டினார்கள். தமிழ் நாட்டிலே உள்ள விவசாயிகள் டிராபிகல் க்ளைமேட் கோடை—அதிகமாக உள்ள பகுதிகளில் உள்ளவர்கள். அவர்களுக்கு இந்த சீசனல் ஆப்பரேஷன் என்பது இல்லை. ரிசர்வ் பாங்க் சட்டத்தில்கூட 'அக்ரிகல்சர்' என்பதற்கு 'சீசனல் ஆப்பரேஷன்' என்று தவறாக எழுதி யிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிலே அப்படி அல்ல. இங்கே ஒரு போகம் அல்ல, இரண்டு போகம் அல்ல. மூன்று போகம் அல்ல, நான்கு போகம்கூட விளைவிக்க முடியும். ஜனவரி மாதத்திலேயிருந்து ஜனவரி மாதம் வரையில், பொங்கலிலிருந்து பொங்கல்வரை விளைவிக்க முடியும். ஆகையினால் விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கிற மக்கள் ஒரு காலத்தில் மட்டும் வேலை

செய்துவிட்டு, மற்ற காலத்தில் சோம்பேறியாக இருக்கிறார்கள் என்பது தமிழ் நாட்டிற்குப் பொருந்தாது. மேலும் ஆண்டில் 360 நாள் வெயில் காய்கின்ற காரணத்தால், அதிக விளைச்சல் தமிழ் நாட்டிலே செய்ய முடியும். ஆகவே விவசாயம் என்பது மிக முக்கியமானது. மேல் நாடுகளில் Indust.ialse of Perish தொழில் நடத்த வேண்டும், இல்லாவிட்டால் பாழாக வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அப்படி இங்கே கிடையாது. இங்கு விவசாயம் என்பது அதிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு லாபத்தைக் கொடுக்கக்கூடியது என்ற நியூ எக்னமிக்ஸ், புது பொருளாதாரத்தைக் கடைப்பிடித்துவருகிறோம் என்பது போகப் போகத் தெரியும். இப்பொழுது பெரிதாகத் தெரியவில்லை. அந்தப் பெரிய மாறுதல் ஏற்படுத்தி, வெள்ளைக்காரர்கள் சொன்ன எக்கனமிக்ஸ் டெக்ஸ்ட் புக்ஸ் எல்லாம் 'ராங்' என்று சொல்லக்கூடிய பெருமை, அறிஞர் அண்ணா அவர்களுக்கு இருந்தது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, போகப் போகத் தெரியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி சூட்சுமமாகச் சொல்லி விட்டு அதைச் சொல்லாமலிருப்பது எங்களுக்கெல்லாம் ஏதோ ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. அதை விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் ஒன்று சொன்னார்கள். நெல்லுக்குத்தான் விலை குறைவாக இருக்கிறதே தவிர, மற்றப் பொருள்களுக்கெல்லாம் விலை ஏறிவிட்டது என்றார்கள். அந்த விலையேற்றம் என்பது நம்முடைய கையில் இல்லாத ஒன்று. விலையேற்றப் பொருளாதாரத்தைப்பற்றி கிரௌத்தர் என்பவர் எழுதியிருக்கிறார். விலை எப்படி ஏறுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். யானை விற்ற விலை குதிரை விற்கிறது. குதிரை விற்ற விலை ஆடு விற்கிறது. ஆடு விற்ற விலை கோழி விற்கிறது. கோழி விற்ற விலை ஒரு கோழிமுட்டை விற்கிறது என்றெல்லாம் சொல்ல முடியும். இப்படி விலை ஏறிக்கொண்டே போவதற்கு என்ன காரணம் என்று தெரிந்துகொள்ள வேண்டும். X is equal to 'M' என்று வைத்துக் கொண்டால், இங்கே Mon y சப்ளையை எடுத்துக்கொள்ள வேண்டும். எவ்வளவு தூரம் பண உற்பத்தியைப் பெருக்குகிறோமோ, எவ்வளவு தூரம் பணத்தை நோட்டாக அச்சடித்து வெளியிடுகிறோமோ அந்த

(பிற்பகல் 6-40)

அளவிற்கு விலை ஏறத்தான் செய்யும் Money mulitiplied by Velocity or Monep divided by P—that is, Production—MV / P is equal to விலைவாசி. அதுதான். விலைவாசி. பண உற்பத்தி எவ்வளவு ஆகிறது என்பதைப் பத்திரிகையில் படித்துக்கொண்டு வருகின்றீர்கள். ஒரு வாரத்திற்கு முன்புதான் ரூபாய் 100 கோடிக்கு நோட்டை அச்சடித்து வெளியிட்டார்கள்.

அதற்கு முந்தைய வாரத்தில் ரூபாய் 100 கோடிக்கு அச்சடித்து வெளியிட்டார்கள். அதற்கு முந்தைய வாரத்தில் ரூபாய் 200 கோடிக்கு அச்சடித்து வெளியிட்டிருக்கின்றார்கள். அதை நீங்கள் தாக்குப் பிடிக்க வேண்டுமானால் மணி டிவைடெட் பை ப்ரொடக்ஷன் (Money divided by Production) என்று உற்பத்தியாக வேண்டும். பொருள்கள் உற்பத்தி இரண்டு சதவிகிதம் என்றும் பணத்தின் உற்பத்தி, அச்சடித்து வெளியிடுவது 20 சதவிகிதம் என்றும் இருந்தால், விலை ஏறத்தான் செய்யும். ஆகவே அது நம்முடைய கட்டுப்பாட்டில் கொஞ்சம்கூட இல்லாத ஒன்று. ஆகவேதான் அந்த பார்முலாவைச் சொன்னேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "பணத்தை அதிகமாக அச்சடித்து வெளியிடுகின்றார்கள். அதைக் கட்டுப்படுத்த நம்மிடம் ஆற்றல் இல்லை. எனவேதான் விலை உயர்ந்துகொண்டே போகிறது" என்று குறிப்பிட்டார்கள். நாம் உணவு தானியத்தைத் தான் தயாரிக்கிறோம். கேஷ் கிராப் என்று சொல்லப்படும் கமெர்ஷியல் கிராப்ஸைப் பயிர் செய்யும் ஆற்றல் நம்மிடம் இல்லை அங்கேதான் இருக்கின்றது என்கிறார்கள். மற்ற பொருள்களுக்கெல்லாம் விலை ஏறிக்கொண்டே போகிறது, ஆனால் நெல் விலையை மட்டும் கட்டுப்படுத்தும் நிலை இருக்கின்றது. நெல் பயிரிட்டால், குறைவான வருமானம்தான் கிடைக்கிறது. இந்த அரசாங்கம் தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு நெல் உற்பத்தியையும் விலையையும்தான் கட்டுப்படுத்த வேண்டுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, பொதுவாக விலைவாசி என்பது வேறு, விலை என்பது வேறு. Level of prices என்பது வேறு, prices of articles என்பது வேறு. இதையெல்லாம் மேலும் விளக்கிக் கொண்டே போனால், பெரிய பொருளாதாரத் தத்துவத்திற்குப் போக வேண்டியிருக்கும்.

அடுத்து திரு. வெங்கா அவர்கள் இன்ஷ்யூரன்ஸ்பற்றிக் குறிப்பிட்டார்கள். க்ராப் இன்ஷ்யூரன்ஸ்பற்றி ஒரு சட்ட முன் வடிவை மத்திய சர்க்கார் நமக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள். அவர்கள் கொடுத்துள்ள பிரிமியம் கட்டணம் எது வேண்டாமோ அதுவாக அமைந்திருக்கின்றது. ஒரு ஆயிரத்திற்கு வருஷத்திற்கு ரூபாய் 50 கட்ட வேண்டும் என்று சட்டத்தில், சட்ட முன்வடிவில் இருப்பதைப் பார்த்து நாம் அதை மத்திய சர்க்காருக்கே திருப்பி அனுப்பியிருக்கிறோம். இவ்வளவு குறைந்த கட்டணத்தில் இந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை நடத்த முடியாது. நஷ்டம் என்று வந்தால், அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்ஷ்யூரன்ஸ் என்பது மத்திய சர்க்கா

ாிடம்தானே இருக்கின்றது? கூட்டுறவுத் துறையில்கூட இன்ஷூரன்ஸ் நிறுவனம் ஒன்று இருந்தது. அதையும் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். எடுத்துக்கொள்ளும்போது ரொக்கமாக ரூபாய் 25 லட்சம் இருந்தது. ஆனல் ரூபாய் 15 லட்சம் கொடுத்துவிட்டு, அதை அப்படியே எடுத்துக்கொண்டு விட்டார்கள். நாங்கள் நட்டம் வரும் என்று சொன்னபோது, 'எப்படி நட்டம் வரும்' என்று திருப்பிக் கேட்டதற்கு நாங்கள் விவரமாக எழுதினேம். நீங்கள் ஐந்து சதவிகிதம் ப்ரீமியம் என்று சொன்னல், ஏதோ தீய்ந்து போவது இருபது வருஷத்திற்கு ஒரு முறைதான் என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். பஞ்சம் என்பது 'பாஞ்ச்' அதாவது ஐந்து, ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை நிச்சயமாக வருகின்றது. இப்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வருவதால் தான் அதற்குப் பஞ்சம் என்ற பெயரே வந்தது. ஆக ஒரு ஆயிரத்திற்கு இன்ஷூரன்ஸ் செய்துவிட்டு இருநூறு ரூபாய் கொடுப்பதற்கு எந்த விவசாயி முன் வருவார் என்று கேட்டோம். அவர்கள் நம்முடைய நிலையை 'ஏற்றுக் கொள்ள மாட்டோம்' என்று சொல்லுகின்றார்கள். பிறகு அவர்கள் நிச்சயமாக விளையும் என்ற பகுதியில் அதைக் கொண்டுவரக்கூடாதா என்று கேட்டார்கள். நிச்சயமாக விளையும் என்ற பகுதியில் அவர்கள் ஏன் பிரீமியம் கட்ட வேண்டும்? அவர்கள் கட்டவே மாட்டார்கள். ஐந்து சதவிகிதம் கூடக் கட்டமாட்டார்கள். நிச்சயமாக விளையும்போது ஏன் ஒரு ஆயிரத்திற்கு ரூபாய் 50 இன்னும் கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்பார்கள், ஆகவே யாரும் 20 சதவிகிதம் கொடுக்க முன் வர மாட்டார்கள் என்று சொன்னேம். அதை திரு. வெங்கா அவர்கள் படித்துப் பார்த்துவிட்டு, நடைமுறையில் சாத்தியக் கூறு இருக்கும் என்றல், அதைக் கொண்டுவரலாம். பிறகு அவர்கள் பல்வேறு காரியங்களேயும்பற்றிக் குறிப்பிட்டார்கள். கிரெடிட் ஸ்டெபிலிடி பற்றி, கிணற்றுக் கடன்கள்பற்றியெல்லாம் குறிப்பிட்டு, பெய்ல்டு வெல் ஸப்ஸிடியைப்பற்றிச் சொல்லும்போது, தவணைகளைத் தள்ளிப்போட வேண்டும் என்றும் பிறகு உலக வங்கியைப்பற்றியும் சொன்னர்கள். பெயில்டு வெல்ஸ் ஸப்ஸிடி அதாவது இன்ஃபர்க்சுவஸ் வெல் சப்சிடி என்னும்போது, கிணற்றைத் தோண்டி அதிலே தண்ணீர் கிடைக்காது போய்விட்டால், கடனைத் தள்ளிவிட வேண்டுமென்று சொன்னர்கள். இதைப்பற்றியெல்லாம் வேண்டிய ப்ரொவிஷன்ஸ் இருக்கின்றன. அடுத்து மாடு வாங்க, புல்லக் லோன், கடன் கொடுக்கக்கூடாதா என்று கேட்டார்கள். மாட்டுக்குக் கடன் இல்லை. மாடு வாங்கக் கடன். மாடு வாங்கக் கடன் கொடுப்பது என்றல், அதிலே ஒரு பகுதி ஃபேக்ட், மற்றெரு பகுதி பிக்ஷன் என்று சொல்ல வேண்டும். பேக்ட் வேறு ஃபிக்ஷன் வேறு. **

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டிய அந்த உபமானம் இந்தச் சபையின் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து அகற்றப்படுகிறது. அவை பத்திரிகைகளிலும் வர வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ** பிறகு அவர்கள் அக்ரிகல்சுரல் பாலிடெக்னிக்பற்றிச் சொன்னார்கள். இப்போது விவசாயக் கல்லூரிகள் தான் இருக்கின்றன, அதுவும் வேண்டுமென்று சொன்னார்கள். இதைப்பற்றி உலக வங்கிக்கு எழுதியிருக்கிறோம். முதலில் ஆறு கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் தீட்டியபோது, இந்தத் தொகையைப் போட்டால் இது மிகச் சிறிய திட்ட மாகத் தெரியும் என்று, பிறகு 25 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டு அனுப்பியிருக்கிறோம். மத்திய சர்க்காரும் இதற்கு முழு ஆதரவு தெரிவித் திருக்கின்றார்கள். காரணம் அவர்களுக்கு பாரின் எக்ஸ்சேஞ்சு கிடைக் கிறது. அவர்களும் இதற்கு ஆதரவாக இருக்கின்றார்கள். அடுத்து, மாடு, கோழி, கோழி உரம் பற்றிச் சொன்னார்கள். கோழி உரத்தில் நைட்ரஜன் இல்லையென்றே சொல்லலாம், 1.64 சதவிகிதம்தான் இருக்கின்றது. அது போதாது. அடுத்து, அறிஞர் அண்ணா விதைப் பண்ணைபற்றிச் சொன்னார்கள். இப்போது 800 க்கும் மேற்பட்ட வித்துக்கள் இருக்கின்றன. இவை, இன்னும் உரம், பூச்சிக்கொல்லி மருந்து முறையாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்து பரிசீலனையில் இருக்கின்றது.

(பிற்பகல் 7-20)

யூரியா வினியோகம்பற்றிச் சொன்னார்கள். யூரியாவில் நல்ல சத்து இருக் கின்றது என்பது உண்மைதான். தேவையான ஃபெர்டிலைஸர்தான். நமக்கு அது இரண்டு வகையில் கிடைக்கிறது. ஒன்று இந்தியாவில் உற்பத்தியாவது. அதை நாம் 'நான்-பூல் ஃபெர்டிலைஸெர்ஸ்' என்று சொல்லுகிறோம். வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதை 'பூல் ஃபொர்ட்டிலைஸெர்ஸ்' என்று சொல்லுவார்கள். விநியோகம்பற்றிக் கேட்டதனால் சொல்கிறேன். உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உரம், அதாவது நான்பூல் பர்டிலைசர், பெருமளவிற்குத் தனியார் துறை மூலமாக, தனி வியாபாரிகள் மூலமாக விற்கப்படுகிறது. மத்திய அரசு வேண்டுமென்றே வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் பார்த்தேன். பல முறை எழுதியிருக் கிறேன். மாநில அரசுக்கு இந்த அதிகாரம் கொடுத்தாலொழிய, வழி கிடை யாது என்று தெரிவித்திருக்கிறோம். இதைப்பற்றி திரு. ஷா நவாஸ் கான் பார்லிமெண்டில் சொல்லியிருக்கிறார். இதை நம் கையில் கொடுத்தால் நாம் இன்னும் கட்டுப்பாடு செய்ய முடியும். இரண்டு வழிகளில் இந்த உரம் வெளியே

* Expunged as ordered by the chair.

வருகிறது. Private dealers of the manufacturers அதாவது தனியாக இருக்கிற வியாபாரிகள், அதே போல அரசு கையில் கொடுத்து, கூட்டுறவுத் துறை மூலமாக, இப்படி இரண்டு வழிகளில் உரம் விநியோகம் செய்யப்படுகிறது. எப்படி விநியோகம் செய்யப்பட்டாலும்—தனியார் துறை மூலமாக விநியோகம் செய்யப்பட்டாலும், கூட்டுறவுத் துறை மூலமாக விநியோகம் செய்யப்பட்டாலும்,—8 பேர்களை வைத்துக்கொண்டு 9,465 டிப்போக்களைக் கண்காணிக்க முடியாது. வியாபாரிகள் என்று சொன்ன உடனே அவர்கள் லாபம் கிடைப்பதாக இருந்தால் தான் செய்வார்கள் அதிலே கிடைக்கக் கூடிய லாபத்தைத் தான் பார்ப்பார்கள். * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். பத்திரிகைகளில் போடவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: * * *

பிளாக் மார்க்கெட், அதாவது கள்ளச் சந்தையில் 55 ரூபாய்க்கு விற்க வேண்டிய பொருளை 150, 200 ரூபாய்க்கு விற்பார்களானல், அது நிச்சயமாக பகற்கொள்ளைக்குச் சமானமாக இருக்குமேயொழிய நியாயத்தின் அடிப்படையில் விற்க முடியாது. கள்ளச் சந்தையில் விற்கிற வியாபாரிகளைத் தான் நான் சொல்கிறேன். தவறு நடக்கிற காரணத்தினல் அதிகமாகக் கண்காணிப்பு வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்கிறேன். கள்ளச் சந்தையை ஒழிப்பது என்பதில் நான் முடிவோடு இருக்கிறேன். இதற்காக எத்தனை கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படவேண்டி வந்தாலும், எத்தனை முறை பார்க்க வேண்டி வந்தாலும், எத்தனை முறை raid பண்ணவேண்டி வந்தாலும், பரவாயில்லை. கள்ளச் சந்தை இருக்கிற வரையில் நமது விவசாயத்தைப் பார்க்க முடியாது. இந்த உரத்தை வேறு மாநிலங்களுக்கு, ஆந்திராவிற்குக் கடத்திக்கொண்டு போகும்போது, பிடித்திருக்கிறோம். அங்கே போன உரம் இங்கே திரும்பி வராது. கண்காணிப்பு மிக அதிகமாகத் தேவைப்படுகிறது. நான் இதில் முடிவாக இருக்கிறேன். என்னல் இரசாயன உரத்தில் கள்ளச் சந்தையை நிறுத்த முடியவில்லை யென்றல், நான் இந்தப் பொறுப்பிற்கு அருகதையற்றவன் என்று என்னை நானே குற்றம் சாட்டிக்கொள்வேன்.

Thiru A. R. DAMODARAN: Sir, I may suggest that instead of the Hon. Minister worrying himself about appointing more Inspectors, this commodity also may be handed over to the Civil Supplies Inspectorate where they have got thousands of people to look after the business. It may not be necessary for the Hon. Minister to quit his post if he is not able to get rid of this blackmarketing.

*** Expunged as ordered by the Chair.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தனிப்பட்ட வியாபாரிகள் தான் இந்த இரசாயன உரங்களைக் கள்ளச் சந்தையில் விற்கிறார்கள் என்றார்கள். கூட்டுறவுச் சங்கங்களும் விற்கின்றன என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்து விற்கின்றன என்று பரவலாகப் பேசப்படுகிறதே, இதைப்பற்றி அமைச்சரவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தனியார் துறையில் இப்படிச் செய்ய முடியும். கூட்டுறவுச் சங்கத் தலைவர்களும் இப்படிச் செய்ய முடியும். யாராவது 55 ரூபாய்க்கு விற்கவேண்டிய யூரியாவை 150, 170 ரூபாய்க்கு விற்றார்களென்றால், அரசு என்று இருந்து அதைக் கண்காணிக்க வில்லையென்றால் அரசு தன் கடமையிலிருந்து, விவசாயத் துறை தன் கடமையிலிருந்து தவறியதாக நிச்சயமாக நான் கருதுவேன் என்பதை மிகத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். ஆகையினால் தான் இந்தக் காரியத்தில் உயிரைக் கொடுத்தாவது கள்ளச் சந்தையை நிறுத்தியாகவேண்டுமென்ற முடிவில் இருக்கிறேன். எத்தனை நாட்கள் பார்த்துக்கொண்டிருப்பது? கிராமங்களில் போய்ப் பாருங்கள். நாம் வேறு, விவசாயிகள் வேறா? என்னுடைய சொந்தக்காரர்களெல்லாம் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் இருக்கிற விவசாயிகள் வேறு ரத்தத்தில் பிறந்தவர்களா? அவர்கள் நம் ரத்தத்தோடு ரத்தம் கலந்தவர்களல்லவா? அவர்கள் வஞ்சிக்கப் படுவதைப் பார்த்துக்கொண்டிருப்பது என்றால், நம் பொறுப்புக்கு என்ன அர்த்தம்? நான் ரொம்பவும் முடிவாக இருக்கிறேன். தீவிரமாக, இரவு பகல் என்று பாராமல் கள்ளச் சந்தையை நிறுத்தியாகவேண்டுமென்றிருக்கிறேன். உரம் விவசாயிகளுக்குத் தாராளமாகக் கிடைக்க நாம் வழி வகைகளைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

நண்பர் புலவர் அறிவுடை நம்பி நல்ல கருத்து ஒன்றைச் சொன்னார்கள். பல டி. ஏ. ஓக்கள் இருக்கிறார்கள். பருத்திக்கென்று தனியாக இருக்கிறார்கள். கரும்புக்கென்று தனியாக இருக்கிறார்கள். எண்ணெய்வித்துக்கென்று தனியாக இருக்கிறார்கள். முந்திரிக் கொட்டைக் கென்று தனியாக இருக்கிறார்கள். பருப்புக்கென்று தனியாக இருக்கிறார்கள். இப்படித் தனித்தனியாக இருக்கிறார்கள். இப்படித் தனித்தனியாக இருக்கத் தேவையில்லை யென்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே கருத்தில் இருக்கிறார்கள். District Agricultural officer களுக்கு ஒரு சிறிய பகுதியைக் கொடுத்தால் கூட, அவர்கள் நன்றாகக் காரியங்களைச் செய்ய முடியும்.

1974 மார்ச் 29] [திரு. சி. பா. ஆதித்தனுர்]

விவசாயத் துறையைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். நம் மாநிலத்தில் விவசாயத்தில் உள்ள விஞ்ஞானிகள் நல்ல பேர் பெற்றவர்கள். டில்லிக்கு நான் போயிருந்தபோது பார்த்தேன். அங்கே விவசாய விஞ்ஞானிகளுக்குப் பரிசுகள் கொடுத்தார்கள். நேரு பிரைஸ், ரபி அகமத் கித்வாய் பிரைஸ் என்று கொடுத்தார்கள். அகில இந்தியாவிலிருந்து வந்திருந்தார்கள். நேரு பிரைஸ் வாங்கின விஞ்ஞானிகளில் பாதிப் பேர்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள். விவசாயத் துறையில் நன்கு தேர்ந்த அதிகாரிகள் இருக்கிறுர்கள். அவர்கள் ஈஜிப்டிற்குப் போய் வேலே பார்க்கிறுர்கள். ஈரானில் போய் வேலே பார்க்கிறுர்கள். இங்கே நாம் அவர்களுக்குப் புதிதாக இடம் கொடுக்க வேண்டும். Brain drain என்று சொல்கிறேம். திறமைசாலியான விஞ்ஞானிகள் வெளி நாடுகளுக்குப் போகவேண்டிய துர்ப்பாக்கியமான நிலேமை இருக்கிறது. அத்தகைய திறமைசாலிகளுக்கு இங்கே சின்ன இடமாகக் கொடுத்து, எல்லாப் பொருள்களையும் அவர்களே கண்காணிப்பது என்ற இந்த திட்டம் ஆய்வில் இருக்கிறது என்பதை நண்பர் புலவர் அறிவுடை நம்பி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The hon. Member Thiru Damodaran mentioned many things. He mentioned about the increase in rice production. He also mentioned about the necessity to increase the production of oilseeds such as groundnut and gingelly and also the production of pulses. Action is being taken on those lines. But the difficulty is this. By producing pulse as a pure crop, the cultivator is not getting enough income. Therefore, it must be cultivated as inter-crop or as third crop.

கிரீன் மென்யூர்பற்றிச் சொன்னுர்கள்.

(மாண்புமிகு மேலவைத் தலேவர் மணி அடித்தார்.)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: இன்னும் ஒரு 5 நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். கிரீன் மென்யூர்பற்றிச் சொன்னுர்கள். அதிலேயும் நைட்ரஜன் சத்து 1 சதவீதம் மட்டும் இருப்பதனுல் போதாது. நைட்ரஜன் சத்து 10 சதவீதத்திற்கு மேல் வேண்டும். அவர்கள் இன்னென்றைச் சொன்னுர்கள்

The extension workers should be mobile and they must be able to move from place to place quickly என்று சொன்னார்கள்.

He mentioned in English. Hence I reply in English. The Government have already passed orders that the Extension Workers who are in the grade of Deputy Agricultural Officers should be provided with loans for buying motor cycles at the rate of 200 motor cycles per year. Therefore, 200 Block Officers will be receiving their motor cycles this year and they will be mobile, as mentioned by the hon. Member Thiru Damodaran.

The idea is to propagate the new scientific discoveries or the new methods of cultivation, by going to a private member's field and making demonstration there, as has been the case so far, but this Government have decided and also announced that model farms will be developed in most of the Blocks and put in charge of District Agricultural Officers, so that the people in the neighbouring villages can go and study the modern methods in the model farm. I got this idea by reading an article written about Iran, where a ancient Ruler has propagated new agricultural ideas through model farms. That is being done here also.

Then, Thiu Damodaran mentioned about poultry development, about giving 500 birds to produce an income of Rs. 500 a month. It is very attractive. But my own calculation is: No poultry scheme can succeed unless we are able to produce the poultry feed at a price round about 60 paise per kilogram. If you produce poultry feed at 60 paise per kilogram then the cost of an egg will be round about 30 paise. If this is done, then we can sell eggs not only here, but we can enlarge the poultry scheme and we can produce more eggs and our eggs could be sold in other States also. In a sense, in the matter of eggs, we can conquer Bombay and many other cities in the country, provided the chicken feed is produced at a lower price. We are trying our best and our scientists are engaged in finding out how the maize could be replaced by what is known as Tippi—tapioca and many other things.

I have already told Thiru Damodaran that the Key Village Scheme is being revived.

Thiru S. Jayarama Reddiar, although he was very short, mentioned all the important points such as requirement of electricity, and about fertiliser,etc., I am sorry he is not here and

[திரு. சி. பா. ஆதித்தனர்]

he would be very much satisfied to know that active and energetic steps are being taken for the supply of nitrogenous fertilisers. He also mentioned about pesticides. My hon. Friend Thiru T. K. Ponnuvelu mentioned about the Marketing Board and certain other things. He also mentioned.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொல்லி விடுகிறேன்.

(பிற்பகல் 7-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். அதன் பிறகு உங்களுடைய சந்தேகத்தைக் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: திரு. பொன்னுவேலு அவர்கள் சொல்லுகின்றபோது, கிணறுகளுக்காகக் கொடுக்கப்படுகின்ற கடன், ஐ.எம். எஸ். கடன், இவைகளை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னர்கள். சில கடனை நாங்கள் நேரடியாகவும் சில கடனை வங்கிகள் மூலமாகவும் கொடுப்பது என்று விதி இருக்கிறது. அரசாங்கம் கொடுக்கின்ற கடனை கடன் என்று மக்கள் நினைப்பதில்லை. சென்ற வருஷம் கூட்டுறவுத் துறை அமைச்சர்களுடைய மாநாடு ஒன்று நடந்தது. பொற்கொல்லர்கள், கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படும் கடன் விஷயமாகப் பேசப்பட்டது. மேற்கு வங்காளம், அஸ்ஸாம் மாநிலங்களிலிருந்தும் அமைச்சர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் என்னைக் கேட்டார்கள், எப்படி உங்களுடைய தமிழ் நாட்டில், வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டுகிறார்கள் என்று. நான் திரும்ப உங்களுடைய மாநிலத்தில் எப்படி என்று கேட்டபோது அரசாங்கம் கொடுத்தாலும், பாங்குகள் கொடுத்தாலும், கூட்டுறவு வங்கிகள் கொடுத்தாலும், கடனை வாங்குகின்றவர்கள் இனும் என்று தான் கருதுகிறார்கள் என்று பதில் சொன்னர்கள். அங்கே எல்லாம் மிகவும் க்ஷீணித்த நிலைமை இருக்கிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பக்கர் அவர்கள், தஞ்சை மாவட்டத்தைப்பற்றிச் சொன்னர்கள். தஞ்சை மாவட்டத்தில் இரண்டு போகம் நெல்லும் ஒரு போகம் பருத்தியும் விளைவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். பருத்தி உற்பத்தியாகும் இடங்களில்தான் ஆலைகள் வைக்க வேண்டும் என்பது அவசியமில்லை. பஞ்சை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்வது அவ்வளவு கடினம் அல்ல, அதற்காகச் செலவும் அதிகமாகாது. மொத்தத்தில் பஞ்சின் விலைதான் அதிகமாகிக்

கொண்டு போகிறது. ஏற்றிச் செல்லும் செலவு குறைவு. ஆகவே பருத்தி விளைச்சல் இல்லாத இடங்களிலும் ஆலைகள் துவங்க முடியும். தஞ்சையில் குருவை—கருணை அல்லது கண்ணகி—125 நாட்களில் விளையும். அதற்குப் பிறகு ஒரு தாளடி போடலாம். அதன் பிறகு பஞ்சு பி.ஆர்.எஸ். 72. இந்த முறையில் பயிர் செய்தால், தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு நல்ல வருவாய் கிடைக்கும்.

நண்பர் திரு. பலராமன் எழுப்பிய கேள்விகளுக்கு ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டபடியால், திரும்பச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தொழிலும் விவசாயமும் ஒரு நாட்டுக்கு இரண்டு கண்கள் போன்றவை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல முறை சொல்லியிருக்கிறார்கள். தொழில்கள் வளர வேண்டும், அது ஒரு கண், அதே போல், விவசாயம் ஒரு கண், ஆக இரண்டு கண்களும் வளர வேண்டும் என்று. இந்த விவசாயத் துறை, அந்தக் கண் நல்ல பார்வையோடு இருக்க வேண்டும். இந்தச் சமுதாயத்திற்குக் கண் பார்வை வேண்டும். விவசாயம் என்ற கண்ணைப் பாது காப்பதற்கு நான் எப்பொழுதும் தயங்காமல் கடமையைச் செய்வேன் என்று கூறி இந்த அறிக்கையை ஏற்றுகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன, அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 7-38)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

210. Notification issued with G.O. Ms. No. 7073, Revenue, dated the 26th November 1973 in regard to an amendment to Revenue Department Notification II-1 No. 3939 of 1969 published at pages 1-2 of Part II - Section 1 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 19th December 1969 as subsequently amended. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Right Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

211. Notification issued with G.O. Ms. No. 6798, Revenue, dated the 12th November 1973 in regard to appointment of the Director of Settlements, Nagercoil to carry out the functions and duties assigned to the Director of Settlements, and delegation of powers exercisable by the Settlement Officers under the Tamil Nadu (Tansferred Territory) Ryotwari Settlement Act, 1964. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Tamil Nadu Act 30 of 1964).]

212. Notification issued with G.O. Ms. No. 2232, Agriculture, dated the 3rd November 1973, in regard to establishment of markets at Tiruvadanai and Rajasingamangalam in Ramanathapuram district to provide facilities for the pu rchase an dsale of groundnut, chillies, paddy and cashewnut. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produc Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

213. Notification issued with Roc. No. 89877/73–F2, dated the 18th January 1974, in regard to passing of no confidence motion against Thiru V.V. Venkatachalam, Chairman, Gobichettipalayam Panchayat Union Council and removal from the office of the Chairman of the Gobichettipalayam Panchayat Union Council. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

214. Notification issued with G.O. Ms. No. 438, Rural Development and Local Administration, dated the 25th February 1974 in regard to amendment relating to redivision of wards and reservation of seats published at page 10 of part II- Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 19th January 1974. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

215. Notification issued with G.O. Ms. No. 1801, Rural Development and Local Administration, dated the 3rd September 1973 in regard to amendment to the rules relating to qualifications of officers and servants of Municipal Councils. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

216. Notification issued with G.O. Ms. No. 223, Rural Development and Local Administratation, dated the 6th February 1974 in regard to division of Tiruvarur Municipality into twenty-four wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Tiruvarur Municipal Council. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

B. Reports, Notifications and Other Papers.

91. Review on Labour in Tamil Nadu 1973–74. (English and Tamil).

92. Speech of Hon. Thiru K. Rajaram, Minister for Labour on Demand No. 29-Labour including Factories. (English and Tamil).

93. Speech of Hon. Thiru K. Rajaram, Minister for Labour on Demand No. 32-Housing in Tamil Nadu, 1973-74. (English and Tamil).

94. Slum Clearance in Tamil Nadu, 1973–74. (English and Tamil).

95. Pamphlet on "தமிழ் நாட்டில் வீட்டு வசதி".

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1974 மார்ச் 29]

இணைப்பு

284 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1974-75 ஆம் ஆண்டு வேளாண்மைத்துறை பற்றிய கொள்கை விளக்கம்.

மேலவைத் தலைவர் அவர்களே,

1974-75 ஆம் ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு வேளாண்மை உற்பத்தித் திட்டங்கள் குறித்த சுருக்க ஆய்வுரையை நான் உங்கள்முன் வைக்கிறேன்.

பருவ நிலைமைகள்.

1973 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்திற்கும் மே மாதத்திற்கும் இடைப்பட்ட கோடை மாதங்களில், இம் மாநிலத்தின் பெரும் பாலான இடங்களில் பொதுவாக வறட்சி நிலவியது. இயல்பாகவே 137.8 மில்லி மீட்டர் அளவுக்கு மழை இருக்க வேண்டும். ஆனால், இக்கோடைப் பருவகாலத்தில் பதிவான மழையோ 78.0 மில்லி மீட்டர்தான். ஏப்ரல்-மே மாதங்களில் வான் பொய்த்ததன் காரணமாக, இம் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில், குறிப்பாக, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் பாசனம் பெறும் கோடைக்காலப் பயிர்கள் தொடர்பாக வேளாண்மைப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

தென்மேற்குப் பருவமழை ஏறத்தாழ உரியகாலத்தில் அதாவது மே மாத இறுதியில், மேற்குக் கரையோரமாகத் தொடங்கியது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரளவுக்கு நல்ல மழை பெய்தது. இவ்விடங்களிலுள்ள புன்செய் நிலங்களில் பொருத்தமான பருவத்தில் விதைப்புப் பணியை மேற்கொள்வதற்கு இம்மழை பெரிதும் துணைபுரிந்தது. மழை பருவத்தில் இம் மாவட்டங்களில்

இயல்பாகவும், எல்லா இடங்களிலும் ஓரளவு சீராகவும் மழை பெய்தது. ஏனைய மாவட்டங்களில், இயல்பான அளவுக்கும் குறைவாகவே மழை பெய்தது. மாநிலம் முழுவதையும் மொத்த மாகக் கணக்கிற்கொண்டால் தென்மேற்கு மழை பருவகாலத்தில் இயல்பாகப் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவு 307.3 மில்லி மீட்டராகும்; ஆனால், பெய்ததோ 299.08 மில்லி மீட்டர்தான்.

வடகிழக்குப் பருவத் தொடக்கத்தில் பெய்த மழை ஊக்க மளிப்பதாய் இருந்தது. ஆயினும், எதிர்பார்த்த அளவுக்குத் தொடர்ந்து மழை பெய்யவில்லை. அதன் காரணமாகவே ஏரி களிலும், நீர்த்தேக்கங்களிலும் நீர் நிரம்பவில்லை. 1973-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில், மழைபருவத்தின் கடைசி நிலையில், மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் கடும் மழை பெய்தது. மொத்தத்தில், பருவ நிலைகளைச் சுருங்கக்கூறின், மானவாரிப் பயிர் களான சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் ஆகியவற்றின் உற்பத்தி இயல்பான அளவுக்கு இருந்தது. நெல், கரும்பு, வாழை, பருத்தி, காய்கறி முதலியவற்றின் உற்பத்தி ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டது. வடகிழக்குப் பருவகாலத்தின் பின்பகுதியில், குறிப்பாக இம் மாநிலத்தின் வட பகுதிகளில் மழை யில்லை. எனவே, இப்பருவத்தின் பின்பகுதியில் கோடைப் பயிர்த் திட்டத்திற்கு நீர் கிடைப்பது பாதிக்கப்படலாம்.

மொத்தத்தில், இவ்வாண்டில் பெருமளவு பூச்சிநோயோ, பயிர் நோயோ காணப்படவில்லை. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் 80,000 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலைப் பயிரைப் பாதிக்கும் செந்தலைக் கம்பளிப் புழு, 'சுருள்பூச்சி' ஆகியவற்றை ஒழிப்பதற்கு பெருமளவில் பூச்சிகொல்லி மருந்து தெளிக்கப் பட்டது. இம் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில், நெற்பயிரை படைப் புழுக்களும், குருத்துப் புழுக்களும், வெண்டை, தக்காளி, கத்திரி ஆகிய செடிவகைகளை வண்டும், பருத்தியை உருண்டைப் புழுக்களும் தாக்கியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. உரிய நேரத்தில் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கப்பட்டு பயிர் நோய்கள் செவ்விய முறையில் கட்டுப்படுத்தப்பட்டன.

1974 மார்ச் 29]

வேளாண்மை உற்பத்தி.

1973-74-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வேளாண்மை உற்பத்தியின் அளவுகளாவன :—

அரிசி	57 இலட்சம் டன்
சிறுதானியங்கள்	15 இலட்சம் டன்
பருப்பு வகைகள்	2.10 இலட்சம் டன்
கரும்பு வெல்லம்	11.00 இலட்சம் டன்
எண்ணெய் வித்துக்கள்	11.50 இலட்சம் டன்
பருத்திப் பஞ்சு	0.72 இலட்சம் டன்

1972-73-ஆம் ஆண்டின் வேளாண்மை உற்பத்தி 94.23 இலட்சம் மெட்ரிக் டன்களாக இருக்க 1973-74-ஆம் ஆண்டின் வேளாண்மை உற்பத்தியின் மொத்த அளவு 97.22 இலட்சம் மெட்ரிக் டன்களாக பெருகியது. எனவே 1972-73-ஆம் ஆண்டைவிட 1973-74-ஆம் ஆண்டில் 3.1 சத விதம் உற்பத்தியின் அளவு அதிகரித்துள்ளது. அதேபோல 1974-75-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் உற்பத்தியின் அளவுகளாவன :—

அரிசி	59 இலட்சம் டன்
சிறுதானியங்கள்	15.70 இலட்சம் டன்
பருப்பு வகைகள்	2.30 இலட்சம் டன்
வெல்லம்	11.30 இலட்சம் டன்
எண்ணெய் வித்துக்கள்	12.07 இலட்சம் டன்
பருத்திப் பஞ்சு	0.76 இலட்சம் டன்

வேளாண்மைத் துறையால் எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகள், அளிக்கப்பட்ட நல்ல வசதிகள், வழங்கப்பட்ட நல்ல விளைவைத் தரக்கூடிய விதைகள், ஏற்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள் ஆகியவற்றின் பலனாக நடப்பு ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கு 2,158 கிலோ கிராம் சராசரி விளைச்சல் ஏற்படும் என எதிர்

பார்க்கப்படுகிறது. 1974-75-ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கான விளைச்சலை 2,234 கிலோ கிராம் ஆக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

மிகு பயன்தரும் வகைகள் திட்டத்தின்கீழ் 1973-74-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சாதனைகளாவன :—

மிகு பயன்தரும் வகைகள் திட்டத்தின்கீழ் 22.26 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு—(55.00 இலட்சம் ஏக்கர்).

மிகுபயன்தரும் கலப்பு இன சிறுதானிய வகைகளின் சாகுபடி திட்டத்தின்கீழ்—4.20 இலட்சம் ஹெக்டேர் (10.37 இலட்சம் ஏக்கர்).

1974-75-ஆம் ஆண்டில் மிகுபயன்தரும் நெல் வகைகளின்கீழ் 22.00 இலட்சம் ஹெக்டேரில் நெல்லும், 5.50 இலட்சம் ஹெக்டேரில் (13.59 இலட்சம் ஏக்கர்) மிகுபயன்தரும் மற்றும் கலப்பினங்களின் கீழ் சிறுதானியங்களும் பயிரிடப்படுவதை உறுதி செய்யவும் கருதப்பட்டுள்ளது.

பருப்பு வகைகள்.

பருப்பு வகைகள் பயிரிடப்படும் நிலப் பரப்பிலும், விளைவிக்கப் படும் பருப்பு வகைகளின் அளவிலும், வியத்தகு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. 1970-71-ஆம் ஆண்டில் 12.15 இலட்சம் ஏக்கர் நிலத்தில் 1.33 இலட்சம் மெட்ரிக் டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்க, 1973-74-ஆம் ஆண்டில் 20.12 இலட்சம் ஏக்கரில் 2.10 இலட்சம் மெட்ரிக் டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1974-75-ஆம் ஆண்டுக் காலத்தில் 21.06 இலட்சம் ஏக்கரில் பருப்பு வகைகளை உற்பத்தி செய்யக் கருதப்பட்டுள்ளது. உற்பத்தியின் இலக்கு 2.30 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். உழவர்கள், முனைப்புத் திட்டங்களைப் பின்பற்றச் செய்வதற்காக, தரம் மிக்க பருப்பு வகைகளைக் கொண்ட 1,000 செயல் முறை விளக்கப் பண்ணைகளை அமைக்க கருதப்பட்டுள்ளது. தரமான

1974 மார்ச் 29]

முதல் நிலை, இரண்டாம் நிலை விதைகள் சீராகக் கிடைக்க வகை செய்யும் வகையில் 15,000 ஏக்கர் நிலங்களை விதைப் பண்ணைகளாகப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

புதிய துணிவான செயலாக, எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம், கொள்ளுக்குப் பதிலாக, உளுத்தம் பருப்பு, பச்சைப் பயறு போன்ற பருப்பு வகைகளைப் பயிரிட விரிவான சோதனைகள் நடத்தக் கருதப்பட்டுள்ளது. 1974-75-ஆம் ஆண்டுக் காலத்தில் இம் மாவட்டத்தில் பல்வேறு வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை மும்முரப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

புதிய வகைகளை அறிமுகப் படுத்துதல்.

1973-74-ஆம் ஆண்டில் வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வகைகளாவன :—

(M.C.U.) 8 பருத்தி

(PR) 202 கேழ்வரகு

(K.I.) தினை

5948 நெல்

7711 நெல்

(P S) 7 பச்சைப்பயறு

(T) 9 உளுந்து

1973-74-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய வகைகளாவன :—

(1) CO 36 நெல்.

(2) POL 2 வேர்க்கடலை.

(3) CO 8 லாப்லாப் (ஒருவகை அவரை).

(4) CO 2 சப்போட்டா.

(5) CO 2 பப்பாளி.

(6) CO 2 சாமை.

(7) CO 2 உளுந்து.

(8) CO 2 பச்சைப்பயறு.

(9) CO 37 நெல்.

(10) CO 4 தினை.

(11) 771 சோளம்.

(12) COH I சோளம்.

(13) COH 2 சோளம்.

(14) CO 2 காராமணி.

மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம்.

மேம்படுத்தப்பட்ட வேளாண்மை உத்திகளை ஒருங்கிணைந்த முறையிலும், மும்முரமாகவும் பயன்படுத்துவதன் வாயிலாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு இத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1960-ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது. இம் மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்கள், வேளாண்மைப் பருவகாலத்திற்கு முன்னர் பெருமளவில் மேற்கொள்ளப்படும் இயக்கங்கள், கூட்டங்கள், வானொலி உரைகள், சுவரொட்டிகள், விளம்பர அட்டைகள் செய்முறை ஆராய்ச்சி முதலியவைகளை வளர்ச்சிப் பணியாளர் களும், வேளாண்மைத் துறை வல்லுநர்களும் பயன்படுத்து கின்றனர். மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டங்களை மேற்கொண்டதன் விளைவாக கழிமுகப் பகுதிகளில் 92 சத விதம் மிகுபயன்தரும் வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. இம் மாவட் டத்தில் நெல் பயிரிடப்படும் 6.59 லட்சம் ஹெக்டேர் பரப்பில் (16.77 லட்சம் ஏக்கர்கள்), 6.14 லட்சம் ஹெக்டேர் பரப்பில் (15.36 லட்சம் ஏக்கர்கள்) மிகுபயன்தரும் வகைகள் பயிரிடப்பட் டுள்ளன. நைட்ரஜன் உரங்கள், பயிர் பாதுகாப்பு இரசாயனப் பொருட்களின் அளவு கணிசமாக பெருகியுள்ளது. உழவர்களின் மனப்போக்கில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. 1959–60-ல் 8.85 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்த இம் மாவட்டம், 1973–74-ல் 15.48 லட்சம் டன் அரிசியும், 1974–75-ல் 16.10 லட்சம் டன் அரிசியும் உற்பத்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் மாவட் டத்தில் ஹெக்டேர் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் சராசரி அளவு 1960–61-ல் 2,250 கிலோ கிராம் ஆகும். இது

1974 மார்ச் 29]

1972-73-ல் 3,011 கிலோ கிராமாக அந்த அளவு உயர்ந்தது. அதாவது உற்பத்தியின் சராசரி அளவு 33 சத விகிதம் அளவு பெருகியுள்ளது.

மும்முர வேளாண்மை பகுதித் திட்டம்.

இத் திட்டம் செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது 1974-75-ல் மேற்கொண்டும் ஒரு மாவட்டத்திற்கு நீட்டிக்கப்படும்.

அரசு விதைப் பண்ணைகள்.

பெரிய அளவில் இயங்கிவரும் அண்ணு பண்ணை உட்பட இம் மாநிலத்தில் தற்போது 55 அரசு விதைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மொத்தப் பரப்பளவு 5,135 ஏக்கராகும். இவற்றில் 3,897 ஏக்கர் பரப்பளவு சாகுபடி செய்யத் தக்கவையாகும்.

மாநில அரசு விதைப் பண்ணைகள் மொத்தமாகப் பார்க்குமிடத்து ஆதாயத்தில் செயல்பட்டு வருகின்றன.

விதைத் தரச் சான்றிதழ் அளிக்கும் வசதிகளும், விதைப் பரிசோதனை வசதிகளும் பெருக்கப்படும்—

1. கோயம்புத்தூரிலும், மதுரையிலும் உள்ள விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடங்களில் விதைகளின் தரம், தூய்மை பரிசோதிக்கப்பட்டு அவை வேளாண்மைக் கிடங்குகள் மூலம் வழங்கப்படுகின்றன.

2. 1973-74-ல் (1974 ஜனவரி வரையில்) பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 10,668 ஆகும்.

3. இம் மாநிலத்திலுள்ள விதைத் தரச் சான்றிதழ் நிறுவனத்தில் விதைத் தரச் சான்றிதழ் அதிகாரி ஒருவரும், அவருக்கு உதவியாக விதைத் தரச் சான்றிதழ் உதவி அதிகாரிகள் இருவரும் உள்ளனர். இவர்களைத் தவிர வேளாண்மைத் துணை

அதிகாரிகள் 24 பேரும், செய்முறை விளக்க மேஸ்திரிகள் அறுவரும் உள்ளனர். விதைத் தரச் சான்றிதழ் அதிகாரி, விதைத் தரச் சான்றிதழ் உதவி அதிகாரி ஒருவர் ஆகியோரது தலைமை அலுவலகம் திருச்சிராப்பள்ளியில் உள்ளது. விதைத் தரச் சான்றிதழ் உதவி அதிகாரி மற்றொருவரின் தலைமை அலுவலகம் கோயம்புத்தூரில் உள்ளது. விதைத் தரச் சான்றிதழ் அதிகாரி ஒருவர் வேளாண்மைத் துணை அதிகாரிகள் நால்வர் ஆகியோரைக் கூடுதலாக நியமிப்பதன் மூலமும் அவர்களுக்குத் தேவையான பணியாளர்களை நியமிப்பதன் மூலமும் 1974-75-ல் பணியாளர்களின் எண்ணிக்கையைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 1973–74-ல் (1974 ஜனவரி வரையில்) எய்தியுள்ள சாதனை விவரம் வருமாறு :—

	இலக்கு (எக்கரில்).	சான்றளிக்கப் பட்ட பகுதி (எக்கரில்). (31–1–74 வரை)	சான்றளிக்கப்பட்ட அளவு (மெட்ரிக் டன்னில்).	1974–75 இலக்கு. (எக்கர்).
	(1)	(2)	(3)	(4)
நெல்	6,000	6,323	912·928	8,500
பருத்தி	3,000	1,800	49·582	1,500
கலப்பின சிறு தானியங்கள்	3.000	1,455	685·210	1,800

அறிவியல் முறையில் வேளாண்மைத் தொழிலைச் செய்வதனால் ஏற்படக் கூடிய ஆதாயத்தைச் செய்முறையில் விளக்குவதற்காக இது வேளாண் தொழில்களை நிறுவவும் உதவும்—அரசுப் பண்ணைக் கழகம் ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கழகம் இம் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலுள்ள அடக்கப் பகுதிகளில் மாதிரிப் பண்ணைகளைத் தொடங்கும். வேளாண்மையை வணிக தொழில் ரீதியாக எப்படி நடத்துவது என்பது பற்றி அண்டைப் பகுதிகளில் உள்ள உழவர்களுக்கு விளக்கும் நிலையங்களாக இப் பண்ணைகள் அமையும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

உரங்கள்.

1973–74 ஆம் ஆண்டு சம்பா, 1974 ஆம் ஆண்டு குறுவை ஆகிய காலங்களுக்குத் தேவையான உரத்தின் அளவு, உரம் ஒதுக்கீடு, கிடைக்கப்பெற்ற உரத்தின் அளவு ஆகியவை பின்வருமாறு:—

	சம்பா, 1973–74.			குறுவை, 1974.		
	தொகுப்பின் கீழ் வரும் உரம்.	தொகுப்பின் கீழ் வராத உரம்.	மொத்தம்.	தொகுப்பின் கீழ் வரும் உரம்.	தொகுப்பின் கீழ் வராத உரம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
தேவை	1,06,000	69,000	1,75,000	52,000	78,000	1,30,000
ஒதுக்கீடு	48,837	51,782	1,00,619	52,000	78,000	1,30,000
கிடைக்கப் பெற்றவை.	35,401	51,782	87,186	..	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2. இந்திய அரசு, 1974, ஜனவரி 24, 25 தேதிகளில் கொச்சியில் நடத்திய 'உரங்கள் குறித்த மண்டல மாநாட்டில்' உணவு உற்பத்தி ஆணையாளரும், வேளாண்மைத் துறை இயக்குநரும் தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர். அம் மாநாட்டில், குறுவைப் பருவத்திற்கு (1974 பிப்ரவரி முதல் ஜூலை வரை) நான்கு தென் மாநிலங்களுக்கும் புதுச்சேரி யூனியன் நேரடி ஆட்சிப் பகுதிக்கும் தேவைப்படும் உரங்களின் அளவு பற்றி மதிப்பிடப்பட்டது.

3. நமது மாநிலத்தில் 1973 குறுவைப் பருவத்தில் (1973, பிப்ரவரி முதல் ஜூலை வரை) பயன்படுத்தப்பட்ட உரங்களின் அளவு பற்றிய விவரம் வருமாறு :—

நைட்ரஜன்	—	94,000 மெட்ரிக் டன்
பாஸ்பாரிக் அமிலம்	—	33,000 மெட்ரிக் டன்
பொட்டாஷ்	—	29,000 மெட்ரிக் டன்

1974 குறுவைப் பருவத்தில் (1974 பிப்ரவரி முதல் ஜூலை வரை) கீழ்க்கண்ட அளவுகளில் உரங்களை ஒதுக்கீடு செய்யுமாறு நாம் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளோம் :—

நைட்ரஜன்	—	130,000 மெட்ரிக் டன்
பாஸ்பாரிக் அமிலம்	—	40,000 மெட்ரிக் டன்
பொட்டாஷ்	—	40,000 மெட்ரிக் டன்

நமக்குத் தேவைப்படும் அளவுக்கு உரங்களை வழங்க இந்திய அரசு வேளாண்மை அமைச்சகத்தின் அதிகாரிகள் அம் மாநாட்டில் ஒப்புக்கொண்டனர்.

மாநாட்டில், பின்வருமாறு குறிப்பிடப்பட்டன :—

1. மாநிலத்தின் தேவைகளில் 60 சதவிதம் தொகுப்பின் கீழ் வராத இருப்புகளிலிருந்து வழங்கப்படும் (உள்நாட்டு உர உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்து வழங்குதல்).

2. மாநிலத்தின் தேவைகளில் 40 சதவிதம் தொகுப்பின் கீழ் வரும் இருப்புகளிலிருந்து வழங்கப்படும்.

1974 மார்ச் 29]

3. 1974 ஜூலைக்குப் பின்னர், உரங்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் எதுவும் இதுவரை செய்து கொள்ளப்படவில்லை.

4. உள்நாட்டு உர உற்பத்தியாளர்களுக்கு மின்சக்தி முதலியவற்றை வழங்குவதன் மூலம் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் அளிக்கவேண்டும்.

மாநாட்டில் முடிவு செய்துள்ளவாறு 1974 ஆம் ஆண்டு குறுவை பருவத்திற்கு வட்டார வாரியாக ஒதுக்கப்பட்ட உரங்களின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

	நைட்ராஜன்.	பாஸ்பாரிக் அமிலம் (மெட்ரிக டன்னில்).	பொட்டாஷ்.
தமிழ்நாடு	1,30,000	40,000	40,000
ஆந்திர பிரதேசம்	1,24,000	50,000	20,000
கருநாடகம்	59,000	20,000	20,000
கேரளம்	22,000	12,000	15,000

1974 ஆம் ஆண்டு குறுவைப் பருவ காலத்தில் உள்நாட்டு உரத் தயாரிப்பாளர்கள் தமிழ்நாட்டிற்கு கீழ்க்கண்டவாறு நைட்ராஜன் உரங்களை வழங்குவர்:—

	மெட்ரிக் டன்.
சென்னை உரத் தொழிற்சாலை, சென்னை.	32,912
"பாக்ட்", ஆலப்புழை.	7,555
"பாக்ட்", கொச்சி.	15,000
நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம்.	14,650
E.I.D. பாரி.	3,138
ஜூவாரி (Zuari), கோவா.	5,000
கோரமண்டல்.	280
மொத்தம்	78,535

1974, குறுவைப் பருவ காலத்திற்கு, தொகுப்பிலிருந்து உரங்களை இந்திய அரசு தற்போது வழங்கத் தொடங்கியுள்ளது.

நகர்ப்புற கம்போஸ்ட் உரம்.

பசுந்தழை உரம், கரிம உரம் ஆகியவற்றை நன்கு கிடைக்கச் செய்ய சிறப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும். அப்போதுதான், நைட்ரஜன் உரங்கள் பற்றாக்குறையைப் போக்க ஓரளவுக்கு இந்த நடவடிக்கைகள் உதவும். இரண்டு மாநகராட்சிகளில் ஒவ்வொன்றும் ரூபாய் 60 லட்சம் செலவில் இயந்திரங்களைக் கொண்டு கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் பிரிவுகள் இரண்டை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இம்முயற்சியில், முதல் நிலை, தேர்வு நிலை, சிறப்பு நிலை நகராட்சிகள் அக்கறை கொள்வதற்கான முயற்சிகளையும் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் மேற்கொண்டு வருகிறது. செலவில் 33-1/3 சதவிகிதம் என்ற விகிதத்தில் உதவித் தொகை வழங்க இந்திய அரசு முன்வந்துள்ளது. அதிகமான நிதியுதவி அளிக்குமாறு இந்திய அரசிடம் கேட்கப்பட்டு வருகிறது.

பயிர்ப் பாதுகாப்பு.

பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், அரசு வேளாண்மைக் கிடங்குகள் மூலமாக, குடியானவர்களுக்குப் பயிர் பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்கி வருகின்றது.

பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் என்டிரின், D.D.T B.H.C. முதலிய மலிவான மருந்துகள் கடும் பற்றாக்குறையாக உள்ளன. இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாகவும், உள்நாட்டில் தயாரிக்கப்படும் மருந்துகளில் கணிசமான பகுதி மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்கு அனுப்பப்படுவதினாலும் மேற்குறிப்பிட்ட மருந்துகளில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. முக்கியமான பயிர் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கு நிலையை ஈடுசெய்வதற்காக 100 டன் என்டிரின் வகை மருந்துகளையும், 3,000 டன் B.H.C. மருந்துகளையும் இறக்குமதி செய்யுமாறு மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. 1973-74-ல் (28—2—1974 வரையில்) 1,22,000 லிட்டர் என்டிரின் (20 சதவீதம் அடர்த்தியுள்ள குழம்பாக மாற்றக் கூடியது), 14,000 டன் B.H.C (10 சதவீதம்) வழங்கப்பட்டன.

1974 மார்ச் 29]

இத் துறையைச் சேர்ந்த பல்வேறு பயிர்ப் பாதுகாப்புத் தொகுப்பு ஏற்பாடுகளின்கீழ் வைத்து வரப்படுகிற விசைத் தெளிப்பான்கள் தூவு கருவிகளின் எண்ணிக்கை 10,000 என்றும் மதிப்பிடப்படுகிறது. ஐந்தாவது திட்டக் கால அளவில் மொத்தம் ரூ. 10 லட்சம் செலவில் 5,000 விசைத் தெளிப்பான்களை வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 1,000 தெளிப்பான்கள் 1974-75-ல் வாங்கப்படும்.

1974-75-ல் ரூ. 6.85 லட்சம் செலவில் காஞ்சிபுரம், கோயில்பட்டி, ஆடுதுறை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தற்போது செயல்பட்டு வரும் பயிர் பூச்சிக் கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடங்களை வலுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கொண்டும் அதிகமான அளவில் மருந்து மாதிரிகளை பரிசோதனை செய்ய இயலச் செய்வதே இதன் நோக்கமாகும்.

கரும்பு வளர்ச்சி.

கரும்புத் தொழிற்சாலைப் பகுதிகளில் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக 1974-75-ல் ரூ. 100 லட்சம் செலவிடத் திட்டமிடப் பட்டுள்ளது. இப் பணிக்காக இதுவரை எந்த ஆண்டிலும் செலவிடப்பட்ட தொகையைவிட இது அதிகமாகும்.

கரும்பு மேம்பாடு, கரும்பு ஆராய்ச்சி, கரும்பு தொழிற்சாலைப் பகுதிச் சாலைப் பணிகள் ஆகியவற்றிற்காக கரும்பு தீர்வை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் வருமாறு :—

ஆண்டு.	மேம்பாடு.	ஆராய்ச்சி.	சாலை மேம்பாடு. (ரூ. இலட்சத்தில்)	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1969–70	13·38	6·19	30·81	50·38
1970–71	16·48	6·18	33·26	55·92
1971–72	13·28	7·87	30·39	51·54
1972–73	18·01	8·18	50·20	76·39

முன்னரே அனுமதி வழங்கப்பட்டுள்ள 10 நிலையங்கள் தவிர, 1974-75-ல் விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் இரண்டினை மேற்கொண்டும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

